# S.Thomas' College, Bandarawela

தூய தோமாவின்

# கலையிதம்



## Hindu Cultural Society

## 25th Vani Vizha

## 2012

# Spirit of Thomians

ESTO PERPETUA

M.Subash 2008 A/L

G.Sajithkumar 2009 A/L

P.Pragash 2010 A/L

P.Sethupriyan 2011 A/L

J.Sajeewan 2012 A/L

S.Vinothan 2012 A/L

P.Ramyan 2013 A/L

N.Rushanthan 2013 A/L

# 25th Vani Vizha

# 2012

# Navanitham

## Hindu Cultural Society

## S. Thomas College,
## Bandarawela.

தூய தோமாவின் கல்லூரி
பண்டாரவளை.

# இந்து கலாசார மன்றம்

பெருமையுடன் வழங்கும்

## 25வது

# வாணி விழா - 2012

பிரதம விருந்தினர்

## எஸ். கோபிநாத்

சண்முகம் கோபிநாத் M.Ed,
(உதவி கல்விப் பணிப்பாளர்,
வலப்பனை கல்வி வலயம்)

திகதி
**25.10.2012**

நேரம்
**பி.ப 2.00 மணி**

இடம்
**கல்லூரி ஜீபல் ஞாபகார்த்த மண்டபம்**

# சமர்ப்பணம்

"தோமையர் தம் உள்ளத்தில்
உதித்ததிந்த நவமிதமே!

மானுடம் பாடுகின்ற - நல் சமய
நேயத்தை - நயமிகு வார்த்தைகளில்
வார்தெடுத்து - அச்சிட்டு
அன்னை ஆதி பராசக்திக்கு
உரித்தான இந்நாளில்
பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட
உள்ளத்தில் உவகையுடன்
உவந்தளிக்கின்றோம்."

நவராத்திரி நாயகியே!
நின் பாத கமலத்தில் இந்

## 'நவமிதம்'

சமர்ப்பணம்!

## ஒற்றுமை கீதம்...

இந்து என்று சொல்லு நீ இந்துவாக வாழு
நாமெல்லோரும் ஒன்று இங்கு வாழுவோம் ஒன்றாக...!

உலக அமைதி வரும் உள்ளமெல்லாம் தூய்மைபெறும்
அன்பே ஆளவந்தால் அழிவுக்கெல்லாம் முடிவு வரும்
பாரதம் பார்த்ததடி கற்பனைகள் இல்லையடி
அகிம்சை ஆளவந்தால் இம்சைக்கெல்லாம் முடிவு வரும்
(இந்து என்று சொல்லு)

புனிதத் தன்மை வரும் உற்சாகம் ஓடி வரும்
கர்ம யோகத்தினால் தூய்மை உன்னை தேடி வரும்
கண்ணன் சொன்னதடி கற்பனைகள் இல்லையடி
தர்மம் ஆளவந்தால் போருக்கெல்லாம் விடிவு வரும்
(இந்து என்று சொல்லு)

மாயை மறைந்துவிடும் மாயவனை நினைத்திருந்தால்
பாதை தெரிந்துவிடும் பரம்பொருளைப் பற்றுவதற்கு
புத்தனை நினைத்துவிடு புத்தனாக மாறிவிடு
துறவியர் சொன்னதடி கற்பனைகள் இல்லையடி
(இந்து என்று சொல்லு)

தொண்டு உள்ளம் வரும் தியாகமலர் பூத்திருக்கும்
வள்ளல் தன்மையினால் கர்ணனாக உயர்ந்திடுவாய்
இலட்சியப் பிடிப்பு வரும் துறவியரின் நினைவு வரும்
பார்க்கும் இடத்திலெல்லாம் பரம்பொருளின் நினைவு வரும்...!
(இந்து என்று சொல்லு)



## அதிபரின் ஆசிச்செய்தி...

மனித நாகரீக வளர்ச்சி படிநிலைகளில் மனமகிழ்வோடு தூய்மையோடு, இறை உணர்வோடும் அனுட்டிக்கப்படுபவைதான் பண்டிகைகளும், விழாக்களுமாகும். எல்லா மக்களும் தத்தமது இறையியல் வாழ்வில் மனம், வாக்கு, காயம் என்பவைகளால் ஆசாரத்துடனும், அன்புடனும், ஏற்கப்பட்ட ஒழுக்க நியதி அடிப்படையில் தாம் வழிபடும். இறைவனை மனதில் இருத்தி பக்தியுடன் போற்றி பல வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

மானிடர் அனைவரும் தத்தமது வழிபாடு கடவுளுக்காக வருடத்தில் குறித்த மாதங்களையோ திகதிகளையோ விசேடமாக கருதி அவ்வவ் மாதங்களுக்குரிய வழிபாடுகளை சிறப்பித்து வழிபாடு செய்கின்றனர்.

இதற்கமைய இந்துக்களால் புரட்டாதி மாதத்தில் எல்லாம் வல்ல இறைசக்திக்காக விசேடமாக மேற்கொள்ளப்படும் வழிபாடுதான் நவராத்திரி வழிபாடு ஆகும். ஒன்பது இரவுகளிலும் மனித வாழ்வுக்கு இன்றியமையாததாய பலவற்றுள் வீரம், செல்வம், கல்வி என்பவற்றை தெரிந்து எடுத்து இம்மூன்றையும் மூன்று சக்தி வடிவங்களாக போற்றி, நல்ல அருளை தந்து உய்விக்கும்படி வேண்டி வழிபடுவதே நவராத்திரி கால வழிபாடாகும்.

மனிதர்களாகிய நாம் இறைவழிபாட்டில் இலயிப்பதன் நோக்கம் எம்மிடம் உள்ள அகங்காரம், ஆணவம், அழுக்குகள், அசுத்தங்கள் என்பன நீங்கி, நாம் தூய்மையடைந்து இறை அருள் பெற வேண்டும் என்பதேயாகும். இதற்கமைய இவ் நவராத்திரி வழிபாட்டின் இறுதி நாளாகிய பத்தாம் நாளை விஜய தசமி என்று போற்றி வழிபடுவர். விஜய என்பது வெற்றி, தசமி என்பது பத்து, அதாவது வெற்றிக்குரிய பத்தாம் நாள் என பொருள்படும்.

இவ்வாறு எமது மாணவர்களால் ஏறெடுக்கபடும் வாணி விழா எம் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் ஆசீர்வாதமாகவும், சறப்பானதாகவும் அமைய வாழ்த்துகிறேன்.


வண.செ.பி.நேசகுமார்
அதிபர்
தூய தோமையர் கல்லூரி,
பண்டாரவளை.



பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி...

"நவமிதம்" என்ற இவ் இதழின் பெயரே இதன் உள்ளடக்கத்தின் பரிமாணங்களுக்கு ஒரு முகவரியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. இதற்கு ஆசியுரை வழங்குவதில் பெறும் மகிழ்வுறுகிறேன். இதன் கண் உள்ள கருத்தாடல்கள் வாசகர்கள் மத்தியில் திருப்தியினையும் மன அதிர்வுகளையும் ஏற்படுத்தும் என நம்புகிறேன். ஓர் ஊற்றாய் உருவெடுத்துள்ள தங்களது இம் முயற்சி பெறும் வெள்ளமாக பிரவாகம் கொள்ள எனது நல் ஆசிகள்.

சண்முகம் கோபிநாத் M.Ed.
உதவி கல்விப் பணிப்பாளர்
வலப்பனை கல்வி வலயம்.



## பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி...

“நவமிதம்” என்ற இவ் இதழின் பெயரே இதன் உள்ளடக்கத்தின் பரிமாணங்களுக்கு ஒரு முகவரியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. இதற்கு ஆசியுரை வழங்குவதில் பெறும் மகிழ்வுறுகிறேன். இதன் கண் உள்ள கருத்தாடல்கள் வாசகர்கள் மத்தியில் திருப்தியினையும் மன அதிர்வுகளையும் ஏற்படுத்தும் என நம்புகிறேன். ஓர் ஊற்றாய் உருவெடுத்துள்ள தங்களது இம் முயற்சி பெரும் வெள்ளமாக பிரவாகம் கொள்ள எனது நல் ஆசிகள்.

சண்முகம் கோபிநாத் M.Ed.
உதவி கல்விப் பணிப்பாளர்
வலப்பனை கல்வி வலயம்.



## Message From The College Chaplain

" We sparkle with joy! Hope shines in our bleakest hour. Our minds brighten with wisdom"

Many God-seeking humans of all religions have had very similar spiritual visions of God where He is perceived as a bright, loving. transforming light of spirit luminosity.

From the star of Bethlehem in the Gospel to the candle symbol of enlightenment popular with religious skeptics to the billions of people who spend for twinkling bulbs on the porch. we're captivated by the universal spiritual gifts of light. It illuminates spirits, minds and hearts in every culture, scripture and mythology.

December 25th Christmas, when billions of believers say Christ was born to be the light of the world, fulfilling God's first gift to the heavens and earth; "let there be light." Sunday night, jews worldwide light the sixth candle on their menorahs, eight-branch candelabras, to celebrate the Hankkah miracle of enduring faith triumphing over evil.

Monday is Kwanzaa, the secular celebrating of black culture. Seven candles, symbolic of the celebration's seven principles, will rise from wooden stands meant to recall roots in Africa.

Diwali, the festival when a billion Hindus, sikhs and Janis light lanterns and small earthen lamps, made nights glow this October. Lights awareness of God and the triumph of good over evil.

Muslims speak of Allah as the source of light-inspiring, motivating and guiding God's people. "We aren't creatures that can see in the dark. We require light to see. Whether we're religious or atheist, scientist or philosopher, we all shares the word in our ordinary understanding of the world."

I Wish that the theme of this short message becomes a reality as you celebrate "Vani Vizha"

and produce this magazine

Revd. Charles D David

College Chaplain



**இந்து கலாசார மன்ற பொறுப்பாசிரியரின்**
**உள்ளத்திலிருந்து...**

இந்து கலாசார மன்றத்தின் பொறுப்பாசிரியர் என்ற அடிப்படையில் தூய தோமையர் கல்லூரியின் வாணி விழாவை ஒட்டி 'நவமிதம்" சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு நான் பெறும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறான சஞ்சிகைகள் வெளியிடுவதன் பிரதான நோக்கம் எமது மாணவர்களின் ஆக்கத் திறனை ஊக்கப்படுத்துவதற்காகவாகும். 'நவமிதம்" அதன் நோக்கத்தினை நிறைவேற்றியுள்ளதென நான் நம்புகின்றேன்.


அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் அறிவு தேடல், அவற்றினை கிரகித்தல், வெளிப்படுத்தல் என்ற மூன்று பிரதான செயற்பாடுகள் மிக முக்கியமானதாக அமைகிறது. அந்தவகையில் எமது சின்னஞ்சிறார்களின் ஆக்கங்கள் இவ் இதழின் மூலம் வெளியாகியுள்ளது.

இச் சஞ்சிகை வெளியாகுவதற்கு பெரிதும் உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இத்தாள் எனது இதயப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

க.கமல்ராஜ்
பொறுப்பாசிரியர்
(இந்து கலாசார மன்றம்)

**President**



**P.Ramyan**

**Secretary**




**P.Madukanth**

**Treasurer**



**S.Thavayogan**

**Editor**



**S.Kavin**

## தலைவரின் உள்ளத்திலிருந்து...

இயற்கை எழில் கொஞ்சும் பண்டாரவளை நகரில் தனித்துவம் பெற்ற கல்லூரியாகத் திகழ்ந்து கல்விப் புலத்தில் தனக்கென தனியிடம் பிடித்த தூய தோமையர் கல்லூரியானது 2012ம் ஆண்டு 25வது ஆண்டு வாணி விழாவின் "நவமிதம்" மண்டலம் முழுவதும் ஒலித்து விழா பிரம்மாண்டமாக நடைபெற எம் மன்றம் வித்திட்டுள்ளது. இம்மன்ற தலைவர் என்ற வகையில் இவ்விழாவை உங்கள் முன் வழங்குவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இந்து கலாசார மன்றத்தினர் வெளியிடும் இம்மலரை வெளியிடுவதற்காக உழைத்த சகலருக்கும் தனிப்பட்ட ரீதியில் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். இம் மலரை வெளியிட அனுமதியளித்து ஊக்கமளித்த தலைமை ஆசிரியர் அ[illegible]ர்களுக்கும், ஊக்கமளித்து உற்சாகத்தை வழங்கிய ஆசிரிய பெருந்தகைகளுக்கும், ஆக்கங்களை தந்துதவிய சக மாணவர்களுக்கும், விளம்பரங்களைத் தந்து மலரை சிறப்பாக்க உதவிய விளம்பரதாரர்களுக்கும் எனது தனிப்பட்ட நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு சிரமங்களில் இம்மலர் வெளியீட்டில் இருந்த பொழுதிலும் இம்மலர் உங்கள் கரங்களில் தவழும் போது உங்கள் மனதில் ஏற்படும் உவகை நம் சிரமங்களுக்கு மருந்தாகும் என்பதில் ஐயமில்லை.

நவராத்திரி நாயகியின் மறு பெயர்களில் "நவமித தேவதை" என்பதைச் சுருக்கி "நவமிதம்" என்ற பெயரில் இம்மலரை சரஸ்வதி தேவியின் திருவடிகளுக்கு சமர்ப்பிப்பதில் நான் உவகையடைகின்றேன்.

"கல்விக் கடலாம் கலைவாணியின்,
அருள் வேண்டி நிற்கும்."

பரமநாதன் ரம்யன்
தலைவர்
இந்து கலாசார மன்றம்

செயலாளரின் செந்நாவிலிருந்து...

வீரம், செல்வம், கல்வி என்ற மூன்று முத்துக்களையும் ஒன்றாக்கித் தரணியில் தன்மணம் வீசச்செய்து இறையருள் வேண்டி இந்து சமய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைவரதும் கடும் முயற்சியினால் எடுக்கப்படும் விழாவே வாணிவிழாவாகும். அவ்வகையில் எமது மன்றத்தின் 25வது ஆண்டு வாணிவிழாவின் மன்றச் செயலாளராக நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அம்மரபில் இருந்து சிறிதும் தவறவிடாது எமது பாடசாலை கடந்த கால இந்து கலாசார மன்றங்களை அடியொற்றி, இதோ 25வது வாணி விழாவை நடாத்த எம் மாணவர்கள் முன் வந்துள்ளமை பாராட்டத்தக்கவொரு விடயமாகும். அவ்வகையில் மாணவர்களது அறிவை வளர்த்து கொள்ளும் வகையிலும், பிற்காலத்தில் இவ்விழாவை நினைவுகூறும் முகமாகவும் "நவமிதம்" எனப் பெயர் பெறும் இம்மலரை வெளியிட உதவிய எல்லா வகையிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நன்றல்லதன்றே மறப்பது நன்றி "

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | வண.செ.பி.நேசகுமார் |
| பொறுப்பாசிரியர் | - | திரு.க.கமல்ராஜ் |

| | | |
|---|---|---|
| தலைவர் | - | செல்வன் ப.ரம்யன் |
| செயலாளர் | - | செல்வன் பெ.மதுகாந்த் |
| உப தலைவர் | - | செல்வன் ச.கிருஷாந்த் |
| உப செயலாளர் | - | செல்வன் நா.சிந்துஜன் |
| பொருளாலர் | - | செல்வன் ச.தவயோகன் |
| பத்திராதிபர் | - | செல்வன் சி.கவினேஷ்வரன் |

வகுப்பு பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| தரம் - 06 | - | செல்வன் எம்.எஸ்.சதுர்ஷன் |
| தரம் - 07 | - | செல்வன் வி.சஞ்ஜீவ் |
| தரம் - 08 | - | செல்வன் எஸ்.அபிலாஷ் |
| தரம் - 09 | - | செல்வன் ரா.கஜலக்ஷன் |
| தரம் - 10 | - | செல்வன் எஸ்.தினுஷ்ரேவிந்த் |
| தரம் - 11 | - | செல்வன் ஜி.விதுர்ஷன் |
| தரம் - 12 | - | செல்வன் ம.லவநாத்தன் |

பெ. மதுகாந்த்
செயலாளர்
(இந்து கலாசார மன்றம்)

பொருளாலரின் உள்ளத்திலிருந்து...

இயற்கை அழகு கொழிக்கும் மலையகத்தின் அறிவுக் கருவூலம் என அனைவராலும் பெருமையாக பேசப்படும் தூய தோமாவின் கல்லூரியின் இந்து கலாசார மன்றத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் வாணி விழா சிறப்புக்குரிய விடயமாகும். அவ்வகையில் 25வது ஆண்டு வாணிவிழாவை நடாத்துவதில் மன்ற பொருளாலர் என்ற ரீதியில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான இனிய விழாவினை செய்வது நிதியிலே தங்கியுள்ளது. ஆகையால் எம்மன்றத்தினால் வெளியிடப்படும் "நவமித" சிறப்பு மலரை உங்கள் பார்வைக்கு விடுவதில் எம் மன்றம் பெருமையடைகிறது. இம்மலரினை வெளியிட நிதியுதவி வழங்கிய அனைத்து விளம்பரதாரர்களுக்கும், இவ்வாரான நற்பணிகளை மன்றம் முன்னெடுத்து செல்ல ஆக்கமும், ஊக்கமும் தந்த அனைவருக்கும் நன்றிகளை கூற விரும்புகிறேன்.

நெற்றி வியர்வை நிலத்திற்சிந்தி பிள்ளைகளுக்காக எல்லா வழிகளிலும் நிதிவசதிகளை அளித்த அனைத்து பெற்றோர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிய ஆசிரியர்களுக்கும் மற்றும் என் சக மாணவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதில் உள்ளம் பூரிப்படைகின்றேன்.

ச. தவயோகன்

பொருளாலர்

(இந்து கலாசார மன்றம்)

## இதழாசிரியரின் இதயத்தூறல்கள்...

எழில் கொஞ்சும் மலையகத்தின் சிறந்த மாணவர்களை உருவாக்குவதில் சீர்ப்பெற்றுத்திகழும். பண்டாரவளையில் தனக்கென சிறப்புப் பெற்று ஓங்கி நிற்கும் தூய தோமையர் கல்லூரியின் இந்து கலாசார மன்றம் இவ்வாண்டு தனது 25வது வாணிவிழாவை பிரம்மாண்டமாக கொண்டாடுவதை எண்ணி பெரும்மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்து கலாசார மன்றத்தின் இதழாசிரியர் என்ற வகையில் "நவமிதம்" எனும் ஒப்பற்ற மலரை வெளியிடுவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். இவ்வாணி விழாவை பெருமை சேர்க்கும் பொருட்டு "நவமிதம்" எம்மாணவர்களின் திறனையும், ஆசிரியர்களின் வழிக்காட்டலையும் வெளிக்கொணர்கிறது.

இம்மலரானது சிறப்புற உருவாக உதவிய தலைமையாசிரியருக்கும், பொறுப்பாசிரியருக்கும், விளம்பரதாரர்களுக்கும், ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கும் இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இவ்வழகிய மலரில் ஏதேனும் எழுத்துப்பிழை, சொற்பிழை இருப்பின் அதனை பொருத்தருளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். இம்மலரினூடாக உங்களின் ஆதரவையும் நல்லாசியையும் வேண்டுகின்றேன்.

சி. கவினேஷ்வரன்
இதழாசிரியர்
(இந்து கலாசார மன்றம்)

## மத்திய பிரிவு மேற்ப்பார்வையாளரின் ஆசிச் செய்தி...

'மேன்மைக் கொள் வைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

கல்வித் தாய்க்கு விழா எடுக்கும் இவ்வேளையில் செய்தி வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன். காலம் காலமாக இந்துக்கள் தமது சமயம், கலாசாரம் என்பவற்றை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு அதனை வழங்குவதில் சிறப்பு பெற்றவர்கள். அதனால்தான் இன்றும் நாம் நமது வழிப்பாடுகளில் வாணிக்கு விழா எடுப்பது சிறப்பு பெறுகின்றது. மாணவர்களை பொருத்தளவில் சரஸ்வதி வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்தது. எந்தவொரு சமுதாயமும் கல்வி, செல்வம், வீரம் என்ற முப்பேற்றினை பெறுவது இன்றியமையாதது. அந்த வகையில் எம் மாணவ சமுதாயமாகும். கல்வி, செல்வம், வீரம் என்ற இம்மூன்று செல்வங்களை பெற வேண்டும் என்ற அவாவுடன் வருடந்தோறும் நடாத்தப்படும். வாணி விழா சிறப்புற நடைபெறவும், இச்சஞ்சிகை காலம் காலமாக வளர்ந்து செழிப்புறவும் எல்லாம் வல்ல இறைவனை மன்றாடுகின்றேன்.

திரு.கோ.தங்கராஜா
ஆசிரியர்.

# 2013 A/L Batch & Organizing Commitee



Standing Left To Right :

A.Sumith, S.Arunkumar, S.Sooriyawarman, B.H.Kabeel ul Haq, A.Farhan, R.Jaganath, N.Rushanthan, M.F.Shafnas, A.Dilshan.

Seated Left To Right :

N.Sindujan, S.Kavin, P.Madukanth, Mrs.Naleena Amirthanayagam (Class Teacher). P.Ramyan, S.Thavayogan, C.Krishanth

## நவராத்திரி வழிப்பாடு செய்வதன் நோக்கம்...

உலகின் முக்கிய தேவையான ஞானம், செல்வம், வீரம் இவை மூன்றும் பெற்றுச் சிறந்திட முப்பெருந்தேவியரையும் மும்மூன்று தினங்களும் முறைப்படுத்தி வழிப்படுகின்றோம். மூன்று சக்தியரும் ஒன்றான ஆதி சக்தியே எனக்கருதி சக்தியின் ஒன்பது ரூபங்களையும் ஒன்பது நாட்களிலும் வழிப்படுவது இன்னும் சிறப்பாகும்.

புதனுக்குரிய இராசியான கன்னியில் புரட்டாதி மாதத்தில் சூரியன் பிரவேசிக்கும் காலத்தில் தேவியை வழிபடுவது மிகவும் சிறப்பாகும். எனவேதான் இப்புண்ணிய காலத்தில் நவராத்திரி தினங்களில் நவக்கிரக நாயகியை வழிப்படுகின்றோம்.

கஜேந்திர மோட்ச கதை ஒன்று உண்டு. கஜேந்திரன் எனும் யானை பகவானை பூஜிக்க மலர் பறிக்கச்சென்ற இடத்தில் ஆற்று நீரில் முதலை அகப்பட்டுக் கொண்டது. அப்போது 'ஆதிமூலமே என்னை காப்பாற்று' என யானை பிளிறியது. ஆதி மூலமே என அழைத்தது யாரை? பிரம்மா தான் இல்லை என்றார். சிவபெருமான் திகைத்து நின்றார். ஸ்ரீமத் நாராயணனோ ஆதி மூலம் என்று கஜேந்திரன் அழைத்தது யாராக இருக்கும் என்று யோசித்தார். மும்மூர்த்திகளும் இப்படி யோசித்திருக்க தருரமாலின் கரத்திலுள்ள சக்கரம் சுழல ஆரம்பித்தது. விண்ணில் சுழன்று, மண்ணிலிறங்கி முதலை வாயிலிருந்து யானையை காப்பாற்றியது.

கஜேந்திர மோட்சத்தை அளித்த சக்கரமே ஸ்ரீசக்கரமாகும். இங்கு ஸ்ரீ என்பது ஷாட்சாத் மகாலட்சுமியையே குறிப்பதாகும் அவள்தான் ஆதிக்கும் ஆதியான மகா லட்சுமியை குறிப்பதாகும். ஸ்ரீ என்பதை தூய தமிழில் திரு என்போம். திருமகளை மார்பில் உடையதால்தான் திருமகள் என வணங்கப்படுகிறாள்.

ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை கொண்டுள்ள இந்து மதத்தில் பல விரதங்களும், பண்டிகைகளும் அனுட்டிக்கப்படுகின்றனர். மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு, அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்க்கும் வகையில் பண்டிகைகள் அமைய விரதங்கள் தூய சிந்தனை இறைபக்தியை வளர்ப்பனவாக அமைகின்றன. நவராத்தி விரத விழாவாக கோயில்கள், பாடசாலைகள், வேலைத்தளங்கள், வீடுகளில் கொண்டாடப்படுகின்றது.

இந்நவராத்திரி விழாவும் உழைத்துச், களைத்து சலிப்படைந்துபோகும் மனித மனங்களுக்கு புத்துணர்வூட்டவும், அவர்கள் செம்மையடைந்து வாழ்வில் உயரவும், உறவுகள் விருத்தியடையவும், சமூக ஒற்றுமையுடன் கலையுணர்வும், கலாசாரமும் உயர்ச்சியடையவும் இந்து பண்டிகையாக நவராத்திரி முக்கிய விரத விழாவாக போற்றப்படுகின்றது.

## சுவாமி விவேகானந்தரின் போதனைகள்

01. மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியாகும்.

02. முதலில் கீழ்படிவதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளை இடும் பதவி உனக்குத் தானாக வந்து சேரும்.

03. உன்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதை குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தை பற்றிக்கொண்டு முன்னேறிய படியே இரு.

04. உறுதியுடன் இரு, அதற்கு மேலாகத் தூய்மையாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

05. விரிந்துக் கொண்டே போவது தான் வாழ்க்கை. குறுகிச் செல்வதே மரணம் என்று தான் சொல்ல வேண்டும்.

06. மரணம் வருவது இவ்வளவு உறுதியாகவிருக்கும் போது நல்லவொரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

07. மிகபெரிய உண்மை இது வலிமை தான் வாழ்வு. பலவீனமே மரணம்.

08. இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதே!

09. சுயநலம் அற்ற தன்மையின் அளவுதான் வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கின்றது.

செல்வி : S.D. செபஞானம்
தரம் - 03 வகுப்பாசிரியை.

# பாடசாலையில் சமய வழிபாடு

சமய சமூக விழுமியங்களை மாணவர்களின் மனங்களில் உருவாகும் இடம் பாடசாலை ஆகும். ஆகவே பாடசாலைகளில் சமய வழிபாடுகளும், ஒழுக்க விதிமுறைகளும் முக்கிய இடம் பெறுகின்றன.

மாணவர்கள் நாள்தோறும் காலையில் நீராடிச்சுத்தமான உடையணிந்து விபூதி தரித்து உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்லுதல் அவர்களின் கடமையாகும். பாடங்களை தொடங்கும் முன் கண்களை நன்றாக மூடி ஒரு நிலையில் இறைவனை பிரார்த்திக்கும் போது எமது மனம் ஒருநிலையடைந்து கல்வியில் சிறக்க உதவி புரிகின்றன. பாடசாலை காலை பிரார்த்தனையின் போது தோத்திரப்பாடல்களைப் பண்ணுடனும், இசையுடனும் பொருள் உணர்ந்து மனம் உருகி அனைவரும் பாடுதல் அவசியமாகும்.

பாடசாலையில் தோத்திரப்பாடல்களை பண்ணோடும், இசையோடும் பாடிப் பழகுவதால் கோயில்களிலும், இல்லங்களிலும் விசேட விழாக்கள், தினங்களின் போதும் பாடுவதற்கு எம்மை நெறிப்படுத்தும். இவ்வாறு தோத்திரப்பாடல்களை தொடங்கும் முன்பும் தோத்திரப்பாடல்களை ஓதிய பின்னும் திருச்சிற்றம்பலம் எனச்சொல்லுதல் வேண்டும். மாணவர்கள் தங்கள் கல்வி அறிவினை மேம்படுத்துவதற்கு முதலில் எமது சமய வழிபாடே முக்கிய இடம் பெறுகிறது.

இவ்வழிபாட்டின் மூலம் மாணவர்களுக்கு பொறுமை, ஒழுக்கம் கட்டுபாடு, நேர்மை, தன்னம்பிக்கை, பெரியோரை மதித்தல், மற்றவர்களுக்கு உதவி புரிதல், நல்ல பழக்க வழக்கங்கள் போன்றவைகள் ஏற்படுகின்றன. இதன் மூலம் சமுதாயத்தின் நல்லதொரு பிரஜையாக வருவதற்கு பாடசாலையில் சமய வழிபாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாகவும் திகழ்கின்றது. ஒரு மாணவன் நல்ல ஒழுக்கமானவனாக வருவதற்கு சமயவழிபாடே முதல் துணைக்கோளாகும். ஆகவே மாணவர்கள் சமய வழிபாட்டில் ஈடுபட்டு நன்மை பெற வேண்டும்.

தொகுப்பு
ஆ. மகேந்திரகுமார்
அழகியல் துறை ஆசிரியர்.

## இளைஞர்களின் கடமை

இந்த நாட்டை காப்பவர்கள் நாங்கள்
காப்பவர்கள் எனும் முறையில்
வயிற்றைத் தான் காத்திட்டோம்
இன்னும் இந்த நாட்டினிலே
மற்றவர்களை நம்பித்தான்
வாழ்க்கையை நகர்த்துக்கின்றோம்

கல்லூரி பருவத்திலே
நெறி தவறி நடக்காதே!
தீய சொல்லைக் கேட்டு நீயும்
சீர் கெட்டுப் போகாதே!
தன்னம்பிக்கையுடன் நடந்துக் கொண்டால்
உலகம் உன்னைப்
பரிதாபமாக பார்க்காதே!

நாட்டிற்காக சில
சாதனைகளை புரியாவிட்டாலும்
நம்மை எண்ணி கனவு காணும்
நம் பெற்றோர் மனதை
வருத்தமுறச் செய்யாதே!
வஞ்சகர்கள் வலையில் நீ
ஒரு நாளும் சிக்காதே!
பட்டங்கள் பெற்றவுடன் நீ
வேலைக்காக அலைந்து
வெட்டிப்பொழுது போக்காதே!
வசதியாய் இருக்க நினைத்து - நீ
வஞ்சனைகள் புரியாதே!
வாழ்வதற்கு வழியேது என்று நீ
வாடாமல் கடமைகளைச் செய்வாய்

தொகுப்பு
திருமதி. கோகிலா சுரேந்திரகுமார்

# மதுரை மீனாட்சியம்மன் கோவில்

மதுரை மீனாட்சியம்மன் கோயில் அல்லது மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் என்பது தமிழகத்தின் மதுரை நகரின் மையத்தில் அமைந்துள்ள தொன்மையான இந்துக் கோவில் ஆகும். இங்கு மீனாட்சி அம்மனும், சுந்தரேசுவரரும் வழிப்படப் படுகின்றனர். இருப்பினும் இத்தலத்தில் மீனாட்சியம்மன் சந்நிதியே முதன்மை பெற்றது. ஆகையால் இத்தலத்தில் முதலில் மீனாட்சியை வணங்கிவிட்டு அதன்பிறகு சுந்தரேசுவரர் சந்நிதி சென்று அவரை வழிபடுவது மரபாக இருந்து வருகிறது. சிவபெருமானுக்கான கோவில்களில் இந்த கோயில் சிறப்புடைய ஒன்றாக கருதப்படுகிறது.

முதன் முதலில் கடம்ப வனக்காட்டில் சுயம்பு லிங்கத்தை கண்டறிந்து முதலில் இந்தக்கோவிலையும், பின் மதுரை நகரத்தையும் அந்த மன்னன் நிர்மாணித்தாக வரலாறு என்றார்கள் சிலர். கடம்பவனமாக இருந்த காட்டை அழித்து அழகிய நகராக்கும்படி பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்த குலசேகர பாண்டடியனின் கனவில் சிவபெருமான் தோன்றிக் கூறியதால் அம்மன்னன் கடம்பவனக் காட்டை அழித்து மதுரை எனும் அழகிய நகரத்தை உருவாக்கினான். சிவபெருமான் தன் சடையிலுள்ள சந்திரனின் அமுதத்தைச் சிந்தி புதிய நகருக்கு ஆசி வழங்கினார் என்று வரலாறு கூறுகிறது. இக்கோயில் அம்மனின் 64 சக்தி பீடங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

## நான்மமாடக்கூடல்

மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்ததால் நான்மாடக்கூடல் என்ற பெயரும் மதுரைக்கு உண்டு என்றார்கள் சிலர்.

## ஆலவாய்

சிவபெருமானின் அணிகலன்களில் ஒன்றான பாம்பு வட்டமாக தன் வாலை வாயினால் கவ்விக்கொண்டு இத்தலத்தின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது என்று ஒரு வரலாறு கூறுகிறது.

விரத்தாசுரன் என்ற அசுரனை வென்ற தேவேந்திரன், தனது பிரம்மகத்தி தோ'ம் நீங்க கடம்பவனத்தில் இருந்த இந்த சிவலிங்கத்தை பூசித்து தனது தோ'த்தை போக்கிக் கொண்டதாகவும் ஒரு வரலாறு கூறுகிறது.

தொகுப்பு

திரு. N. சுப்ரமணியம்

ஆசிரியர்.

## ஊர்த்தெய்வ வழிப்பாட்டு முறைகள்

தெய்வ வழிபாடு என்பது தமிழ் மக்களுக்குப் புதிய முறையன்று. முழுமுதற் கடவுளாக சிவபெருமானை பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் பெரிதும் காணப்படுவதால் அக்காலத்திற்கு முன்பே தெய்வ வழிபாடு இருந்ததென்பது. தெளிவு, தமிழ் சமூதாயம், வைணவ சமயங்களோடு ஒன்றி தெய்வ நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வந்தனர். மக்களால் செய்ய இயலாத செயல்கள் இயற்கையில் நிகழ்ந்து வருவதைக் கண்டு அச்சமடைந்த மக்கள் இந்நிகழ்ச்சிகள். எவற்றால் நிகழ்ந்தன என்று உறுதி செய்ய இயலாத காரணத்தால், அவை தெய்வத்தால் ஆகியிருக்கலாம் என்று நம்பினர். இன்னம்பிக்கையின் வாயிலாகத்தால் தெய்வ வழிபாட்டு முறைகள் தோன்றியது எனலாம்.

தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும், மக்கள் தாம் வாழ்கின்ற நிலைக்கும், சூழலுக்கும் ஏற்ற வகையில் தாங்கள் நினைத்தவாறு தெய்வங்களை வணங்க தலைப்பட்டனர். நாட்டுப்புற சமயம், மக்கள் வாழ்வியலோடு ஒன்றி வருவதால், நாட்டுப்புற மக்களின் வாழ்வில் ஒரு சிறப்பான இடத்தை பெறுகின்றது. மனிதர்கள் உலகின் தோற்றம், தங்களுடைய பிறப்பு, வாழ்க்கை முறை, இயற்கை தரும் சக்திகள் பற்றி சிந்திக்க தொடங்கினர். இச்சிந்தனைதான் தெய்வ வழிபாட்டை தோற்றுவித்தது எனலாம். 'திராவிட தம் தெய்வ வழிபாட்டை தோற்றுவித்தது எனலாம்." பழங்காலத்தில் பல தெய்வ வழிபாடுகள் இருந்ததாகவும் அவற்றின் மொத்த உருவமே தாய்த் தெய்வ வழிபாடு எனக்கூறுவார்.

ஊர்த்தெய்வங்களை, நீர்நிலைகளை அடுத்த காடுகளிலும் வைத்து வழிப்பட்டமை பழங்காலம் தொட்டே இருந்துவரும். இதனை,

'கடல் கெழு செல்வி கரை நின்றாங்கு
நீயே கானம் ஒழியயானே"

என்ற வரிகளில் அறியலாம். பழங்காலத்தில் இருந்தே பெண் தெய்வ வழிபாடு, உலகின் பல இன மக்களிடையே பரவலாக இருந்து வரும் ஒன்றாகும் பெண் தெய்வங்களைத் 'தாய்த் தெய்வம்" என தமிழ் இலக்கியங்களில் கூறுவதாலும் அறியலாம். பழந்தமிழரின் தெய்வம் 'கொற்றவை" என வழங்கப்பட்டுள்ளது.

ஊர் மக்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களுக்கு மிருகங்களை பலியிடுவது இல்லை. அவ்வாறு சில இடங்களில் காணப்பட்டாலும் அவற்றைக் காவல் தெய்வங்களுக்கே பலியிடுகிறார்கள். பெண் தெய்வ வழிப்பாட்டில் பூப்பலி செய்தல் நடைபெற்று வருகிறது. பூப்பலி செய்யும் முறை பழந்தமிழரிடையே காணப்பட்டது. இதனை,

'ஆர்கலி விழாவுக் களம் கடுப்பநாளும்
விரவுப் பூம்பலியோடு விரையீ அடனனை
கடியுடை வியல் நகர்க் காவல் கண்ணி
முருகு என வேலன் தரு உம்"

என்ற தொடர்களால் அறியலாம். பழந்தமிழரின் பழக்கத்தின் வழிவந்ததே தற்போது ஊர் தெய்வங்களுக்கு பூமாலை போன்றவை செலுத்தி வழிபடும் முறையெனலாம். பழந்தமிழர் விலங்கு, பறவை முதலியவற்றைக் ஊர் தெய்வங்களுக்குப் பலியிட்டமையை சங்க இலக்கியங்கள்,

'மலையுற கடவுற் குலமுதல் வழுத்தித்
தேம்பலச் செய்த வீர் நறுகையள்
பொறி வரி இனவண்டு ஊதல் கழியும்
உயிர்ப்பலி பெறா உம் உருக்கெழ் தெய்வம்"

எனக்கூறுவதால் அறியலாம். ஊர் தெய்வங்களை வழிப்படுதலைக் கோயில் கும்பிடுதல் எனக்கூறுவர். ஊர் மக்கள் விரும்பும்போது அவர்கள் வசதிக்கேற்ற மாதங்களில் ஏதாவது ஒரு கிழமையில் வழிபாடு நடத்துகின்றனர். கோயிலுக்கு சென்று கும்பிடுவதற்கு முன் ஒரு நாள் ஊர் பெரியோர்கள் கோயிலின் அருகே ஒன்று கூடி மழைப்பெய்யவில்லை. நோய்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன அதனால் இந்த ஆண்டு கோயில் கும்பிட வேண்டும் என்று முடிவு செய்வர். அதன் பின் நாள்ப்பார்த்து கோயிலுக்கு சென்று சகுனம் பார்த்து அல்லது பூக்கட்டிப் போட்டு பார்த்தல் வாயிலாகத் தெய்வத்திடம் உத்தரவு கேட்பர். விரும்பிய வண்ணம் கிடைத்தால். அந்த ஆண்டுக்கோயில் கும்பிடுதல் நடைபெறும். இல்லையென்றால் அந்த ஆண்டு கோயில் கும்பிடுதல் நடத்துவது இல்லையென்று முடிவு கட்டுவர். ஒவ்வொரு ஊரிலும் உள்ள தெய்வங்கள் அந்தந்த ஊர் தெய்வங்களாகும். ஊர் மக்கள் அனைவரும் வணங்கும் தெய்வமாக அது விளங்குகிறது. குலதெய்வ வழிபாடே பிற்காலத்தில் ஊர் தெய்வ வழிபாடாக மாறியது. சிறுதெய்வ வழிப்பாட்டு முறையில் விதிமுறை வகுத்து வழிபாடு நடத்தப்படுவதில்லை. அவர்களின் முன்னோர் செய்த வழிபாட்டு முறையே பின்பற்றப்படுகிறது. இதனை சிறுதெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது என்பர். இவ்வழிபாட்டு முறைகள். மரபாக பின்பற்றப்படுவதை நாட்டுப்புறத் தெய்வ வழிபாடெல்லாம் முன்னோர் வழிப்படட வழியே நடைபெறுகின்றது எனும் கூற்றால் அறியலாம்.

சிறு தெய்வங்களுக்கு நாள் பூசை எனப்படும் ஆறு காலப்பூசையெல்லாம் நடத்தப்படுவதில்லை. மக்கள் அவர்களின் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப பூசை நடத்துக்கின்றனர். மக்கள் தம் சமுதாயத்தில் விருப்பு, வெறுப்புகளுக்கு தக்கவாறு வழிப்பாட்டு முறைகளை அமைத்துக் கொள்கின்றனர். ஊர் மக்கள் சிறு தெய்வங்களுக்கு பொங்கல் வைத்து படைத்து வழிபடுகின்றனர். அசைவ உணவை விரும்பாத ஒரு சிலர் தங்கள் விருப்பத்திற்கேற்ப சைவ உணவுப்பொருள்களை மட்டும் வைத்து வழிப்படுகின்றனர். எனவே வழிப்பாட்டு முறை சமுதாய அமைப்பிற்கும், இனத்தின் விருப்பத்திற்கும் ஏற்ற முறையில் அமையும் என்பது கருதத்தக்கது.

தொகுப்பு

ந.விக்னேஷ் (B.Sc,M.Sc)

# Hindu Staff - 2012



Standing Left To Right :

Mr.N.Subramaniyam, Mr.G.Praba, Mr.A.Mahendrakumar.

Standing Left To Right 2nd Row :

Mrs.S.Praveena, Mrs.M.Rahini, Mrs.N.Suhashini, Mrs.S.Srisuthajini, Mrs.Bavani Sriankumar, Mrs.S.Kavitha

Seated Left To Right :

Mr.G.Thangharajah, VEN.S.P.Nesakumar (Head Master), Mr.K.Kamalraj (Master In Charge)

## ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும்

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் செம்பொன் மணி நிலத்தில், மாரி தவழுங்காலத்தில் மரகதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம்புல்லின் மகிமையை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதைந்து உரைக்கப்பட்டுள்ளமையை யாவரும் அறிவர்.

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப்பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப் புராணம் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனா காண்டம், லீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரெண்டாயிரஞ் சுலோகங்களால் ஒரு புராணமாக்கினர். முதலாவது உபாசன காண்டத்தில் அறுகம்புல்லின் பெருமை விதந்து உரைக்கப்பட்டுள்ளது. நறுமணமுடைய பல வகையான மலர்கள் இருக்கவும், அறுகினால் நான்முகனை ஏன் வழிபட வேண்டும் என்பதை விளக்க, அவந்தி பட்டணத்திலுள்ள சுபலன் என்னும் பெயருடைய ஓர் அரசனுடைய கதை கூறப்டுகின்றது. சுபலனுடைய மனைவியின் பெயர் மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடி வந்த அந்நனனுடைய பெயர் மதுசூதன். இம்மூவரையும் அடியோற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெறுமை உரைக்கப்படுகின்றது. மேலும், அனலாசுரனை அழித்த ஆனைம்முகக் கடவுளின் வெப்பம் தன்னெனக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும் இருபத்தோரறுகுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புராணத்திலே எடுத்துரைக்கப் பெறுகின்றது.

சனக மன்னனுடைய பசு அறிவை போக்கி பதியறிவை கொடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. ஒரு புல்லுக்கு நிகராகுமா? குபேரனுடைய செல்வம் என்று கூறும் அளவுக்கு அறுகின் நிறைக்கோல் ஏறிய வரலாறு உண்டு. 'ஆனைமுக கடவுளினுடைய திரு வழிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது" என்பது விநாயகப் புராணம் விளக்கும் உண்மை.

புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல்லறிவூட்டும் அறிவுக் கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கிய பண்பின் உட்பொருந்திந்து காணப்படும் படிமவாக்கங்களும், குறியீட்டு பண்புகளும் ஆ-வாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றது. அறுகு என்பது சாதாரணமாகத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை தழும்பிய படிமவாக்கம். வாமனாவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தகது.

சிறிய என்ற கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமா - ஆற்றலா - ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெறுமை உணர்த்தப்படுவது நினைவுக்குரியது.

தொகுப்பு
திருமதி : பவாணி ஸ்ரீராம்குமார்

## மனிதனை கண்டறிவது எப்படி?

நம்முள் பலதரப்பட்ட குண இயல்புடைய தரப்பினர் வாழ்கின்றனர். இருப்பினும் ஒரு சிலரின் நட்பு, அன்பு, நடத்தை வேறுபட்டதாக காணப்படுகின்றது. இதையடுத்து ஒருவன் சமூகத்தில் முகம் கொடுத்து வாழ்வது தொடர்பாக முனிவர் ஒருவரிடம் கருத்தைக் கேட்டான்.

அப்போது அவர் சமூகத்தில் மனிதனை இனம் காண்பது இலகுவானது எனக்கூறி. 'ஐந்து டம்ளர்" களில் நீரை கொண்டவர சொன்னார்.

1ம் - டம்ளரில் 'கல்" ஒன்றை இட்டார் அப்போது அது அமிழ்ந்து போனது. இவ்வாறே ஒரு சிலர் எதையும் பொருட்படுத்தாது இறுக்கமான மனனிலையுடன் வாழ்கின்றான் என்றார்.

2ம் - டம்ளரில் 'பஞ்சை" இட்டார் அது நீர் முழுவதையும் உறிஞ்சிக் கொண்டது இவ்வாறே ஒரு சிலர் சகல இன்பத்தையும் தானே அனுபவிக்க வேண்டும் எனப் பேராசைப்படுகின்றான் என்றார்.

3ம் - டம்ளரில் 'களிமண்ணை" இட்டார் அது நீர் முழுவதும் பரவி நீரை மாசுப்படுத்தியது. இவ்வாறே ஒரு சிலர் இருக்கும் இடத்தையே நாசம் செய்கின்றான் என்றார்.

4ம் - டம்ளரில் 'எண்ணையை" இட்டார் அது நீருடன் சேராது மிதந்தது. இவ்வாறே ஒரு சிலர் சூழலை ஒட்டி வாழாது ஒதுங்கி வாழ்கின்றான் என்றார்.

5ம் - டம்ளரில் 'சீனி" சிறிதளவை இட்டார் அது நீருடன் கலந்து போனது. இவ்வாறே ஒரு சிலர் இருக்குமிடம் இனிமையாகவும், அவர்கள் சமூகத்தில் கலந்து கண்ணுக்கு தெரியாமல் வாழ்கின்றனர் என்றார்.

இதில் நாம் எந்த தரப்பினர்?

தொகுப்பு
த. வத்சலா
தரம் : 5B ஆசிரியை.

## இறை புகழ்பாடும் திருமுறைகளின் சோழர்களின் பங்களிப்பு

உணர்வுகளால் நம்மவர் உள்ளங்களில் உருபெறுகின்ற உன்னத இறைவனை புகழ்ந்து பாடும் தேவாரத் திருப்பதிகங்கள் இறைவன் புகழ் கூற எமக்கு கிடைக்கப்பெற்ற அற்புதப் பொக்கிஷங்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் இறைத்தொண்டர்களாக வாழ்ந்த நால்வரின் திருவாய் மலர்ந்த இந்தத்திருமுறைகள் இவ்வுலகிற்கு ஒரு பெருமையாகும். அவ்வகையில் இத்திருமுறைகளின் சிறப்பு அத்தோடு இன்று எமக்கு இவற்றை அடைய, அருமை பெருமைகளை அறிய அத்திவாரமிட்டவர்கள் பற்றியும் சிறுதுளி நோக்குவோம்.

பல்லவர் காலம் என்று சொல்லப்படும் பக்தி மேலோங்கியிருந்த காலப்பகுதியிலேயே சைவத்திருமுறைகள் தோன்றின. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மணிவாசகர், சுந்தரர் ஆகிய நால்வரின் நல்லெண்ணங்களால் இவை உரு பெற்றன. ஆயினும் பல்லவர் கால வீழ்ச்சியின் பின்னர் இவற்றின் அருமைகளை உணர்ந்தவர்கள் இருக்கவில்லை. ஆயினும் எம்மை ஆளுகின்ற இறைவனின் புகழ் நிலைக்க விரும்பிய ஒரு நல்லுள்ளம்தான் இவ்வையகம் தன்னில் வந்து மலர்ந்தான்.

அவனே கலைகள் மிளிர்ந்த சோழர்களின் ஆட்சியில் தோன்றிய சோழமன்னன் அருள்மொழிவர்மன் முதலாம் இராஜராஜன் என்பான். இம்மன்னனே இன்று நமக்கு கிடைத்த தோத்திரங்களை தொகுப்பித்தவன். பண்ணமைத்துப்பாட வழிசெய்த பெருமைக்குரியவன். இம்மன்னன் ஓதுவார்களின் மூலமாக மூர்த்திகள் மூவர் அருளிய தோத்திரங்களை பாடக்கேட்டு மனம்மகிழ்ந்தார். ஆர்வத்தின் மிகுதியால் அவையனைத்தையும் பெற எண்ணினார். ஆனால் அது முடியாமல் போனதையிட்டு மனம் வருந்தினார். ஆயினும் நம்பியாண்டார் நம்பி மூலம் தேவார ஏடுகள் தில்லையில் மறைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்தார்.

அரசன் திருநாரையூரிலுள்ள அந்தணச் சிறுவன் நம்பியாண்டார் நம்பியுடன் தில்லைக்குச் சென்றார். அங்கு தில்லை மூவாயிரவரை தேவார ஏடுகளை திருப்பி தருமாறு கேட்டனர். அவர்களோ தேவாரத்தை பாடியருளிய மூவரும் வந்தாலன்றி கதவு திறக்காது என்றனர். மனம் வருந்திய மன்னன் ஒருவாறு மனதைத்தேற்றி ஸ்ரீ நடராஜருக்கு விழா செய்து, அவ்விழாவில் மூவரின் உருவச்சிலைகளை உருவாக்கி வீதி வலம் வரச்செய்து அந்தணர்கள் உள்ளம் மகிழ்ந்து நிறைவு பெறச்செய்தார். பின்னர் அறை தானாகவே திறந்தது. அறை திறந்ததும் அங்கே மன்னன் கண்ட காட்சி அவனை மீண்டும் கலங்கவைத்தது. காரணம் ஏடுகள் எல்லாம் கரையானால் சேதமடைந்திருந்தன.

ஏடுகளை துப்பரவு செய்யும்போது பல ஏடுகள் அழிவுற்றதைக் கண்டு மன்னன் மிகவும் வருந்தினான். அப்போது 'இக்காலத்துக்குகந்தவை அழியாமல் இருக்கின்றன" என அசரீரி வாக்கு கேட்டது. மன்னன் கவலை நீத்தான். நம்பியாண்டார் நம்பியும் மன்னனின் எண்ணப்படி ஏடுகளை வகைப்படுத்தினார்.

திருஞானசம்பந்தர் அருளிய 384 திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளெனவும், திருநாவுக்கரசர் அருளச்செய்த 313 பதிகப்பாடல்களை அடுத்த மூன்று திருமுறைகள் எனவும், சுந்தரர் அருளிய தோத்திரங்களை ஏழாம் திருமுறையாகவும் தொகுத்தார். மேலும் திருவாசகத்தை எட்டாம் திருமுறை எனவும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பவற்றை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரத்தை பத்தாம் திருமுறையாகவும், கபிலதேவர், நக்கீரர், சேரமான் பெருமாள் முதலிய பன்னிருவர் பாடிய பிரபந்தங்களை பதினோராம் திருமுறையாகவும், பன்னிரெண்டாம் திருமுறையாக 12ம் நூற்றாண்டிலே அநபாயன் காலத்திலே சைவ சமய வரலாற்று தத்துவங்களை கூறும் சேக்கிழாரின் பெரிய புராணமும் தொகுக்கப்பட்டது.

இவ்வகையிலேயே இன்று நாம் காணும் தேவாரப்பாடல்கள் எமக்கு கிடைத்தன. திருமுறை ஓதுகையில் முதலிலும், இறுதியிலும் 'திருச்சிற்றம்பலம்" கூறுவோம். காரணம் என்னவெனில் தில்லை சிதம்பரமே முதன்மையான கோயில் என்பதாகும். இங்கு தேவாரங்கள் மீட்டெடுக்கப்பட்டதால் நாம் 'திருச்சிற்றம்பலம்" கூறும்போது மூர்த்தி, தலம், தேவாரம் பாடியோர் இராஜராஜன் அனைவரையும் நன்றி கூறும் வகையில் அமைகிறது.

பன்னிருத் திருமுறைகளாய் திகழும் இவை சைவர்களின் வாழ்விற்கான பேரின்ப வழியாகும். ஒவ்வொரு தினமும் இதனை பாடி இறையருள் பெறுவதோடு, உள்ளம் தூய்மை பெறுவோமாக!

தொகுப்பு
செல்வி. S. ஸ்ரீசுதாஜினி
ஆசிரியை.

## சைவ சித்தாந்தம்...

சைவ சித்தாந்தம் என்னும் தத்துவப்பரிவு சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடுகின்ற சமய நெறி சைவ சமயத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றது. சித்தாந்தம் என்பது சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை எனப்பொருள்படும். ஆன்மீகம் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து சிந்தித்து முடிந்த முடிவான காணப்பட்டதே சைவ சித்தாந்தம் ஆகும்.

இந்தியாவில் இந்து சமயத்தின் பெரும்பாலான தத்துவப்பிரிவுகள் வேதங்களையும் அவற்றின் இறுதி பகுதியாக கொள்ளப்படும் உபநிடதங்களையும் அடிப்படையாக கொண்டிருக்க சைவ சித்தாந்தம் வேதங்களையும், ஆகமங்களையும் அடிப்படையாக கொண்டுள்ள ஏராளமான ஆகமங்கள் உள்ளன. இவற்றுள் சில சைவ சமயத்திற்கும் வேறு சில வைணவ சமயத்திற்கும் மற்றவை சாக்த சமயத்திற்கும் உள்ளது. சைவ சித்தாந்தத்திற்கும் அடிப்படையான சைவ ஆகமங்கள். 28 ஆகும். இவற்றுள் தலையாயவை காமிகாகமம், காரணகமம் என்பனவாகும்.

சைவ சித்தாந்தம் விளக்கும் நூல்களில் சிறப்பானதாக கருதப்படுவது. மெய்கண்டார் எழுதிய சிவஞான போதம் ஆகும். இதனுடன் சேர்த்து பலரால் எழுதப்பட்ட 14 நூல்கள் சைவ சித்தாந்த தத்துவ விளக்க நூல்கள் ஆகும். சைவ சமயத்தின் கோட்பாடாக சைவ சித்தாந்தம் அமைந்துள்ளது. சைவ சித்தாந்தமானது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள் பற்றி கூறுகின்றது. இவற்றை முறையே இறை, உயிர், தளை எனவும் கூறுவர். இதுவே சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட சைவ சமயத்தின் கோட்பாடாகும்

தொகுப்பு
திருமதி. சுஹாஷினி நவரட்ணம்
ஆசிரியை.

## என் சிந்தையில் உதித்த நவராத்திரி

சிவனுக்கு ஒரு ராத்திரி அது சிவராத்திரி
சிவசக்திக்கு ஒரு ராத்திரி அது நவராத்திரி

மலைமகளாய் உணர்த்துவதோ வீரத்ததை - என்றும்
திருமகளாய் வழங்குவதோ செல்வத்தை
கலை மகளாய் புகட்டுவதோ கல்வியை - இவை
மூன்றும் ஆக்கிரமிப்பதோ நவராத்திரி விழாவை

பகைவரை வென்று வாழ்ந்திடவே - என்றும்
பயமில்லாமல் பல நன்மைகள் செய்திடவே
என்றுமே உன்னோடு இருப்பதோ வீரம் - என
எமக்கு உரைத்திடும் சக்தியே துர்க்கையம்மா,

பசி பட்டினி இன்றி வாழ்ந்திடவும் - உன்னை
பலர் மதித்து நிதம் பேசிடவும்
முதல்வனாய் இருப்பது செல்வமே - என
முழக்கமிட்டு கூறுபவர் லக்ஷ்மி தாயே,

மூடர்களாய் எம்மை வளர்க்காமல் - உடுத்த
உடையில்லா உருவங்களாய் எம்மை ஒதுக்காமல்
ஆ என்றால் அலறிக்கொண்டு ஓடாத
அற்புத பிறவியாய் எம்மை படைத்திரம்மா,

சக்தி மீது அன்பு கொண்டு
நவராத்திரி விரதம் இருந்து - கூட்டு
பாரரணை பஜனை செய்தோம் - எம்
பாவமெல்லாம் நீக்கிடம்மா,

பள்ளி வயதை கடந்திடாத நாம்
கல்வி எனும் கலையைப் பெற்று
கம்பீரமாய் வாழ்வில் நடைபோட
இருகரம் ஏந்திடுவோம் இறைவனிடம்!

சி. கவின்
2013 A/L Batch

## தஞ்சைப் பெருங்கோயில்

தமிழக வரலாற்றின், பொற்காலம் எனப் போற்றப்படும் சோழர் வரலாற்றில், மாமன்னன் ராஜராஜ சோழன் சிறப்பிடம் பெற்று விளங்குகிறான். இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் பிறந்த மைந்தன் அவன். அருள்மொழிவர்மன் என்பது இவனது இயற்பெயர். கேரளாந்தகன், சிங்களாந்தகன், மும்முடி சோழன், சிவபாத சேகரன், திருமுறைக்கண்ட சோழன், சத்திரிய சிகாமணி, ராஜாஸ்ரயன் என்ற பல சிறப்பு பெயர்களை கொண்டு விளங்கினான்.

'செந்திரு மடந்தை மண் ஸ்ரீ ராஜராஜன் இந்திர சமானன் இராஜசர் வக்ஞன்" என்று, திருக்கோயிலூர் கோவிலிலுள்ள ஒரு கல்வெட்டு புகழ்ந்து பேசுகிறது. ஐப்பசி மாதம் சதய நாளில் ராஜராஜன் பிறந்தான். அவனது பிறந்த நாளான ஐப்பசி சதய நாளில் திருவெண்காடு, திருப்புகலூர், எண்ணாயிரம், திருவிடந்தை, திருநந்திக்கரை, கோபுரப்பட்டி (பாச்சூர்) போன்ற பல கோவில்களில் சிறப்பான வழிபாடுகள் நடக்க, தானம் அளிக்கப்பட்டதாக கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

தஞ்சைப் பெரிய கோவிலில் சதயத் திருவிழா, 12 நாட்கள் சிறப்பாக நடந்ததை, அக்கோவில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இந்நாட்களில் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் போது அபிஷேக நீரில் ஏலக்காய், செண்பக மொட்டுகள் போடப்பட்டு மிகுந்த நறுமணத்துடன் அபிஷேகம் செய்யப்பட்டது. ராஜராஜ சோழனால் பலத்திருக்கோவில்கள் கட்டப் பெற்றன. அவற்றில், தஞ்சைப் பெரிய கோவில் தலை சிறந்த ஒப்பற்றக் கோவிலாகத் திகழ்கிறது. கட்டடக்கலை, சிற்பக்கலை, செப்புத்திருமேனிகள் வார்ப்புக்கலை, ஓவியக்கலை, கல்வெட்டுகள் கூறும் செய்திகள் ஆகிய அனைத்துக்கும் சிறப்பிடமாகத் திகழ்கிறது. எனவே இக்கோவிலை ஓர் ஒப்பற்ற கலை வரலாற்றுக் களஞ்சியம் எனக் கூறுவதில் மிகையில்லை!

இக்கோவில், உலக வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையால், சீரிய முறையில் போற்றிப் பராமரிக்கப்படுவதை கண்டு மகிழ்ச்சியடைகிறோம்! பிரகதீசுவரர் கோவில் என்று இன்று அழைக்கப்பட்டாலும் 'ராஜராஜீச்சுரம்" என்றும், "ஸ்ரீ ராஜராஜீசுவர முடையார் கோவில்" எனவும் கல்வெட்டுகளில் உள்ளதைக் காணலாம். 'பாண்டிய குலாசனி வளநாட்டு தஞ்சாவூர் கூற்றுத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்" என்று, இப்பெரும் கோவிலை கட்டியதை பெருமிதத்தோடு ராஜராஜன் கூறுகின்றான். அடித்தளம் முதல் சிகரம் வரை கற்களைக்கொண்டு கட்டப்பட்டதால் இக்கோயில் 'கற்றளி" என அழைக்கப்படுகிறது.

தமிழகத்திலேயே இக்கோவிலில் மட்டும்தான் சோழர் கால ஓவியங்கள் காணப்படுவது சிறப்பாகும். மேலும், நாயக்கர் கால ஓவியங்களும், மராட்டியர் கால ஓவியங்களும் இக்கோவிலில் காணப்படுகின்றன. இத்திருக்கோவிலில் உலகம் முழுவதுடைய நாயகி என பெயர் கொண்ட அருள் வழங்கும் அம்மன் கோவில் 13ம் நூற்றாண்டில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். திருச்சுற்றில் வடமேற்கில் காணப்படும் சுப்ரமணிய கோவில் தஞ்சை நாயக்க மன்னர்களின் கலைப்படைப்பாகும். திருச்சுற்றில் தென்மேற்கில் காணப்படும் விநாயகர்சந்நிதிமராட்டியர் கால கலைப்படைப்பாகும். எனவே, தஞ்சை பெரிய கோவில் ஒப்பற்ற ஓர் கலை வரலாற்று களஞ்சியமாகத் திகழ்கிறது என்றால் மிகையில்லை! இத்தகைய சிறப்பு வாய்ந்த தஞ்சை பெருங்கோயிலை போற்றிப் பாதுகாப்போம்.

தொகுப்பு
கே. பிரவீணா
தரம் : 4B ஆசிரியை.

## மனிதம் அற்ற மனிதன்

மனிதன் - வேற்றுமையின் ஊற்று
மனிதன் - பொறுமையின் இருப்பிடம்
மனிதன் - பெருமையின் சிறப்பிடம்

மனிதன் - இறந்தவர்க்கு கூட சமயங்களின்
பெயரில் சமாதி - மதில்கள் கட்டி
பிரித்து வைக்கும் பிறப்பிடம்
ஏன் முறைக்கிறாய் - ஏன் திகைக்கிறாய்

Roman Catholic Section -
Christian Section -
Buddhist Section -
Hindu Section -
Islam Section -

என நீ Cemetery இல்
பெயர் பலகை - Name Board
பொறிக்கப்பட்டுள்ளது நீ
காணவில்லை போலும்
ஒட்டு மொத்தத்தில்
மனிதன் மனிதம் அற்றவன்!
இப்போது ஒத்துக்கொள்கிறாயா?

தொகுப்பு
அன்ரன் ஜோசப்
ஆங்கில இலக்கிய துறை ஆசிரியர்

## சைவப் பண்புகள்

01. எல்லோரிடமும் இனிமையாக பேசுவோம்.

02. எல்லோரிடமும் அன்பாக பழகுவோம்.

03. எப்போதும் உண்மை பேசுவோம்.

04. பெற்றோரை பணிவோம்.

05. காலையும், மாலையும் இறைவனை வணங்குவோம்.

06. ஏழைகளுக்கு உதவி புரிவோம்.

07. பெரியோரையும், மூத்தோரையும் கனம் பண்ணுவோம்.

08. நாளாந்தம் கடமைகளை தவறாது செய்வோம்.

09. பாடசாலையில் சமய ஆராதனைகளில் பங்கு பற்றுவோம்.

10. நல்ல பழக்க வழக்கங்களை பின்பற்றி நடப்போம்.

க. கனிஷ்வர்

தரம் : 01B

## விநாயகர்

எந்தக் காரியத்தையும் விநாயகரை வணங்கி விட்டுத்தான் தொடங்குகிறோம். ஒரு கடிதம் எழுதும்போது கூட பிள்ளையார் சுழி போட்டுத்தான் ஆரம்பிக்கின்றோம். பிள்ளையார் சுழி என்பது 'ஓம்" என்ற மந்திரத்தின் சுருக்கம். அதே 'உ" என்று போட்டு எழுதுகிறோம். பிள்ளையாரை நினைத்து எக்காரியத்தையும் ஆரம்பிப்பது சைவ மரபு. எந்த கோவிலுக்கு சென்றாலும் முதல் வணக்கம் பிள்ளையாருக்கு உரியது.

கணபதி ஞானத்தின் திருவுருவம். அதனால் அவர் நம்மை எப்பொழுதும் நல்வழியில் நடத்துவார். தவறுகள் ஏற்படாமல் பாதுகாப்பார். ஆகையால் நாம் நல்வழியிற் காரிய சித்தி ஏற்பட முதலில் அவருடைய அருளை நாடுகிறோம்.

விநாயகரின் தோற்றம் வித்தியாசமானது. யானை முகமும், பேழை வயிறும் உண்டு. பேழை வயிறு இருப்பதன் பொருள், உலகத்தை தன்னுள் அடக்கியவர் என்பதாகும்.

ரா. ஹரிதர்ஷன்
தரம் : 05B

## அம்பாள்

உலகத்து நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
உன்பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ

கலகத் தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி,
கருத்தினுள்ளே புகுந்துவிட்டாள் எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி.

எல். லிக்ஷான்
தரம் : 02B

## விபூதி இயல்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயத்திற்கு பெயர் யாது?
சைவ சமயம்

சைவ சமயிகள் சரீரத்திலே அவசியமாக தரிக்க வேண்டிய அடையாளம் யாது?
விபூதி

விபூதி ஆவது யாது?
பசுவின் சானத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாவது திருநீறு.

எந்த நிற விபூதி தரிக்க தக்கது?
வெள்ளை நிற விபூதி

விபூதியை எதில் வைத்து கொண்டு தரித்தல் வேண்டும்?
பட்டுப்பையிலேனும் சம்புடத்திலேனும் எடுத்து வைத்து தரித்தல் வேண்டும்.

விபூதி எந்த திக்காக இருந்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?
வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும் தரிக்லாம்.

விபூதியை எவ்வாறு தரித்தல் வேண்டும்?
நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து 'சிவசிவ" என்று சொல்லி வலக்கையில் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

வை. கவிஷேக்
தரம் : 03B

## சுந்தரர்

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் ஊரிலே சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்தார். இவருடைய தந்தையார் பெயர் சடையனார். தாயார் பெயர் இசைஞானியார். சுந்தரருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நம்பியாரூரர். அவர் சிறு குழந்தையாக இருக்கும் பொழுது நரசிங்க முனையர் என்னும் மன்னரால் செல்வச் செழிப்போடு வளர்க்கப்பட்டார். திருமண பருவம் அடைந்த அவர் மணக்கோலத்தோடு கல்யாணப்பந்தலில் நிற்கும் போது சிவபெருமான் பிராமண வடிவத்தோடு எழுந்தருளி சுந்தரரைத் தடுத்தாட் கொண்டார். சிவபெருமான் சுந்தரருக்குப் பொதி சோறு கொடுத்தார், நெல்லைப் பெற்றுக்கொடுத்தார். செங்கட்டிகளைப் பொன் கட்டிகளாக மாற்றினார், பரவையாரிடம் தூது சென்றார், சுந்தரர் இறையருளால் முதலை உண்ட பாலகனை மீட்டார். அவர் முதலாவதாக 'பித்தா பிறை சூடி..." என தொடங்கும் தேவாரப் பதிகத்தை பாடினார்.

சுலோக்ஷன்
தரம் : 05B

## கிருஷ்ணன்

கண்ணன் கோகுலத்தில் வளர்ந்து வந்தான். பசுக்களை மேய்க்கும் ஆயர்கள் கண்ணனின் புல்லாங்குழலின் இனிய நாதத்தை கேட்டு மகிழ்வர். கர்வம் கொண்ட இந்திரனை அடக்க வேண்டும் என எண்ணினான். மழையை தரும் இந்திரனுக்கு செய்யும் பூசையை நிறுத்தும்படி தனது தாயார் யசோதையிடம் கூறினான். இந்திரனுக்கு செய்யும் பூசை நிறுத்தப்பட்டதால் இந்திரன் கோபமடைந்தான். இதனால் மழை, பெருங்காற்று என்னும் அனர்த்தங்களை உருவாக்கினான். மக்கள் என்ன செய்வதென்றறியாது பயந்தனர். மக்களைக் காப்பாற்ற கண்ணன் விரும்பினான். கோவர்தன மலையைத் தூக்கி குடையாக பிடித்தான். மக்கள் அனைவரும் அம்மலைக்கு கீழ் பாதிப்பின்றி நின்றனர். இந்நிகழ்ச்சியால் இந்திரன் கர்வம் அடங்கியது. மக்கள் அனைவரையும் காப்பாற்றியதால் அவர்கள் கண்ணனை காவல் தெய்வமாக போற்றினர்.

'கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வர்ணமாம்
வெண்ணை உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்...
குழலினாலே மாடுகள் கூடச் செய்த கண்ணனாம்
கூட்டமாகக் கோபியர் கூட ஆடும் கண்ணனாம்..."

க. கஜந்தன்
தரம் : 05B

## சிவமூர்த்தங்கள்

01. நடேசர்
02. சந்திரசேகரர்
03. உமாமகேசர்
04. இடபாருடர்
05. கல்யாணசுந்தரர்
06. பிட்சாடனர்
07. காமாரி
08. காலாரி
09. திரிபுராரி
10. சலந்தராரி
11. மாதங்காரி
12. வீரபத்திரர்
13. ஹரியர்த்தர்
14. அர்த்தநாரீசுரர்
15. கிராதர்
16. கங்காளர்
17. சண்டேசானுக்கிரகர்
18. நீலகண்டர்
19. சக்கரப்பிரதர்
20. கயமுகானுக்கிரகர்
21. சோமஸ்கந்தர்
22. ஏகபாதர்
23. சுகாசினர்
24. தட்சணாமூர்த்தி
25. லிங்கோற்பவர்

வி. துவாரகன்
தரம் : 05B

## எம் சக்தி தாய்

கல்வி முதல் வீரம் வரை
கனப்பொழுதில் தோன்றும்
கவனமாக பிரசுரிக்க
கடவுள் அருள் வேண்டும்.

கடவுளையும் கண்ணியமாய்
மாற்றுகின்ற காலம்
கண்ணிமைக்கும் நேரமெல்லாம்
கடவுளோடு நாடு.

சாதியின்றி பேதமின்றி
தாங்குகின்ற சக்தி
தஞ்சமென்று வந்தவரை
தாங்கவைக்கும் சக்தி.

வந்தவரை வாழவைத்து
நொந்தவரை தேற்றிவைத்து
அந்தம் வரை காத்து நின்று
வாழவைக்கும் எம் சக்தி தாயை
- போற்றுவோம்.

ஸி. சிவகஜன்
தரம் : 05B

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

இலங்கைத் தீவு பெற்ற அற்புத குடிமான்களில் பெயர் பெற்ற அறிஞர். தமிழையும், சைவத்தையும் தலைத்தோங்க செய்ய அரும்பாடுபட்ட மகான். கல்விப் புலமையும் நாவன்மையும் கொண்ட நாவலர் பெருமான் சைவ தமிழ் பணிக்காக திருவாவடுத்துறை ஆதினத்தில் 'நாவலர்" என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறு சிறப்புப் புலமைக்கொண்ட ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப்பிள்ளைக்கும், சிவகாமி அம்மையாருக்கும் மகனாக 1882ம் ஆண்டு மார்கழி எட்டாம் திகதி பிறந்தார்.

ஷான்

## உத்தமவாழ்வு

ஓர் ஊரில் பெருந்தன்மையுள்ள செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் சிவைக்கியர். அவருக்கு ஒரே ஒரு புத்திரன் இருந்தான் அதனால் தந்தைக்கு மகன் மீது அதிக அன்பு அதனால் மகனை அதிகம் கண்டிப்பதில்லை. அச்சிறுவன் துஷ்ட்ட பிள்ளைகளோடு சேர்ந்ததனால் தீய பழக்கவழக்கங்களை பழகிவிட்டான். அதனால் சிவக்கியருக்கு மிக்க மன வர்த்தம். சிறுவனுக்கு பத்து வயது ஆகிவிட்டது. அவனை திருத்துவதற்கு கடவுள் வழிபாடே நல்ல வழி என்று நினைத்து தான் கோயிலுக்கு கோகும்போது தன்னுடன் வர வேண்டும் என்று மகனிடம் கூறினார். சிறுவன் ஒன்றும் பேசாமல் நின்றான். அப்போது சிவக்கியர் 'என்ன மகனே, நாங்கள் மிருகங்களா? உணவு தேடுவதிலும், உண்பதிலும், உலாவித்திரிவதிலும், உறங்குவதிலும் காலத்தை போக்குவதற்கு? நீயும் அவற்றைப் போலத்தான் காலத்தை போக்க எண்ணுகின்றாயா? இந்த அருமையான மனித பிறவி நமக்கு கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி அவரிலே பற்று வைத்து அவரோடு சேருவதற்காகவே." ஆதலால் உத்தமனாக வாழ வேண்டும்.

ஷான்
தரம் : 05B

## சுவாமி அறை

நாம் தினமும் இறைவனை வணங்குதல் வேண்டும். இறைவனை வீட்டில் அமைக்கும் அறையே சுவாமி அறையாகும். இது அமைதியாகவும் புனிதமாகவும் இருக்கவேண்டும். சுவாமி அறை மாடத்தில் சுவாமி படங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

சுவாமி அறையில் தினசரி காலையிலும், மாலையிலும் விளக்கு ஏற்றுவோம் பூக்களை சுவாமிக்கு சாற்றுவோம், தூபம் இடுவோம், தீபம் காட்டுவோம். 'சிவ சிவ" என்று கூறி திருநீறு அணிவோம், சுவாமி அறையில் இறைவனை வணங்குவோம். தேவாரங்கள் பாடுவோம். ஒரு வீட்டில் முக்கியமான அறை சுவாமி அறையாகும்.

'இறைவனை வணங்கி அருள் பெறுவோம்"

பி.லக்ஷான்
தரம் : 05B

## விநாயகர்

01. நாம் எந்தக் காரியத்தையும் தொடங்க முன்னும் விநாயகரை வணங்கியே தொடங்குவோம்.

02. விநாயகருக்கு யானை முகமும் ஐந்து கரங்களும் உண்டு.

03. விநாயகரின் வாகனம் பெருச்சாளி ஆகும் .

04. விநாயகருக்கு பிடித்த உணவுகள் கொள்ளுக்கட்டை, மோதகம், அவல், கடலை என்பன ஆகும்.

05. பிள்ளையாருக்கு அருகம்புல் மிகவும் விருப்பமான பொருளாகும்.

06. விநாயகருக்கு தோப்புக்கரனம் போட்டு வணங்க வேண்டும்.

வி. கவிவர்னன்
தரம் : 03B

## அறிவு

தெரிந்ததை தெரியும் என்றும் தெரியாததை தெரியாது என்றும் சொல்வதுதான் உண்மையான அறிவு.

அறிவைப்போல் அடக்கத்தை சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரைப் போல் உலகத்தில் வேறு யாருமில்லை.

அறிவில்லாதவர்களின் கண்ணியம் பலவீனமானது, பயனற்றது என்றால் கண்ணியம் இல்லாதவர்களிடம் உள்ள அறிவு ஆபத்தானது, மிகவும் அஞ்சத்தக்கது.

த. பகீரதன்
தரம் : 02B

## கோயில் தொண்டுகள்

கோயிலில் தொண்டுகள் செய்வோம்
கோயிலில் என்ன தொண்டுகள் செய்யலாம்?

01. கோயிலைக் கூட்டலாம்.
02. மண்டபதை கழுவலாம்.
03. பாத்திரங்களை விளக்கலாம்.
04. பூ மரங்களுக்கு நீர் ஊற்றலாம்.
05. பூப்பறிக்கலாம், மாலைக்கட்லாம்.
06. தோரணம் கட்டலாம்.
07. மணி அடிக்கலாம்.
08. தோத்திரம் பாடலாம்.

பி.லொஷான்
தரம் : 02B

## நகுலேஸ்வரம்

இலங்கையிலே யாழ்ப்பாணக் குடா நாட்டில் வட மேற்கு திசையில் நகுலேஸ்வரம் அமைந்துள்ளது. எமது நாட்டில் உள்ள பழமை வாய்ந்த சிவத்தலங்களுள் இதுவும் ஒன்றாகும். இந்தியாவிலே கீரி முகத்தை உடைய முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அதனால் அவரை எல்லோரும் நகுலமுனிவர் என்றே அழைத்தனர்.

அவர் நகுலேஸ்வர ஆலயத்துக்கு வந்தார். ஆலயத்தின் அருகிலுள்ள தீர்த்தத்தில் நீராடி தலத்திலுள்ள இறைவனை வணங்கினார். அவருடைய கீரி முகம் மனித முகமாக மாறியது. அதன் காரணமாக இவ்விடம் 'கீரிமலை" எனும் பெயரை பெற்றது. நகுலம் என்பது கீரியை குறிக்கும். எனவே இங்குள்ள திருத்தலத்தை நகுலேஸ்வரம் என்று அழைக்கின்றனர்.

**நகுல முனிவரின் பிதிர்ச்சாபம் நீங்கிய இப்புனித தீர்த்தத்தில், ஆடி, அமாவாசையன்று இறந்தவர்களுக்கு பிதிர் கடன் நிறைவேற்றப்படுகின்றது.**

அர்ஜுன்
தரம் : 05B

## திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரம் மன்னாரில் மாந்தோட்டத்தில் அமைந்துள்ளது.

இங்குள்ள இறைவனின் பெயர் திருக்கேதீச்சரநாதர்.

இறைவியின் பெயர் கௌரியம்பாள்.

இங்குப் பாலாவித் தீர்த்தம் உள்ளது.

இங்கு மிகப்பழமையான மகாலிங்கம் உள்ளது.

நாமும் திருக்கேதீச்சரம் சென்று இறைவனை வழிபடுவோம்.

கபிஷன்
தரம் : 02B



P.Ramyan
13B Com



N.Rushanthan
13B Com



S.Soori
13B Com



P.MaduKanth
13B Com



R.Jaganath
13B Com

# நவராத்திரி நோன்பு

இது புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் சக்தியை குறித்து நோற்க்கப்படும் நோன்பாகும். இது தட்சணாயன் காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். உத்தராயணத்தில் வசந்த நவராத்திரியும் தட்சணாயன காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும். இவை இரண்டிலும் புரட்டாதி மாதத்தில் நோற்க்கப்படும் சாரதா நவராத்திரியையே நாம் எல்லோரும் கைக்கொள்ளுகின்றோம்.

நவராத்திரி பூஜை புரட்டாதி மாத்தில் அமாவாசை கழிந்த பூர்வபட்ச பிரதமை திதியில் ஆரம்பித்து நவமி முடியச்செய்ய வேண்டும் என்று காரணாகமம் கூறுகின்றது. நோன்பு சாரதா நவராத்திரி நோன்பாகும். மகா சங்கார காலத்தின் முடிவில் இறைவன் உலகத்தை உண்டாக்க விரும்புகின்றான். அப்போது இச்சை என்ற சக்தி தோன்றுகின்றது. பின் அதை எவ்வாறு என்று அறிகின்றான். அப்போது ஞானசக்தி தோன்றுகின்றது பின் கிரியா சக்தியினால் உலகைப் படைக்கின்றான். இக்கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது.

நவராத்திரியில் முதல் மூன்று நாளும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிகாலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான். நடுவில்லுள்ள மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிகாலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின்றான். இறுதி மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிகாலம். இதில் இறைவன் முன் அறிந்தவாறே அருள் வழங்குகின்றான் என்பது. சிவாகமத்தின் உள்ளுறையாகும். ஆலயங்களிலும், இல்லங்களிலும் பிம்பம், கும்பம் இவைகளால் ஒன்பது நாட்களிலும் வழிபடுபவர்கள் நவராத்திரிக்கு வேண்டிய பூசைக்குத் தேவையான பொருட்களை அமாவாசை அன்று சேகரித்துக்கொண்டு அன்று ஒரு வேளை உணவு உண்டு பிரதமையில் பூஜை தொடங்க வேண்டும். புனுகு கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, சந்தனம், அகிற்பட்டை, பன்னீர் இவைகளுடன் கூடிய அஷ்ட கந்தகம் சாத்தித் துதித்துப் பலவித ஆடல் பாடல்களால் தேவியை மகிழச்செய்ய வேண்டும்.

நவராத்திரியில் துர்க்காதேவி மகிஷாசுரனுடன் எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாம் நாள் போரின் போது மகிஷாசுரனை வதம் செய்தாள் என்றும் இது நவமியில் நிகழ்ந்ததாகவும். மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூசை செய்து கொண்டாடிய படியால் விஜய தசமி என்றும் வழங்கலாயிற்று என்று சொல்வது உண்டு.

ஆலயங்களில் விஜயதசமி அன்று வன்னிமரத்துடன் கூடிய வாழை வெட்டுவது வழமை. பண்டாசுரடன் தேவி போர் செய்து அவனை அழிக்க முடியாமல் சிவபிரானை வழிப்பட்டு விஜயதசமியில் போர் செய்யும் போது அவன் வன்னிமரத்தில் ஒளிந்தான். தேவி வன்னிமரத்தை சங்கரித்து அசுரனை சங்காரம் செய்தாள் என்பர் இதுவே நாளடைவில் கன்னிவாழை வெட்டு என்று மருவியது.

விரதம் மேற்கொள்ளுவோர் அமாவாசையில் ஒரு வேலை உணவுண்டு பிரதமை தொடக்கம் பகல் உணவின்றி இரவு பூசை முடிந்தப்பின் பால் பழம் அல்லது பலகாரம் உண்பது நல்லது. ஒன்பதாவது நாளாகிய மகா நவமியன்று பட்ணியாய் இருந்து மறுநாள் விஜயதசமியன்று காலை ஒன்பது மணிக்கு முன் பாரணை செய்தல் வேண்டும். இயலாதவர்கள் முதல் எட்டு நாளும் பகல் ஒரு வேலை உணவருந்தி ஒன்பதாம் நாள் பால் பழம் மட்டும் உற்கொள்ளலாம். விஜயதசமியன்று காலையில் சுவையுள்ள உணவு பதார்த்தங்கள் தாயார்செய்து சக்திக்கு நிவேதித்து நவமியில் வைத்துள்ள புத்தகம் இசைக்கருவிகளை பராயணம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் பாரணையை பூர்த்தி செய்யலாம்.

நவராத்திரியில் ஸ்ரீ தேவியைத் துதித்து வழிபடுவோர்களுக்கு தேவியானவள் சகல சௌபாக்கியங்களையும் நல்குவாள் என்பது மட்டுமல்லாமல் வீட்டு பேறாகிய முத்தியையும் நல்குவாள் என்று காரணாகமம் கூறுவதாக சொல்லப்படுகின்றது.

ஷான்

தரம் : 05B

## நால்வர் அவதாரம்

சமயக்குரவர்களாகிய நால்வரும் மற்றவர்களை போன்றவர்கள் அல்லர். மற்றவர்கள் எல்லோரும் பிறந்தவர்கள். அவர்ர்கள் நால்வரும் அவதாரிகள். அவதாரம் என்றால் மேலிருந்து கிழே இறங்குதல் என்று பொருள். இறைவன் தமது மேலான நிலையிலிருந்து மனிதநிலைக்கு இறங்கித் திருவவதாரம் கொள்வார்.

உலகில் அறம் குறைந்து மறம் பெருகும் காலத்தில் இறைவன் அறத்தை காத்தற் பொருட்டும் அறவாழ்க்கையை அனைவருக்கும் உணர்த்தற் பொருட்டும் உலகில் அவதாரம் செய்தல் உண்மை பகவத் கீதையில் கண்ணபிரான் அறம் குறைந்து மறம் பெருகும்போது நான் உலகில் அவதாரம் செய்வேன். என்று கூறியதாக குறிக்கப்பட்டுள்ளது. எனவே சமக்குரவர் நால்வர் உருவினராய் இறைவன் திருவதாரம் கொண்டருளினார். என்பது உண்மை நிலை.

அடியார்களுக்கு அருள் செய்தற் பொருட்டும் உலகு உய்யும் பொருட்டும் இறைவன் பல்வேறு திருமேனிகள் கொண்டருளும் பெற்றியார். மனித குலத்தில் மலம் காரணமாய் பெறுகி நிறைந்த அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தை விளக்கவும், தீமையகற்றி நன்மையை பேருக்கவும், சீலம் மலிந்த சிவமணம் எங்கும் கமழச் செய்யவும் இறைவனே அந்நால்வராய் திருவுரு எடுத்து வெளிப்பட்டருளினார். எனவேதான் அவர்கள் நால்வரையும் அவதாரிகள் எனப் போற்றுகின்றனர்.

ரோஷிந்த்

தரம் : 05B

# நன்றி மறவாமை

இறைவன் எல்லா உயிர்களிலும் நிறைந்து நிற்பதாலேயே உலகமும், உயிர்களும் இயங்குகின்றன. எல்லோரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். இறைவனைப்போல் எம்மால் எதையும் படைக்க முடியாது. ஆகையால்தான் நாம் இறைவன் செய்த நன்றியை மறக்காமல் இருப்பதற்காக இறைவணக்கத்தை எமது பெரியோர் கட்டாயப்படுத்தியுள்ளனர். ஒருவருக்கொருவர் உதவி செய்யாவிட்டால் நாம் வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும். ஒருவருக்கு நாம் செய்யும் உதவியை விட பிறர் எமக்கு செய்யும் உதவியை மறக்கலாகாது. இதனையே 'உப்பிட்டவரை உள்ளவும் நினை" என்ற பழமொழி கூறுகின்றது. ஒருவர் செய்த உதவி சிறியதாயினும் அந்நேரத்தில் அவர் செய்தது மிக பெரியதாக இருக்கலாம், இதனை திருக்குறள் 'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது" எனக் கூறுகின்றது. நாம் எம்மை பெற்ற தாய் தந்தையருக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம். எனவே எந்நேரத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் நன்றி மறவாமை இருத்தல்வேண்டும்.

கனிஷ் அஷ்விந்த்

தரம் : 03B

## நவராத்திரி தினத்தில் ஒன்பது நாட்களும் செய்யவேண்டிய அபிஷேகங்கள்

| | | |
|---|---|---|
| முதலாம் நாள் | : | அரிசி மா |
| இரண்டாம் நாள் | : | கோதுமை மா |
| மூன்றாம் நாள் | : | முத்து |
| நான்காம் நாள் | : | அட்சதை |
| ஐந்தாம் நாள் | : | கடலை |
| ஆறாம் நாள் | : | பருப்பு |
| ஏழாம் நாள் | : | மலர் |
| எட்டாம் நாள் | : | காசு |
| ஒன்பதாம் நாள் | : | கற்பூரம் |

எம். நிருஷன்
தரம் : 04B

## விபூதி

சைவ சமயத்தவர் அணியவேண்டிய சைவ சமய சின்னங்கள் விபூதி, உருத்திராக்கம் என்பனவாகும். இவற்றில் நாள்தோறும் அணியப்படுவது விபூதியே.

விபூதி எனும் சொல்லின் பொருள் மேலான செல்வம் என்பதாகும். விபூதிக்கு திருநீறு என்றும் பெயருண்டு. விபூதியானது பசுவின் சாணத்தினால் செய்யப்படுகின்றது. விபூதியை அணியும் போது வடக்கு அல்லது கிழக்கு பக்கமாக பார்த்து நிலத்தில் சிந்தாத வண்ணம் அண்ணார்ந்து சிவ சிவ எனச் சொல்லித் தரித்தல் வேண்டும்.

விபூதியை காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேலைகளிலும், வழிப்பாட்டின் போதும், நித்திரைக்கு செல்லும் போதும், விசேட நாட்களின் போதும் தரித்தல் வேண்டும்.

விபூதியை அணிவதால் இறையுணர்வு ஏற்படும். பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கியதும் திருநீறே. எனவே இப்பெருஞ் செல்வத்தை நாமும் அணிவோமாக.

கனிஷ் அஷ்விந்த்
தரம் : 03B

## விநாயகர் பெருமானின் மூர்த்தங்கள்

வாழ்வில் இருள் போக்கித் தன்னை நாடி வருவோர்க்கு தத்துவ சொருபமாக அமர்ந்திருந்து அடியார்களின் விக்கினங்கள் தீர்த்து அருள் பாலித்துக்கொண்டிருப்பவர் விநாயகப் பெருமான் ஆவார்.

இவ்விநாயக பெருமானுக்கு பல்வேறு திருவுருவங்கள் உண்டு. இவை ஒவ்வொன்றும் பக்தி வழிநின்று வழிபடுவோருக்கு பேரின்பத்தையும் ஈடேற்றத்தினையும் கொடுக்கும் வகையில் திருவிளையாடல்கள் புரிந்த திருவுருவங்கள் ஆகும்.

இவ்வாறு அடியார்களது உள்ளப் பெருங்கோயிலில் நீக்கமற நிறைந்திருக்கும் பொருட்டு விநாயகப் பெருமானின் முப்பத்திரண்டு மூர்த்தங்களும், அவற்றின் தத்துவங்களும் விநாயகப் பெருமானின் மகிமையை விளக்குகின்றது.

எஸ். ஹரிகேஷன்
தரம் : 04B

## திருக்குறள்

கடவுள் வாழ்த்து

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு "வாயைத் திறந்ததும் 'அ" என்ற ஒலியே முதலில் வரும். எல்லா மொழிகளுக்கும் அடிப்படை 'அ" என்ற எழுத்துதான். அதுபோல உலகுக்கெல்லாம் அடிப்படை இயற்கையாகிய இறைவனே.

கல்வி

'தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்"
நல்ல நூல்களைத் படித்து உலக அறிவு பெற்றவர்கள் அந்தக் கல்வி இன்பத்தை மற்றவர்களுக்கு தந்து மகிழ்வார்கள்.

நட்பு

'நட்பிற்கு விற்றிருக்கை யாதெனில் கோட்பின்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை"
வேறுபாடு கருதாமல் முடியும் போதெல்லாம் நண்பனுக்கு உதவுவதே நல்ல நட்பாகும்.

ஆர். லிலோர்ஷன்
தரம் : 04B

## சமயச் சடங்குகளில் பயன்படுத்தும் கருவிகள்

**உடுக்கை**

கிராமப்புற கோயில்களில் பெரும்பாலும் வாசிக்கப்படும் ஒரு தோல் வாத்தியமாகும். இது கிராமிய இசையிலும் பிரதானமான வாத்தியமாகும் விசேடமாக மாரியம்மன் கோயில் சமயச் சடங்கின் போது இவ் வாத்தியம் இசைக்கப்படும். உலோகத்தால் செய்யப்பட்ட இரு பக்கமும் விரிந்து இடைசிறுத்து பருத்திருப்பதால் இதை இடைசருங்கு பறை என்றும் துடி என்னும் அழைப்பர். இதனிடையில் துனியால் சுற்றி இருக்கியும் தளர்த்துவதன் மூலமும் நாதத்தை வேறுபடுத்தி வாசிக்கலாம். உடுக்கை கையினால் வாசிக்கப்படும். கரகமாடும் போதும் உருவேற்றலின் போதும் பஜனைகளிலும் இவ்வாத்தியம் வாசிக்கப்படும்.

**தவண்டை**

மரத்தாலும் தோலாலும் செய்யப்பட்ட உடுக்கை ரூபத்தில் உள்ள பெரிய தாளக் கருவியே தவண்டை ஆகும். வழக்கமாக மாரியம்மன் கோவிலில் இக்கருவி வாசிப்பதை காணலாம். தவண்டை குச்சியால் அடித்து வாசிக்கப்படும்.

**தம்பட்டம்**

இது ஒரு இசைக்கருவியாகும். இதன் ஒரு பக்கம் தோலினால் மூடப்பட்டிருக்கும். டண் டண் டண் டனக்கு என்று கேட்கும் படியாக கிராம தேவதைகளின் திருவிழாக்களில் ஓர் இனத்தை சேர்ந்தவர்கள். தம்பட்டங்களை இரு குச்சியால் வாசிப்பதை காணலாம்.

பி. ரவிந்திரன்
தரம் : 8B

## மதுரை வீரன்

மலையக நாட்டார் தெய்வங்களுள் ஒருவன் தமிழ் நாட்டை சேர்ந்தவன் பொம்மான் என்ற பாளைய காரரிடம் வேலை செய்தவன் பொம்பி என்பவனை திருமணம் செய்தவன் பொம்பியில் கணவன் சிறந்த ஒரு வீரன் பல வகைகளில் ஆற்றல் பொருந்தியவன் பல்லாண்டு காலம் மலையக மக்களால் வழிபட படுபவன் மலையக இல்லங்களிலும் மர நிழல்களிலும் பெரிதும் வழிபடபடுபவன்.

சடங்கை அடிப்படையாக கொண்டு அவன் வழிபடப்படுவான் ஆதலால் பூசாரி மூலம் வழிப்படபடுகின்றான் பொங்கல் வைத்து வழிப்படப்படுகின்றான். பொங்கல் வேலையில் பறை, உடுக்கு, சங்கு, போன்ற இசை கருவிகளை இசைக்கப்படும்.

இவ்வேலையில் பூசாரி கலை ஆடுவார் கேட்க பிராசுகன் அனுகாமை நினைத்த காரியம் நிறை வேறுகல் என்பன அவனை வழி படுதல் மூலம் நிகழாமை நம்பிக்கையாகும். ஆதலால் மலையக மக்களால் இவன் வழிப்படபட்டு வருகின்றான்.

'நன்றி''

எம். ரஜீவன்

## குலதெய்வம்

உலகைப் படைத்தவர் கடவுள்.

எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர்.

அவர் என்றும் உள்ளவர்.

நாங்கள் தினமும் கடவுளை வணங்குவோம்.

அவர் அருள் பெறுவோம்.

சிவபெருமானின் சக்தி உமாதேவியார் அவர்தான் உலகத்தின் சக்தியாவார்.

உமாதேவியாருக்கு பல பெயர்கள் உண்டு.

அவரை எல்லோரும் வணங்குகின்றார்கள்.

'தனம் தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவமும்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பர்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடை கண்களே."

வை. தக்ஷில்
தரம் : 02B

## எம்மை ஈன்றோர்

எனக்கு உயிர் கொடுத்தவர் தந்தை.
உரு கொடுத்தவர் தாய்.
தாய்தந்தையின் அன்பிற்கு நிகரேதும் உண்டோ! இவ்வுலகில்.
கிடைத்தற்குரிய செல்வம் எம்மை பெற்று வளர்க்கும்
எம் அருமை பெற்றோருக்கு பலகோடி நன்றிகள்.

எம். டிரோன்
தரம் : 02B

## ஆழ்வார்கள் பன்னிருவர்

01. பொய்கையாழ்வார்
02. பூதத்தாழ்வார்
03. பேயாழ்வார்
04. பெரியாழ்வார்
05. நம்மாழ்வார்
06. ஆண்டாள்
07. திருமழிசையாழ்வார்
08. மதுரகவியாழ்வார்
09. குலசேகராழ்வார்
10. பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

பி. துஷாகர்

தரம் : 05B

*All Type Setting & Designing*

**WISHNU GRAPHICS**

*Contact : 0779817489 / 077-9877704*

*E-mail : wishnu336@gmail.com*

# Commitee Members - 2012



**Standing Left To Right :**

G.Vithurshan, S.Lavanathan, S.Dinush Rewinth.

**Standing Left To Right 2nd Row :**

S.Abilash, R.Gajalakshan, V.Sanjeew, M.S.Shadurshan

**Seated Left To Right :**

N.Sindujan, (Vice Secretary), S.Kavin (Editor), P.Madukanth (Secretary), VEN.S.P.Nesakumar (Head Master)
Mr.K.Kanudraj (Master In Charge), P.Ramyan (President), S.Thavayogan (Treasurer), C.Krishanth (Vice President)

| கடவுள் | | பூசைக்குரியப்பூக்கள் |
|---|---|---|
| 01. விநாயகர் | : | அறுகு, செண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி |
| 02. சிவன் சங்குப்பூ, | : | கொன்றை, வில்வம், தும்பை, செம்பருத்தி |
| 03. விஷ்ணு | : | துளசி, மாதவி, குருந்தி. வாகை, மத்யாணி, கருங்கால் கொன்றை, முருக்கு,அலரி, செம்பரத்தை, செந்திலகம், மருங்கொழுந்து. |
| 04. பிரமன் | : | அலரி |
| 05. முருகன் | : | வெட்சி, கடம்பு, முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள். |
| 06. சூரியன் | : | தாமரை. |
| 07. உமா | : | நீலோற்பவம், தாமரை, சூரியகாந்தி, செம்பவள மள்ளி, நத்தியாவட்டை. |
| 08. இலக்குமி | : | நெய்தல், செந்தாமரை. |
| 09. சரஸ்வதி | : | வெண்தாமரை |
| 10. வரலட்சுமி | : | ஐந்து இதழ் கொண்ட தாழம்பூ. |
| 11. அக்னி | : | வன்னி. |

வி. பிரஷோஹரன்
தரம் : 06B

# இந்து மதம் தொன்மையானது என்பதற்கான ஆதாரங்கள்

## இந்து மதத்தின் ஒளி அலைகள்!

1500 ஆண்டுகளுக்கு முன் வரா மிஹிரரால் எழுதப்பட்ட 'ப்குதி ஸம்ஹிதை" என்ற நூலின் தாவரவியல், மிருக சாஸ்திரம் போன்ற விடங்கள் அடங்கியுள்ளன.

எடையில் பெரியதும் குறைந்த எடையுள்ளதை கவரும் - ஸ்ரீ ஹபாஸ் கராச்சியர் இதுவே சார்பியக்க கோட்பாடாகவும் 'கெப்ளரின் விதியாகவும்" கூறப்படுகின்றது.

Dr.P.C. ரே என்பவரின் 'இந்திய இரசாயன வரலாற்று: என்ற புத்தகத்தில் பண்டைய இந்துக்களின் இரசாயண அறிவு பற்றி அறியலாம்"

உலகம் உருண்டையானது நட்சத்திரங்கள் இசைவதில்லை போன்ற கருத்துக்களை 'சூரிய படிவம்" என்ற நூலில் ஆரியப்பட்டர் கூறியுள்ளார்.

'புவியீர்ப்பு விசை" பற்றி கி.பி 1114 - 1183 இல் 'சூரிய சித்தாந்தம்" என்ற நூலின் பாஸ் கராச்சாரியார் கூறியுள்ளார்.

கோலத்தின் மேற்பரப்பு 4^r2 கனவளவு 4/3^r3 என கி.பி 1220 ல் பாஸ்கராச்சாரியார் கூறியுள்ளார்.

தலைமுடியை நீளவாக்கில் பல கூறுகலாக பிரிக்கும் கருவிகள் இருந்ததை அதர்வன வேதம் உறுதிசெய்கிறது.

ஆர். கிருஷான்

தரம் : 8B

## சமயக்குரவர்கள் நால்வர் பற்றி சில விபரங்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் |
| தாய் | : | பகவதி அம்மையார் |
| தந்தை | : | சிவபாத விருதையார் |
| பிறந்த ஊர் | : | சீர்காழி |
| நின்ற நெறி | : | கிரியை |
| நின்ற மார்க்கம் | : | சற்புத்திர மார்க்கம் |
| பெற்ற முத்தி | : | சாமீபம் |

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசு நாயனார் |
| தாய் | : | மாதினியார் |
| தந்தை | : | புகழனார் |
| பிறந்த ஊர் | : | திருவாரூர் |
| நின்ற நெறி | : | சரியை |
| நின்ற மார்க்கம் | : | தாச மார்க்கம் |
| பெற்ற முத்தி | : | சாலோகம் |

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுந்தர மூர்த்தி நாயனார் |
| தாய் | : | இசை ஞானியார் |
| தந்தை | : | சடையனார் |
| பிறந்த ஊர் | : | திருநாவலூர் |
| நின்ற நெறி | : | யோகம் |
| நின்ற மார்க்கம் | : | சகமார்க்கம் |
| பெற்ற முத்தி | : | சாரூபம் |

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் |
| தாய் | : | பகவதி அம்மையார் |
| தந்தை | : | சிவபாத விருதையார் |
| பிறந்த ஊர் | : | சீர்காழி |
| நின்ற நெறி | : | கிரியை |
| நின்ற மார்க்கம் | : | சற்புத்திர மார்க்கம் |
| பெற்ற முத்தி | : | சாமீபம் |

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாணிக்கவாசகர் |
| தாய் | : | சிவஞானவதியார் |
| தந்தை | : | சம்புதாசிரியர் |
| பிறந்த ஊர் | : | திருவாதவூர் |
| நின்ற நெறி | : | ஞானம் |
| நின்ற மார்க்கம் | : | சன் மார்க்கம் |
| பெற்ற முத்தி | : | சாயுச்சியம் |

வீ. ஸேதுஷன்
தரம் : 7B

## சாமாதானமே வாராயோ!

துள்ளித்திரியும் மனிதர்களோ அழிக்கின்றனர்
பள்ளிப் பருவத்தில் ஆயுதங்கள் சுமக்கின்றனர்

பச்சை பசேலென காட்சி தந்த மலைகள் - எரிமலையாக மாறியது
வயல் வெளியில் காணப்படும் சேற்றுநீர் தீக்குழம்பாய் மாறியது

மனிதர்களின் புன்னகையோ சோகமாக காட்சி தந்தது
மனிதர்களின் கண்ணீரே வெள்ளப் பெருக்காய் காட்சி தந்தது

இன்பம் எனும் இசையில் வாழ்ந்தவன் மனிதன்
சோகம் எனும் எதிர் ஒலியில் வாழ்கின்றவன் மனிதன்

வென் புறாவே எமக்கு காட்சி தாராயோ!
பெற்றோரின் கண்ணீரை நிறுத்தி புன்னகை தாராயோ!

போர் நெருப்பை அனைக்கும் செலுமையாய்
போற்றி அழைக்கின்றோம் வாராயோ!

என். டில்ருக்ஷான்
தரம் : 10B

## கதிர்காமம்

ஈழநாட்டின் முருகப்பெருமான் எழுந்தருளியிருந்து அருள் புரியும் ஆலயங்களே அதிகம். இவ்வாலயங்களுக்குச் சென்று, முருகன் திருவருளை வேண்டி வழிபடும் அடியார்கள் தொகை மிக அதிகம். முருகன் ஆலயங்களில் மிக பிரசித்தி பெற்றது கதிர்காமம் எனும் திருத்தலம். இது ஈழநாட்டின் தென் பகுதியில் உள்ளது 'திஸ்ஸமகாராம" என்னும் இடத்திலிருந்து பன்னிரெண்டு கல் தொலைவில் இருக்கிறது.

கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டின் மத்தியில் ஆலயம் இருந்தாலும், யாதோர் அச்சமின்றிப் பல்லாயிரக்கணக்கான அடியார்கள், அங்கு யாத்திரை சென்று, முருகன் திருவருள் பெற்றுத் திரும்புகின்றனர். கதிர்காமத்தை தரிசிக்க வரும் அடியார்கள் முருகப் பெருமானின் திருவருளைப் பெறுவதற்குக் கதிரை மலைக்கு செல்வார்கள்.

செல்லக்கதிர்காமம், இவ்வாலயத்திலிருந்து நான்கு கல் தொலைவில் உண்டு. அடியார்கள் அங்கு சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் மாணிக்கப் பிள்ளையாரையும் தவறாது வழிபடுவர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் கதிர்காமப் பெருமானைக் குறித்து பல திருப்புகழ்ப் பாடி வணாங்கி, அவர் பெருள் பெற்றுள்ளார். நாமும் முருகப்பிரானை வழிபட்டு அவர் அருள் பெற்று உயர்வோமாக.

ஆர். டினுஷ்.
தரம் : 09B

## ஆலயமும் இறைவழிபாடும்

"ஆலயம்" அல்லது கோவில் என்பது இறைவனின் உறைவிடம் என்று பொருள்படும். எல்லா இடங்களிலும் இறைவன் இருக்கின்றான். என்றாலும் நம்மிடத்தில் கொண்ட கருணையினால் திருக்கோவிலில் நாம் காண வந்து உறைகின்றான்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்றி"
'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்ற பழமொழிகள் வழக்கில் உள்ளன.

இறைவனை ஒரு மனதோடு வழிபடுவதற்குரிய அமைதியான தூய இடம் ஆலயத்தின் மூலம் கிடைக்கின்றது. இறையருள் பெற வேண்டுமாயின் ஆலயத்துக்கு செல்ல வேண்டும்.

ஆலயம் தொழுவதால் நமது ஐம்பொறிகளும் ஒடுங்கி இறைவனை நாம் அறிவதற்கு முடியும். இறைவனது அழகிய திருவருட் காட்சி காதிற்கினிய மந்திர ஒலிகளும் மணியோசையும், நாசிக்கினிய நறுமணமும் நமது மனதை ஒருமுகப்படுத்தி கடவுள் பால் இட்டுச் செல்கின்றன.

கோயிலுக்கு தூய ஆடை அணிந்து திருநீறு, சந்தனம், குங்குமம் முதலான சமய சின்னங்களை அணிந்து செல்ல வேண்டும். தெய்வ சிந்தனையும் கோயிலை வலம் வந்து வணங்கி பின் உட்கோயில் சென்று வழிபட வேண்டும். மக்களின் நன்மை கருதி ஆலயங்களில் பூசைகள் நடைபெறுகின்றன.

நாமும் ஆலய தரிசனம் செய்து இறைவனருள் பெறுவோமாக!

யோ. கோஷிகவர்மன்
தரம் : 06B

## சிவமந்திரங்கள்

மனதை திடப்படுத்துவது எதுவோ அதுவே மந்திரம் எனப்படும். உரு ஏற திரு ஏறும் என திருமூலர் மந்திரத்தை ஜபிப்பதால் கிடைக்கும் நன்மையைப் பற்றி கூறுகிறார். திரு என்றால் பிரகாசமான என்று அர்தம், எல்லோரையும் கவரும் காந்த சக்தி என்றும் கூறலாம். 'வாழ்க வளமுடன்" என்பது ஓர் சக்தி வாய்ந்த மந்திரமே! சாதாரணமாக பேசும் வார்த்தைகளுக்கு சக்தி உண்டு. அதை விட திருமந்திரம், பெரிய புராணம், கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், திருப்பாவை முதலான தமிழ் ஆன்மீக படைப்புகளுக்கு நாம் அவற்றை பாடும்போதும், மனதிற்குள் ஜெபிக்கும்போதும் சக்தி அதிகம். இதற்கு சமமான சக்தி கொண்டவையே சமஸ்கிருத மந்திரங்கள். அவற்றில் பெரும்பாலான மந்திரங்களுக்கு அர்த்தம் கிடையாது. ஆனால் அவற்றை முறையாக உச்சரிக்கும்போது அது மனிதநலத்தை அதிகப்படுத்துகிறது. சில சிவமந்திரங்களும் அதனை ஜெபிப்பதால் கிடைக்கும் நன்மைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 'ஓம் ஜகங்" | : | கணபதியின் அருள் கிட்டும் |
| 'ஓம் நமசிவாய" | : | காலனை வெல்லலாம் |
| 'ஓம் நமசிவாய நம்" | : | பூதக்கூட்டங்கள் வசமாகும் |
| 'ஓம் நம பயப்புஞ் சிவாய நம்" | : | துன்பங்கள் விலகும் |
| 'சிவாய ஓம்" | : | திருமாலின் ஆற்றல் கிட்டும் |
| 'மயநசிவ சுவாகா" | : | ஆகாயத்தில் பறந்து செல்லும் சித்தர்கள் கீழிறங்கி வந்து சுமனக்குளிகை தருவார்கள். |
| | : | 'இங் சிங் சங் ஓம்" இவ் ஈசான மந்திரத்தை தனக்கு ஆபத்தான வேலைகளில் கைகளை மேலுயர்த்தி ஜெபிப்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் முழுமையாக நீங்குவான். |
| 'சிங் சிவாய ஓம்" | : | முக்காலமும் அறியும் ஆற்றல் உண்டாகும். |
| 'ஓங்கிறியும் ஓம் நமச்சிவாய" | : | வியாபாரம் நன்றாக நடக்கும். |
| 'லீங் சஹ்ம் சிவாய நம்" | : | பெண்கள் வசியம் உண்டாகும். |
| 'சவ்வும் நமசிவாய நம" | : | அரச போகம் கிட்டும் |

இவ்வாறு மந்திர ஜெபம் பற்றி சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

எஸ். அபிலாஷ்
தரம் : 08B

# இதிகாசங்கள்

இந்து மத வரலாற்றிலே இதிகாசங்கள் சிறந்த இடத்தை பெற்றுள்ளன. இதிகாசம் என்றால் இதி+இ+ஆச என்று பிரிக்கப்பட்டு, இப்படி முன்பு நடந்தது என்று பொருள்படும். இதனைப் பழைய வரலாற்றைக் கூறும் நூல் எனவும் நோக்கலாம். மகாபாரதம், இராமயணம் என்பன இதிகாசங்கலாகும். சிவரகசியம் என்னும் நூலும் இதிகாச நூல்களுள் அடங்கும்.

இராமாயணத்தை வடமொழியில் வால்மீகியும், தமிழில் கம்பரும் பாடியுள்ளனர். மகாபாரதத்தை வடமொழியில் வேதவியாசரும், தமிழில் வில்லிப்புத்தூர் ஆழ்வாரும் இயற்றினர்.

இதிகாசங்கள் தேவர், அசுரர், மக்கள் முதலியோர்களுகிடையில் நடந்த நிகழ்ச்சிகள், கதைகள் முதலியவற்றை விளக்குகின்றன. பெரும்பாலும் உபதேச பரம்பரையில் வந்த ஒரு கதையை பிரதானமாக கொண்டு பல கிளைக்கதைகளோடு சேர்த்து விரித்து கூறுகின்றன. இதிகாசங்கள் மானுட விழுமியங்களை ஒழுங்குப்படுத்தி கூறுவதுடன் வேத மந்திரங்களின் பொருளை நன்கு அறிய உதவும் நூல்களாகவும் உள்ளன.

மகாபாரதம் குருகுலத்தவரின் கதையைச் சொல்லுகின்றது. இராமயணம், சூரிய வம்சத்தில் தோன்றிய இராம பிரானுடைய கதையை கூறுகின்றது. ஆயினும் இவ்விரு நூல்களும் வினுவின் அவதாரக் கோட்ப்பாட்டினை முக்கியப்படுத்தி கூறும் அதே சமயம் சிவ வழிபாட்டின் சிறப்பினையும் கூறிச்செல்லும்.

இதிகாசங்கள் பொதுவாக மக்களின் நல்வாழ்க்கைக்கான போதனைகளை வழங்கும் நூல்களாகவும் அமைகின்றன. இன்னகாலத்தில் இன்னது செய்ய வேண்டும் என வழிவகைக் கூறுவதுடன், நல்லொழுக்கம், பொருமை, நேர்மை, அஞ்சாமை, தியாகம், சகோதரத்துவம், பிறர் மனை நயவாமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, முதலிய நற்பண்புகள் இந்நூல்களில் முக்கியதுவம் பெற்று விளங்குகின்றன. எனவே நாமும் இதிகாச நூல்களை கற்று அவை கூறும் நற்பண்புகளை கடைபிடித்து இறையருள் பெறுவோம்.

ரா. சௌதியாகரண்
தரம் : 11B

## ஒழுக்கமே சமயம்

வாழ்கையில் நித்தம் வேண்டியது ஒழுக்கமே - நீ
சமயம் என்ற மதத்தின் சேர்ந்து வலிமை பெற்றாய்
ஒரு மனிதனின் குணங்குறிகளை சொல்லவும் - அவன்
வாழ்வை திருத்தியமைக்கவும் நீ உதவுகின்றாய்!
உன்னை சைவர்கள் தம் வாழ்வில் தினமும் கடைப்பிடித்து
வளம் பெறுகின்றமை போற்றத்தக்கது!

நீ நித்திய கருமங்கள் என்ற சொல்லில் தொடங்கி - அதில்
காலையும், மாலையும் கடவுள் வணக்கமாகவும்!
சூரிய அஸ்தமனத்திற்கு முன் நித்திரை விட்டு
எழுப்பும் வழக்கமாகவும்!
கை, கால், முகம் கழுவி விபூதி தரித்தல் - போன்ற
கருமங்களில் உனது உருவமே ஒளிமயம்!

அஞ்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானமாகிய - மேலான
செல்வத்தை பெற விபூதியை அணிய வைத்தாய்!
தூய்மையான விபூதியை அணிய வைத்து மனிதனுடைய
ஒழுக்கமாகிய உன்னையும் தூய்மை பெற வைத்தாய்!
மானிடரானவன் ஆதிகாலத்தில் படிப்பறிவற்றவன் - ஆனால்
அவனுடைய ஒழுக்கம் அவனை படிப்பறிவு உள்ள
பண்பாளனாக
மாற்றி வைக்கும் ஒழுக்கமே சைவ ஒழுக்கமாகும்.

ச. சுரேஷ்
2013 A/L Batch

நாலவரும் நாற்பாதமும்

| | | |
|---|---|---|
| திருநாவுக்கரசர் | - | சரியை |
| திருஞானசம்பந்தர் | - | கிரியை |
| சுந்தரர் | - | யோகம் |
| மாணிக்கவாசகர் | - | ஞானம் |

சைவசமயி ஒருவனது இறுதி இலட்சியம் மோட்சம் அடைதல்.

சரியையில் சரியை யோக நெறிக்குள் அடங்கும் அட்டாங்கு யோகங்கள்

திருவிளக்கேற்றல் யோகம்

சரிசையில் கிரியை நியமம்

இறைவனை வழிபடுதல் இமயம்

சரியை யோகம்

வழிபடும் இறைவனை இறைவனை வழிபடல்

சரியையில் ஞானம்

மூன்று நாளும் பெறப்படும் அனுபனம்

சாயுச்சிய முத்தி என்றால் சிவனோடு ஆன்மா இரண்டறக் கலந்து நிற்றல்.

சரியை

சரியை என்பது சிவ ஆலயங்களும் சில அடியார்களும் செய்கின்ற தொண்டு

தரம் : 7B

## நால்வரும் நாட்பாதமும்

பிறப்புக்களின் மிகச் சிறந்தது மானிடப்பிறப்பாகும். ஆதலினால் தான் 'அரிது அரிது மானிடராதல் அரிது" என்றால் ஒளவைப் பிராட்டியார். மனிதன் பகுத்தறிவு உடையவன் ஆதலால் அவன் ஒருவரோடு பேசவும் கருத்து பரிமாற்றம் செய்து கொள்ளவும் உறவு கொண்டாடவும் முடிகிறது. இத்தகைய ஆற்றல் படைத்த மனிதனை நோக்கியே சமய நூல்கள் மனிதன் இவ்வுலகில் வாழ்வாக்கு வாழ்ந்து இறை இன்பத்தை அடைய வேண்டும் என்று வட்புறுத்துகின்றன.

இன்பம் இருவகைப்படும். இல்லற இன்பம், வீட்டின்பம் என்பனவாகும். இல்லறம் நிலையற்றது துன்பம் நிலைத்தது ஆனால் இவ்வின்பத்தை சிற்றின்பம் என்பர். மனிதன் அடையவேண்டிய பெயரின்பமாகும். பிரவாமையாகிய இன்பத்தை அடைய முயற்ச்சிப்பதே மனித பிறப்பின் இலட்சியமாக இருக்க வேண்டும். என்று சமய நூல்கள் குறிப்பிடும். வீட்டின்பம் வீடுவேறு, வீடுதலை மெய்யின்பம், முத்தி, பேரின்பம் என்பன ஒரு பொருட் சொற்கள் ஆகும். அப்பர் சுவாமிகள் தனது திருவங்க மாலைப் பதிகத்தில் வாழ்கை நிலையாமையையும் ஆன்மாவின் இலட்ச்சியத்தையும் பின்வருமாறு பாடியிருப்பது இங்கு அவதானிக்க தக்கதாகும்.

'உற்றா ராருளரோ - வுயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாவத்துரை கூத்தனல் லானமக்
உற்றா ராருள ரோ"

'தோடிக் கண்டுகொண்டேன் - திரு
மாவோடு நான் முகனும்
தேடோனாத் தேவனை யென்றுள்ளே
தேடிக் கண்டுக்கொண்டேன்."

பி. முருகஷாந்த்

தரம் : 09B

## திருஞான சம்பந்தர்

ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில், சோழ நாட்டில் சீர்காழி எனும் ஊரில் வாழ்ந்த கவுணியர் குலத்தை சேர்ந்த சிவபாதவிருதயாருக்கும், பகவதி அம்மையாருக்கும் திருவாதிரை நட்சத்திரத்தில் தோணியப்பர் அருளால் சம்பந்தர் அவதரித்தார்.

பிள்ளையாரின் மூன்றாவது வயதில் ஒரு நாள் தந்தையாருடன் தோணியப்பர் கோயிலுக்குச் சென்று அங்கு கோயிலில் உள்ள குளக்கரையில் குழந்தையை அமர்த்தி விட்டு தந்தையார் குளத்தில் இறங்கி நீராடினார். அவர் நீரில் மூழ்கியிருந்தபோது அவரை காணாது தவித்த குழந்தை கோயிற் கோபுரத்தை பார்த்து அம்மையே அப்பா என அழுதது. அக்குழந்தையின் அழுகுரலை கேட்ட தோணியப்பர் உமையுடன் இடப வாகனத்தில் தோன்றி, பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலை கறந்து, சிவஞானத்தை கலந்து ஊட்டுமாறு அம்மையிடம் கூறினார். அம்மையும் அவ்வாறே செய்தார்.

நீராடிவிட்டு வந்த சிவபாதவிருதயர் குழந்தையின் வாயில் பால் வடிந்திருப்பதை கண்டு, யார் உனக்கு பால் அருந்த தந்தது? எனக்கேட்டார். சம்பந்தர் கோயில் கோபுரத்தை சுட்டிகாட்டி 'தோடுடைய செவியன்..." எனும் பதிகத்தை பாடினார். தந்தையாரும் இறைவன் தன் குழந்தைக்கு அருள் செய்துள்ளான் என புரிந்து கொண்டார். அன்றிலிருந்து 'ஆளுடைய பிள்ளையார்" எனவும் 'சிவஞான சம்பந்தர்" எனவும் சம்பந்தர் அழைக்கப்பட்டார்.

எஸ். நிவேஷ்கர்
தரம் : 05B

## பஞ்ச புராணம்

சைவ ஆலயங்களில், பூசை வேளையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன வரிசை கிரமத்தில் ஓதப்படுகின்றது. அவை 'பஞ்சபுராணம்" எனப்படும். பஞ்சபுராணத்தைப் ஓதிய பின்னர் திருப்புகழ் பாடும் வழக்கமும் உள்ளது.

ஆலயங்களில் மட்டுமன்றி, வீடுகளிலும், பாடசாலைகளிலும் பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது. வீட்டில் காலை, மாலை, வழிபாடுகளின் போதும், விசேட வழிபாடுகளின் போதும் பாடசாலையில் காலை பிரார்த்தனை, வெள்ளிக்கிழமை பிரார்த்தனை, விழாக்கள் என்பன நடைபெறும் போதும் பஞ்சபுராணம் ஓதப்படுவதை காணலாம்.

உங்கள் பாட நூலில் உள்ள திருமுறை பாடல்களில் பஞ்சபுராணத்தை மனனம் செய்திருத்தல் அவசியமானதாகும். அவ்வாறு மனனம் செய்திருந்தால் வேண்டிய இடத்தில் உங்களால் பயமின்றி, பிழையறப் பாட முடியும். பஞ்சபுராணத்தை ஓதும் போது முதலில் 'திருச்சிற்றம்பலம்" என்று சொல்வதும், அவற்றை ஓதிய பின்னர் 'திருச்சிற்றம்பலம்" என்று கூறி நிறைவு செய்வதும் சைவ மரபாகும். பஞ்சபுராணத்தை பாடும்போது எழுந்து நின்று கைகூப்பி, பக்தியோடும், பண்ணோடும் பாடுதல் வேண்டும்.

ஆர். ஹரிஸ்நவீன்
தரம் : 06B

# ஒளவையார் வழி முறை

நம் தமிழிலக்கியங்களில் ஒளவையார் எனும் பெயரினை உடையோர் பலராக காணப்படுகின்றனர். சங்ககாலத்தில் வாழ்ந்த ஒளவையார் ஒருவர், சமயக்குரவர்களில் ஒருவராகிய சுந்தரர் காலத்தில் வாழ்ந்த ஒளவையார் ஒருவர், கம்பர் காலத்தில் வாழ்ந்த ஒளவையார் ஒருவர், மற்றொருவர் பிற்காலத்தில் ஆத்திச்சூடி முதலியவற்றை இயற்றிய ஒளவையார் சிலர் இவ்வாறாக ஒளவையார் பலராக காணப்படுகின்றர். இவ்வாறு காணப்படுவதற்குக் காரணம் புகழ் மிகுந்து விளங்கிய ஒருவர் பெயரை வழி வழி மக்கள் அவரை மதித்து போற்றும் வகையால் தாமும் அவர் பெயரை வைத்து கொள்ளும் வழக்கத்தினாலாகும்.

சங்க காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கிய ஒளவையார் மீது பிற்காலத்து மக்களுக்கு இருந்த பெரும் மதிப்பால் பிற்காலத்தவர் பல சிறப்புக் கருதி அந்த ஒளவையாரின் பெயரைத் தமக்கு பெயராக வைத்து கொண்டனர். வேறு சிலர் தாம் இயற்றிய நூல் உலகில் நெடுநாள் விளங்க வேண்டும் என்று விரும்பி ஒளவையாரின் பெயரையே தங்கள் நூலின் ஆசிரியர் பெயராக எழுதிச் சென்று விட்டனர். அதனால் ஒளவையாரின் வரலாற்றில் ஒளவையார் பற்றிய குழப்பம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலை தமிழில் ஒரு குறையாகவும் காணப்படுகின்றது. இன்றைய நிலையில் எத்தனை ஒளவையார் காணப்படினும் சங்ககாலத்தில் பெருமை பூண்டு விளங்கிய ஒளவையார் தமிழுக்குச் செய்த பெரும்பணியை இங்கு ஆராயலாம்.

<u>ஒளவையாரின் தமிழ்ப் பணி</u>

சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழ் மூதாட்டியாகிய ஒளவையார் போக்குவரத்து வாய்ப்பு எதுவும் இல்லாத அக்காலத்திலேயே தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் வந்து சிற்றரசர் பேரரசர் ஆகிய அனைவருடைய அவைகளிலும் சென்று பலரையும் கண்டு செலுந்தமிழ்ப்பாக்கல் பாடியுள்ளார். அவர் பாடியவனவாக எட்டு தொகை நூல்களாகிய சங்க நூல்கள் சிலவற்றில் காணப்படுகின்றன. ஒளவையாரின் பாட்டுக்களாக அகநானூற்றில் நான்கும் குறுந்தொகையில் பதினைந்தும் நற்றிணையில் ஏழும் புறநானூற்றில் முப்பத்துமூன்றும் ஆக ஐம்பத்தொன்பது பாடல்கள் காணப்படுகின்றன. ஒளவையாரின் அருந்தமிழ்ப் பாடல்கள் விழுமிய கருத்துச்செறிவும், அற்புதக் கற்பனை வளமும் உணர்ச்சிப்பெருக்கும் உடையனவாக அமைந்தமை விளங்குகின்றன.

<u>சமக்கால புலவர்கள்</u>

சங்ககாலத்தில் வாழ்ந்த சான்றோர்கள் பலர். அவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் கபிலர், பரணர், நக்கீரர், ஆகியோர் ஆகும். அவர்களில் கபிலர், பரணர் காலத்தில் வாழ்ந்தவர் ஒளவையார் என்று கூறலாம். எவ்வாறெனில் ஒளவையார் அதியமானிடம் மிகவும் தொடர்புகொண்டிருந்தார். அவ்வாறே கபிலரும், பரணரும் தொடர்புடையவர்களாகக் காணப்படுகிறார்கள். எனவே கபிலர், பரணர் காலத்தவர்களாக் காணப்படுகின்றார்.

எஸ். சனோஜ்
தரம் : 08B

# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

தமிழிலக்கிய வானில் சுடர் விட்டொளிரும் விண்மீன் பாரதியார். அவர் மகாகவி, புரட்சிக் கவிஞர், பழைமைக்கும், புதுமைக்கும் பாலம் அமைத்த ஒப்பற்ற மகாகவி.

இவர் தமிழ் நாட்டில் உள்ள எட்டைய புரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், லட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882ஆம் ஆண்டில் பிறந்தவர். தன் பாட்டுத்திறத்தாலே இவ் வையகத்தைப் பாலித்திட விரும்பியவர். இந்திய நாட்டின் விடுதலைக்காகத் தம் பாடல்கள் மூலம் உரமூட்டியவர். புரட்சிகரமான கருத்துக்களைப் பாடல்களில் புகுத்தியவர்.

'தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில் இலகு பாரதிப் புலவன் தோன்றினான்" என்றொரு கவிஞர் பாரதியினைக் குறிப்பிடுகிறார். அடிமைத்தன எதிர்ப்பு, வீரம், தமிழ் பற்று, பெண்ணுரிமை உணர்வு, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு என்பன எல்லாம் பாரதியாரின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. சமூகக் கொடுமைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் கண்டித்துக் கவிதைப் பாடிய பாரதி கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற ஒப்பற்ற காலத்தால் அழியாத கவிதைகளையும் தந்துள்ளார். இவரது தேசியப் பாடல்கள் கோழைகளையும் வீரம் கொள்ளச்செய்யும் சக்தி மிக்கவை. பாரதியின் தேசியப் பாடல்களில் உளம் நெகிழ்ந்த நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

'படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
துளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்திறன் றார்த்திங்கு
அடித்துரைத்தே ஆவேசம் கொள்வானென்றால்
அப்பாட்டின் பெருமை சொல யாரே வல்லார்"

என்று ஆவேச உணர்வுடன் பாடுகின்றார். பாரத நாட்டில் சுதந்திரக் கனவை வீறு கொண்டெழச் செய்யும் சக்தி பாரதியின் பாடல்களுக்கேயுண்டு. என்பதை நாமக்கல் கவிஞரின் கவிதை நன்குணர்த்துகின்றது.

மழலைகள் விரும்பும் கனிவோடு கூடிய கவிதைப்பல படைத்த கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பாரதிக் குறித்துப் பாடிய பாடலொன்று.

'பாட்டுக் கொருப்புலவன் பாரதி அடா - அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினான் அடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன் அடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய் அடா"

என்று தொடங்குகிறது.

பாரதியாரை நேரில் அறிந்து உணர்ந்து அவர் கவிதைகளிலே ஊறித்திளைத்த பாவேந்தர் பாரதிதாசன் பாரதி பற்றிக் குறிப்பிடும்போது.

'பைந்தமிழ்த் தேர்ப்பாகன்! அவன் ஒரு
செந்தமிழ்த் தேனீ! சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப்பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கவிதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன் புதிய
அறம்பாட வந்த அறிஞன்"
என்று போற்றுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞரான பாரதியார் பண்டைய மரபைப் பேணியதோடு, மரபைத் மறுத்து தெம்மாங்கு, பள்ளு, சிந்து, கண்ணி முதலிய நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலும் கவிதைப்பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால்தான் பாரதியை புதுமைக்கவிஞர் என்று புதுக்கவிஞர்கள் போற்றுகிறார்கள். எளிய இலகுவான சொற்களைப் பயன்படுத்தி பாடிய பாரதி அநேக கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சின்னச்சின்ன வசனங்கள், உயிர்த்துடிப்புள்ள சொற்கள், கற்பனைத் திறன் அனைத்தையும் அவரது கட்டுரைகளில் காணலாம்.

பாரத நாட்டின் பழைமையிலும், பெருமையிலும் ஈடுபாடு கொண்டிருந்த பாரதியார் வளரும் அறிவியல் புதுமைகளிலும் நாட்டம் கொண்டிருந்தார் இதனையே

'வெள்ளிப்பனி மலையின் மீதுலவுவோம் - அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்"

என்னும் வரிகள் அடையாளம் காட்டுகின்றன. பாரதியின் கவிதைகள் ஒவ்வொன்றும் சொற்சித்திரங்கள். அவை காலம் கடந்து வாழும் பெருமைக்குரியன.

1921ல் செப்டெம்பர் மாதம் 11ம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தது. ஆம் மகாகவி பாரதி மறைந்தாலும் அவரது கவிதைகள் மறையாது. ஒளிபரப்பிக்கொண்டே இருக்கின்றன. அவரது அடிச்சுவட்டில் காலந்தோறும் புதுப்புது கவிஞர்கள் தோன்றிக் கொண்டேயிருப்பர்.

பா. ஹரிக்காந்த்
தரம் : 07B

# Araliya Enterprise



*No. 40/1, Shopping Complex,*
*Bandarawela.*

## 2012 O/L Batch

Kogul

Diloshan

Nimrath

Prashanth

Vithurshan

Noel

Saoiddyagaran

Shanon

Thivaharan

Rizam

Yadushan

Hamdan

Akash

Safras

Divyapradiv

Ranushan

Kogul

Janurdan

Kavineshan

Manojan

Pravanan

Sujeevan

Sarath Mohan





# Auto Hills Clean




No. 298/1, Thanthiriya Road,
Bandarawela.

*R.Gobinath (Proprietor)*

# Vithya Jewellery







Jewel Designs Cutting (Machine Cut)

**All Type of Jewell's & All Kinds of Designs**

**(Chain, Ring, Bangle... Etc)**


No. 132, **Sea Street**, Colombo – 11.

**Mobile : 071-3405200**

# New MAHAARATHI

All Kinds of Fancy Goods,
Gifts, Cosmetics & Toys Etc.

No. 273, Main Street,
Bandarawela.



Tel :
072-8723456





# Abiraamy Cabs

For Comfortable Journey

Mobile : 071-0720720 / 071-0780780

# Grade 10B Boys

Suganthan
Kabilashan
Rajeevan
Satheesan
Pranavakes
DinushKanth

Abilash
Thuwarakan
Jawahar
Jayapradeep
Dinush Revinth
Litharshan

Thanushan
Sajeevan
Sachin
Naveenraja
Praveenraj

Thirumaran
Dilrukshan
Thulaxan
Mohana Shiyam
Janoshan
Harisuthan

# Janalanka Textiles

**Specialist In All Kinds Of Textiles,**

**Curtaining, Furnishing Rexine, Polythene & Pooja Bhanda.**



**No. 29, 87, Main Street,**
**Bandarawela.**

**Tel : 057-2222786 / 057-2222809 / 057-2223310**
**Fax : 057-2223122**


SVP

# SVP TRADING CO. (PTE) LTD

## Importers & Exporters

Importers of Engineering, Industrial Raw Materials &
All Kinds of Tools Steels.





**Head Office :**

**No. 29, Sirimavo Bandaranayake Mawatha,**
**(Prince of wales Avenue)**
**Colombo - 14. Sri Lanka.**

**Tel : 0094112435126, 0112446418, 0112448995, 0112436068.**
**Fax : 0112336198. E-mail : svptd@sltnet.lk**

**Branch :**

**No, 772, Sirimavo Bandaranayake Mawatha,**
**(Prince of wales Avenue)**
**Colombo - 14. Sri Lanka. Tel : 0112448991**

## நவராத்திரி சக்தி வழிபாடு

நவராத்திரி என்றாலே சக்தியை வழிப்படுவது என்பதுதான் அர்த்தம். உலகம் அனைத்தும் சக்திமயம் என்பதை விளக்குவதே நவராத்திரியின் தத்துவம். தேவியானவள் அனைத்து உருவத்திலும் எல்லா இடங்களிலும் வியாப்பித்திருக்கிறார். என்பது குறிக்கும் விதமாக அனைத்து உருவ பொம்மைகளையும் கொலுவாக வைத்து வணங்கும் கலாச்சாரம் காணப்படுகிறது.

நவராத்திரி நாளான ஒன்பது இரவுகள் தனி சக்தியாக விளங்கும் ஜகன்மாதா, பத்தாம் நாளன்று ஈஸ்வரனை வணங்கி 'சிவசக்தியாக" ஐக்கிய ரூபினியாக - அர்த்தநாரீஸ்வரராக மாறுகிறாள் என்பதே இப்பண்டிகையின் புராண வரலாறு.

இந்த ஒன்பது நாட்களிலும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி தேவியரை ஒன்பது அவதாரங்களாக அவதரித்து, போற்றி பூஜித்து வழிபடுதல் வேண்டும். முதல் மூன்று நாட்களிலும் மகேஸ்வரி, கௌமாரீ, வராஹி என துர்க்கா தேவியாகவும் அடுத்து மூன்று நாட்களில் மஹாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி நிறைவுரும் மூன்று தினங்களில் சரஸ்வதி, நரசிம்மீ, சாமுண்டி என சரஸ்வதி தேவியாகவும் சித்தரித்து வணங்குகிறோம்.

இந்த நாட்களில் நைவேத்தியங்களைப் படைத்து கலைக்கு ஆதாரமாக திகழும் கலைமகளைப் பாடி, ஆடி பரவசமுடன் வணங்குவோருக்கு கேட்ட வரத்தை சக்தியானவள் கைமேல் நல்குவாள் என்பது ஐதிகம்.

ஏ.ரகித்

தரம் : 06B

## எது தியானம் ?

எது தியானம் என்பதில் வேண்டியளவு குழப்பம் தற்போது நிலவுகின்றது. இதற்கு முக்கிய காரணம் வெறும் மன ஒருமைப்பாட்டை தியானம் என எண்ணுவதுதான். எந்த மனிதரானாலும் சரி அவனால் தன் மனதை ஒரு பொருளில் நிலை நிறுத்த முயல்கிறான். ஆனால் தோல்வி மேல் தோல்வி வரும்போது என்னால் ஏன் தியானம் செய்ய முடியவில்லை? என கேட்கிறான். உண்மை என்னவென்றால். வெறும் மன ஒருமைப்பாடு அதுவாக மனதை ஏதாவது ஒரு பொருளில் நிலை நிறுத்துவது தியானம் ஆகிவிட்டது. ஆன்மீக சாதகர்கள் இதை மிக முக்கியமாக கருத்திற் கொள்ள வேண்டும்...

சு. ஹரிசுதன்

தரம் : 10B

## உலகம் போற்றும் இந்து சமயம்

இந்திய உபகண்டத்தின் மிக பழைமை வாய்ந்த சமயம் இந்துசமயம் ஆகும். இந்து சமயம் பரந்த கண்ணோட்டமும், பண்பாடும் கொண்டது. இது கி.மு .15ம் நூற்றாண்டுக்கு முந்தியது. மற்றைய சமயங்களை போல இந்துசமயத்தை ஆரம்பித்தவர், ஆதியில் போதித்தவர் என எவரையும் குறிப்பிட்டு கூற முடியாது.

இந்தியா, இலங்கை, நேபாளம், வங்காளதேசம் மற்றும் உலக நாடுகள் பலவற்றில் இந்துக்கள் இன்று பரந்து வாழ்கின்றனர். ஏறக்குறைய 100 கோடி மக்கள் இந்து சமயத்தை பின்பற்றுகின்றனர்.

பக்தி நெறியும், கட்டுப்பாடுகளும், சித்தாந்தமும் கொண்ட சமயம் இந்து சமயம். ஆத்மா அழிவற்றது, அரிதான மானிடப் பிறவியில் தெய்வ வழிப்பாட்டுடன் அறவாழ்வு வாழ்வதன் மூலம் மறுபிறவித் தொடரிலிருந்து விடுப்பட்டு இறைவனுடன் இரண்டறக் கலத்தலே இந்து சமயத்தின் குறிக்கோளாகும். இந்த உயர்ந்த நிலையை மோட்சம் என்பர்.

இந்து சமயத்தில் பல தெய்வங்களை வழிபடுவர் ஆயினும் முழுமுதற் கடவுளாக சிவன், விஷ்ணு, பிரம்மாவைக் கொள்வர். பிரம்மாவைப் படைத்தல் தெய்வமாகவும், விஷ்ணுவை காக்கும் தெய்வமாகவும் சிவனை அழிக்கும் தெய்வமாகவும் இந்து சமயம் கூறும். சைவ சமயத்தவர் சிவனை, சிவலிங்க வடிவத்தில் வழிபடுவர். சிவனை நடன உருவத்தில் நடராஜர் எனப்பெயரிட்டு வழிபடுவர்.

இந்து மத்தின் முக்கிய நூல்கள் வேதங்களும் உபநிடதங்களும் ஆகும். வேதங்கள் இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன் உருவானவை. இவ்வேதங்கள் நான்கு வகைப்படும். அவையாவன இருக்கு, யசூர், சாமம், அதர்வம். இவற்றில் இருக்கு வேதம் காலத்தால் முந்தியது.

தமிழ் நாட்டில் கி.பி 6-7ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பக்தி காலக்கட்டத்தில் இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவ சமயம் வலுப்பெற்றது. இந்தியாவில் முகலாய சாம்ராஞ்சிய காலத்தில் இஸ்லாமும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவமும் பரப்பப்பட்டன. ஆயினும் இன்று 100 கோடி மக்களது சமயமாக உலகின் மூன்றாவது மிகப்பெரிய சமயமாக இந்து சமயம் நிலைப்பெற்றுள்ளது. ராம்மோகன்ராய், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்ற சமயப் பேறறிஞர்கள் தொடர்ந்து இந்து சமயத்தை பேணி வந்தனர்.

பல தெய்வங்கள், வளமிக்க புராணம், இதிகாச இலக்கியங்கள், விரிவான இந்து சமய சித்தாந்தம் ஆகியன இந்து சமயத்தை பாதுகாத்து வருகின்றன எனலாம்.

'ஆத்மா அழிவற்றது. கடமையை செய் பலனை எதிர்பார்க்காதே"
(கீதை)

எஸ். அபிலாஷ்
தரம் : 10B

## எமது சமய நூல்கள்

சைவ சமய உண்மைகளை வடமொழியிலும், தமிழ் மொழியிலும் பல்வேறு நூல்கள் குறிப்பிடுகின்றன.

வடமொழியில் உள்ள நூல்கள்

வேதம்

ஆகமம்

என்பன சிறப்புப் பெற்றன.

இவை மட்டுமன்றி சைவ சமய உண்மைகளை கதை வடிவில் கூறும் நூல்களாக.

புராணங்கள்

இதிகாசங்கள் விளங்குகின்றன.

இவ்வாறு தமிழ் மொழியில் திருமுறைகளும், தோத்திரங்களும், பிரபந்தங்களும், புராணங்களும், மெய் கண்ட சாஸ்திரங்களும் கூறுகின்றன.

வேதம்

வைவ சமய உண்மையை கூறும் நூல்கள் முதல் நூல் என வேதம் அழைக்கப்படுகின்றது. இது உயர்ந்த அறிவைக் கூறுவதால் வேதம் எனவும் மறைந்து நிற்கும் பரம் பொருளை விளக்கும் நூல் என்பதன் மறை எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வேதம் நான்கு வகைப்படுகின்றது. இருக்கு, யசுர், சாமம, அதர்வணம் என்பனவாகும்.

எம். சூரியபிரஷான்
தரம் : 09B

## ஔவையார்

மன்னர் காலத்தில் தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு, என மூன்று முக்கிய பெரும் அரசியற் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. சேர நாட்டின் தலைப் பட்டினமாக வஞ்சிமாநகரும், சோழ ராஜதானியாக காவிருப்பூம் பட்டினமும், பாண்டியனின் தலைநகராக மதுரையும் இருந்தன.

மதுரை மாநகரிலே முதற் சங்கம், கடைச்சங்கம், இடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் மாறி மாறி இயங்கின. கடைச்சங்க காலத்திலேதான் செந்தமிழ் செல்வி என வருணிக்கப்பட்ட ஔவையார் சோழ நாட்டிலுள்ள உறையூரில் பிறந்தார். இவரது அன்னையின் பெயர் ஆதி. தந்தையின் பெயர் பகவன். இவர்கள் இருவரும் திருமணம் செய்த காலத்தில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதாவது அவர்கள் நாடோடிகளாய்த் திரியும்போது எந்த இடத்தில் குழந்தைப் பிறக்கின்றதோ அந்த இடத்திலேயே அதை விட்டுச்செல்ல வேண்டும் என்பதாகும்.

ஔவையார் அறிவூட்டும் பாடல்கள் பலவற்றை பாடியுள்ளார். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரைநல்வழி போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். ஆத்திச்சூடி என்ற நூலில் மேலும் கொன்றை வேந்தன் எனும் நூல் இவரது நூலில் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என் ஆரம்பித்து அகர வரிசையில் ஆழ்ந்த கருத்துள்ள ஒன்பது பாடல்களை எழுதி வைத்துள்ளார். நல்வழியில் 40 பாடல்களையும் முதுரையில் 30 பாடல்களையும் பாடியுள்ளார். இவற்றையெல்லாம் இன்றைய சிறார்கள் கற்று வைப்பது மிகமிகப் பொருத்தமானதாகும். எனவே நீங்களும் இவற்றை கற்று ஔவையாரின் வழியில் சென்று நற்பிரஜையாக வாழுங்கள்.

வி. பிரியந்த்

தரம் : 09B

# சமயமும் சூழலும்

சமயமும் சூழலும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை. சூழல் இன்றிச் சமயம் நிலைத்து நிற்க முடியாது. அவ்வாறே சமயம் இன்றி சூழல் தனித்து இயங்கவும் முடியாது. முற்காலத்தில் சூழல் பற்றிய அறிவு வாழ்க்கை நடைமுறைகளோடு நன்கு இசைவுப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் பருவ மாற்றங்கள் உணரப்பட்டன. உடை, உணவு, மொழி என்பவற்றினூடாக அவை குழந்தைகளுக்குப் பயிற்றப்பட்டன. விழாக்கல் வழிபாடுகள் ஊடாக அவை மரபாக பேணப்பட்டன.

சமயத்துக்கும் சூழலுக்கும் நிலைக்களனாக விளங்குபவை ஆலயங்களாகும். ஆலயம் ஒரு சமூக நிர்வனம் என்ற வகையில் அதன் சமூகத்தில் ஒன்றுமையையும் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கும். இதனால் எங்களால் இயன்ற அளவிற்கு ஆலயத்துக்கு சிலப்பணிகளை செய்வது சிறப்பானது. அவ்வகையில் சமய, சமூகத் தொண்டுகளாக, பூசை வழிபாடு, கூட்டுப்பிராத்தனை, ஆலயத்தொண்டுகளில் ஈடுபடுதல், சிறமதானம், சமூக சேவைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாம் செய்யும் தொண்டுகள், சமூக சேவைகள் என்பன ஆண்டவனுக்கு செய்யும் வழிபாடாகும். 'மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்றும் இதனையே வலியுறுத்துகின்றது. இதனை மனதார ஏற்றுக்கொண்டு செயற்படும் பக்குவத்தை எமது மதத்தின் ஆணிவேறாக்கி, சமயத்துடன் சமூகத்தையும் அதன் சூழலையும் செயற்பாடுகள் பலவற்றை உருவாக்கி, சமய நிறுவனங்களும் மக்களும் அவற்றில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும். நால்வர் காட்டிய வழியில் நாமும் எமது சமயத்தையும் சூழலையும் வளர்க்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சிரமத்தின் மூலம் சூழல் நன்மை பெறுகின்றது. ஆலயங்களின் சுற்று சூழலைத் துப்பரவு செய்தல் முக்கியமான ஒரு பணியாகும். அதன் மூலம் பொறுப்புணர்வு, ஒன்றுமை என்பன விருத்தியடையும். நல்ல சைவ சமய சூழலுக்கு இசைவான மனிதனாகவும் இருப்பான் என்பதை வெளிப்படுத்த கூடிய செயற்பாடுகளை நாம் முன்னெடுத்தல் வேண்டும். எமது சமய மரபில் சமய பணியுடன் சமூகப் பணியும் இரண்டறக் கலந்து நிற்கின்றன. சமய பணியாற்றும் நிறுவனங்கள் தங்கள் பணிகளை சமூக நலப்பணியிலும் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியது. காலத்தின் கட்டாயமாகும்.

வே. மனோஜ்பிரபாத்
2013 A/L Batch

# இந்து மதத்தின் தொன்மை

இந்து சமயம் எவ்வாறு உருவாகியது? எண்திசையும் புகழ் மணக்க இந்தியாவின்
வடமேற்கிலே சிந்து எனும் நதி உள்ளது. அக்காலத்திலே பாரசீகர், மொழி முதற் சகரத்ததை ஒலிக்க இடர்ப்பட்டமையால் சிந்து என்ற சொல்லை இந்து என்று உச்சரித்தனர். பாரசீகத்திலிருந்து இச்சொல் கிரேக்க தேசத்துக்குப் போக அங்கே சிந்து நதிக்கு அப்பால் உள்ள நாடு முழுவதையும் அந்த நதியின் பெயராலே வழங்கினார். பின்னர் அச்சொல் அவ்விடத்தில் வாழ்ந்த மக்களையும் அவர்களின் மதத்தையும் குறிக்கப் பயன்பட்டது. வரலாற்று அடிப்படையில் நோக்கின் இந்து சமயம் மிகவும் பழமையானது எனவும் பரந்த நோக்குடையது எனவும் கொள்ளப்படுகிறது. இது காலப்போக்கில் பல்வேறு கருத்துக்களையும், கோட்பாடுகளையும் தனதாக்கி இன்றைய இந்து மதமாக வளர்ச்சியடைந்து இருக்கிறது.

இன்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகள் இந்து மதத்தின் தொன்மை பற்றி பலதரப்பட்ட உண்மைகளை கூறியுள்ளனர். அவ்வாராய்ச்சியாளர்களுள் சிந்து வெளியில் ஆராய்ச்சி செய்த சேர்.ஜோன் மார்சல், சேர்.அலக்ஸாண்டர் கன்னிங்காம், சேர்.வில்லியம் ஜோன்ஸ் ஆகியோர் குறிப்பிட தக்கவர்கள். இவர்கள் சிந்துவெளியில் புதையுண்ட நகரங்களான மொகஞ்சோதாரோ, ஹரப்பா என்னும் இரு நகரங்களிலிருந்து பெறப்பட்ட சான்றுகள் சிந்து நதியோரம் ஒரு சிறந்த நாகரீகம் திகழ்ந்தது என்பதற்கு இந்துமதத்தின் கருவானது அன்றைய சிந்துவெளி நாகரீகத்தின் காணப்பட்டது என்பதையும் தெளிவாக எடுத்து காட்டுகிறது. இங்கு கிடைக்கப்பெற்ற இலட்சனைகள், உருவச்சிலைகள் என்பன சிந்துவெளியில் சிவ வழிபாடு, சக்தி வழிபாடு நிகழ்ந்தது என்பதை எடுத்து கூறுகிறது. சிந்துவெளியில் பெறப்பட்ட முத்திரை ஒன்றில் திரிசூலம் போலும், கொம்புள்ள ஒரு யோகியின் உருவமும் காணப்படுகிறது. அவ்வுருவத்தைச் சுற்றி எருமை, புலி, மான் ஆகிய விலங்குருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வடிவமானது. இறைவன் உயிர்களுக்கல்லாம் தலைவன் எனும் கருத்தை வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதனால் இந்துமதமானது பழமையானது எனலாம். மேலும் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட வரிவடிவ எழுத்துக்களைப் புரிந்து கொள்ள முடியுமாயின் மேலும் பல தகவல்களை அறிந்துக் கொள்ளலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இந்து மதத்தைப் பற்றி எமக்கு தெளிவாக அறியத்தருவன வடமொழியில் அமைந்த வேதங்களாகும். இவை மனிதரால் ஆக்கப்படாமல் இறைவனால் அனுபூதி மான்களாகிய இருடிகளுக்கு அருளப்பட்டு காலத்துக்கு காலம் செவிவழியாக பணப்பட்டு வருகிறது. இவற்றை தவிர நால்வகை வேதங்கள், சிவாகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பனவும் எமது இந்து சமயத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இனிமையும், எளிமையும், அழகும் நிறைந்த உயர்சமயமாம் இந்து சமயத்தின் பெருமைகளைப் பேணிப்போற்றிடுவோம்.

நா. சிந்துஜன்
2013 A/L Batch

# அங்கபிரதட்சணம்

இறைவனை தன் பக்தர்களின் பாத துளிகளை பூஜித்திருக்கிறார். அப்படிப்பட்ட பாத துளிகள் எங்கே கிடைக்கும் எங்கே சேகரிப்பது? பக்தர்கள் எங்கே அதிக அளவில் கூடுகிறார்களோ அந்தத் திருவடிகள் பதித்த மண் தான் புனிதம் நிறைந்ததாக கருதப்படும்.

சபரிமலையில் பக்தர்கள் ஆயிரம் லட்சம் என்ற எல்லையேல்லாம் தாண்டி கோடிகணக்கில் குவிகின்றனர். அவர்கள் தரிசனத்திற்காக வரும் சாதாரண பக்தர்கள் இல்லை. ஒரு மண்டலம் விரதம் இருந்து ஐயப்பனாக மக்களின் பாத பூஜைகளை ஏற்று, அந்தஸ்து வேறுபாடின்றி 'சரணம் ஐயப்பா" என்ற தாரக மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே சபரி சன்னிதானம் பிரகாரத்தில் தங்களின் கோடான கோடி திருப்பாதச்சுவடுகளை பதிக்கிறார்கள். அந்த மண்ணும் அணுவும் அவர்கள் பூஜா பலன்களின் சக்தியை பெறுகிறது. அந்த விலைமதிப்பில்லா பாதத்துளிகளைச் சேகரிக் வேண்டும். குளிர்ந்த நீரில் குளித்து ஈரத்துளிகளுடன் ஸ்ரீ ஐயப்பன் முன் நின்று வேண்டும் வரம் கேட்டு நடையை நமஸ்கரித்து சர்வசாஸ்டாகனாக படுத்து இரு கால்களை பிரியாமல் சேர்த்து கொண்டு, கண்களை மூடிக்கொண்டு மனதிற்குள் 'ஸ்வாமியே சரணம் ஐயப்பா" என கூறி உருண்டு பிரகாரத்தை வலம் வர வேண்டும். அங்கபிரதட்சணம் செய்யும் பொழுது வயிற்றில் உணவு இருக்க கூடாது. ஆரம்பித்த இடம் வந்தவுடன் ஐயப்பனை பூஜித்து எழவேண்டும். உருண்டு கொடுக்கும்பொழுது உடுத்திருந்த ஆடைகளை ஈரத்துடனேயே அவிழ்த்து அப்படியே ஒரு பிளாஸ்டிக் பையில் பத்திரப்படுத்தி வைத்து விட வேணடும். யாத்திரை முடிந்து வீடு சென்றவுடன் அந்த துணியை தண்ணீரில் நனைத்து அந்தத் தண்ணீரில் வீட்டில் உள்ளவர்கள், வீடு முதலான இடங்களில் தெளித்தால் சபரிமலை பயணத்தில் பக்தர்களுக்குத் கிடைத்த புண்ணியம் வீட்டில் உள்ளவர்களுக்கும் கிடைத்த புண்ணியமாகி விடுகிறது.

அறுசுவைக்கு ஓர் அற்புத விளக்கம்

| | |
|---|---|
| காரம் : | உடலுக்கு உஷ்ணத்தை அளிக்கிறது. |
| கசப்பு : | உடலில் உதவாத கிருமிகளை அழிக்கிறது. |
| இனிப்பு : | உடலில் தசையை அதிகமாக வளர்க்கிறது. |
| புளிப்பு : | இரத்த குழாயிலுள்ள அழுக்கை நீக்குகிறது. |

ப. மோகனசியாம்

தரம் : 10B

# சைவ வித்யா விருத்திச் சங்கம்

ஈழத்து ஐரோப்பியர் ஆட்சி காலத்தில் நலிவுற்று இருந்த சைவ தமிழ் கல்விப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து அதன் வளர்ச்சிக்காக பணியாற்றிய நிறுவனங்கள் பல உள்ளன. அவற்றுள்,

சைவ பரிபாலன சபை
சைவ வித்யாவிருத்தி சங்கம்
விவேகானந்த சபை

என்பன குறிப்பிடத்தக்க, இவற்றுள் சைவ வித்யா விருத்திச் சங்கம் மிகவும் பெரும் பணியாற்றும் சங்கமாகும். சைவ வித்தியா விருத்தி சங்கம் 1923ம் ஆண்டு ஜனவரி 29ம் திகதி ஆரம்பிக்கபட்டது.

சேர் பொன் ராமநாதன், இந்துபோட் சு. இராசேந்தினம் ஆகியோர் சைவ வித்யா விருத்தி சங்கத்தின் ஆரம்ப கருத்தாக்களாகும். இச்சங்கம் இலங்கையில் பல பாகங்களிலும் அதாவது யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராச்சி, தென்மராச்சி என்று இடங்களிலும் பதுளை, நாவலபிடிய, கண்டி ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது.

சைவ வித்யா விருத்திச் சங்கத்தின் 1950ம் ஆண்டு அறிக்கையின் படி இச்சபை நிர்வாகத்தின் கீழ் 120 பாடசாலைகளும் 24.000 மாணவர்களும் 800 ஆசிரியர்களும் இருந்தனர்.

வி. லிதர்ஷன்
தரம் : 10B

## இலங்கையில் உள்ள சமயங்கள்.

இலங்கையில் உள்ள மக்களால் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் எனும் சமயங்கள் பின்பற்றப்படுகின்றன. சமயங்கள் யாவும் மக்களை நல்வழிப்படுத்துவன. சமயங்கள் வேறுப்பட்டவையாக இருந்தாலும் அவற்றிற்கிடையே சில பொதுவான பண்புகளும் காணப்படுகின்றன.

சைவ சமயத்தவரின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சைவ சமயத்தவர்கள் வேதம், ஆகமம் எனும் இரண்டையும் முதன்மை நூல்களாக கொள்கின்றனர். அச்சமயத்தினர் கோயில்களுக்குச் சென்று சிவனை வழிபடுவர்.

பௌத்த மதத்தை தோற்றுவித்தவர் கௌதம புத்தர். திரிபீடகம், தம்மபதம் என்பன பௌத்த சமயத்தின் முதன்மை நூல்களாகும். அந்த சமயத்தவர்களின் வழிப்பாட்டு தலம் பௌத்த விகாரைகள் ஆகும்.

கிறிஸ்தவர்கள் பரம பிதாவை வழிபடுவர். இத்துடன் மீட்பரான இயேசு கிறிஸ்துவையும் வழிபடுகின்றனர். பைபிள் என்பது அவர்களது முதன்மை நூலாகும். கிறிஸ்தவர்களின் வழிப்பாட்டு தலம் தேவாலயம் ஆகும்.

இஸ்லாம் சமயத்தவர்களின் வழிப்பாட்டுக்கு உரியவர் அல்லாஹ் ஆவார். அவர்களது முதன்மை நூல் திருக்குர்ஆன் என அழைக்கப்படும். அச்சமயத்தவர்களுக்கு வழிப்பாட்டுக்குரிய இடம் பள்ளிவாசல் ஆகும்.

இலங்கையராகிய நாம், எமது சகோதர இனத்தவர்களது சமய, கலசார அம்சங்களை அறிந்த அவற்றுக்கு மதிப்பளிப்பது நல்ல பண்பாகும்.

ஆர். அபிராஜ்
தரம் : 6B

முப்பொருள்களில் ஒன்றான பசு

ஆன்மா, பாசத்தால் கட்டுண்டிருத்தலால் பசு எனப்படும். ஆன்மா எண்ணில்லாதன, என்றுமுள்ளன அநாதியே ஆணவமாகிய இருளால் மறைக்கப்பட்டிருப்பவை. ஆணவ முனைப்பால் இருவினை புரிவன தாம் புரிந்த இருவினை பயனே அனுபவித்தற்கேற்ற உடம்பை இறைவன் தரப்பெற்று பிறந்து பல வினையை நுகரும்போது புதுவினைகளையும் பெருக்கிப் பிறப்பாகிய போக்குவரவைப் பொருந்துவன இப்படி என்னிறந்த பிறவிகளே அடுத்து உழலும்போது கல்வி, கேள்வி, அறிவு பொருந்தும் காலத்தில் திருவருள் பதியப்பெற்று குருதீட்சை பெற்று மெய்ஞானம் விளங்குவதனால் சிவகதி செய்வனவாகும்.

இவ்வான்மாக்களில் முத்திப்பெற்றவையும் எண்ணில்லாதன, முத்திபெற இருப்பவையும் எண்ணில்லாதன, முத்திபெற உள்ள உயிர்கள் மும்மலமுடைய சகலரும், ஆணவமும், கர்வமும் உள்ள பிரளையாகலரும் ஆணவம் ஒன்றே உடைய விஞ்ஞானகலரும் என மூவகையாகும் நனவிலே கண்டதை கனவிலே மாறுப்பட காணுதலால் ஆன்மாவுக்குச் சுதந்திரம் இல்லை.

பிறர் ஒருவரது ஆணைவழி நடப்பதாகும். ஐம்பொறிகளின் துணைக்கொண்டு உணர்த்த உணர்வதால் ஆன்மாவுக்கு தானே அறியும் ஆற்றல் இல்லை. சத்தைச் சாரும்போது சத்தாயும் அசத்தைசாரும்போது அசத்துப் போன்றும் இருப்பதால் ஆன்மா சதசத்து எனப்படும். ஆன்மா சார்ந்தவன் வண்ணமாயிருப்பது இறைவனருள் காட்டாவிடின் கேட்டானின் கண் போல ஒளியையும் இருளாகவே காணும் எனத்திருவருட்பயன் கூறும்.

ஜெ. ரஜீவன்
தரம் : 10B

- இன்பம் பனித்துளி போன்றது. அது சிரிக்கும் போதே உலர்ந்து விடும்.
  (இரவிந்திரநாத் தாகூர்)
- தாய்மை என்னும் சிப்பிக்குள் குழந்தைகள் என்ற முத்துக்கள் பிறக்கின்றன.
  (முகமது இக்பால்)
- எந்த வீட்டில் புத்தகசாலை இருக்கின்றதோ, அந்த வீட்டில் ஆன்மா இருக்கின்றது.
  (பிளேப்டோ)
- பிறரின் குறைகளைக் காண்பது எளிது. நமது குறைகளை உணர்வது அரிது.
  (புத்தர்)
- காலம் கவிஞனைக் கொன்றுவிடும். கவிஞன் காலத்தை வென்றுவிடுவான்.
  (ஜெயக்காந்தன்)
- துருப்பிடித்து தேய்வதை விட உழைத்து தேய்வது மேலாகும்.
  (விவேகானந்தர்)
- காதல் மயக்கத்தில் தோன்றினால் மயங்கும். அன்பில் தோன்றினால் பொங்கும்.
  (கண்ணதாசன்)
- உண்மையான தர்மம் உங்கள் உள்ளத்திலேயே இருக்கின்றது.
  (இராமகிருஷ்ணர்)
- கல்வி என்பது மனிதனின் அறமையை வளர்ப்பதற்கு உதவியாக இருக்க வேண்டும்.
  (விவேகானந்தர்)
- உறவாடும் உதடுகளை விட பிறருக்கு உதவும் கரங்கள் புனிதமானது.
  (அன்னை தெரேசா)
- சுருக்கமாக பேசுவோரின் வார்த்தைகளில் ஆழ்ந்த சிந்தனைகள் தங்கியிருக்கும்.
  (காந்தியடிகள்)
- பதவியை பார்த்து உதவி கேட்காதீர்கள். நல்ல மனிதரை பார்த்து உதவி கேளுங்கள்.
  (இயேசு நாதர்)
- இன்பம் வரும்போது எகிறி குதிக்காதே. துன்பம் வரும்போது சோர்ந்து விடாதே.
  (கண்ணதாசன்)
- மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய ஒரு கடலுக்கு ஒப்பாகும்.
  (கணபதி ஐயனார்)
- அலைமோதும் கடலில் அல்லி வளராது. உறுதியில்லா நெஞ்சில் காதல் வளராது.
  (கண்ணதாசன்)

சீ. கஜன்
தரம் : 09B

## நாட்டார் தெய்வ வழிபாடும் சமூகமும்

சைவத் தமிழ் மக்கள் வாழ்வியலுடன் நாட்டார் வழிபாடு பெரிதும் இணைந்து விட்டது இதனால் இவ் வழிபாடும் அதனோடு தொடர்பான தெய்வங்களும் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. நாட்டார் தெய்வ வழிபாட்டால் குடும்ப ஒற்றுமை, செய்யும் தொழில் விருத்தி, அன்றாடக் காரியங்கள் நிறைவேறுதல் நோய் தீர்த்தல் போன்றன இடம் பெறுகின்றன பெரும்பாலான தெய்வங்கள் ஒரு குடும்பத்திற்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு சாதியினருக்கோ உரியவைகளாகக் கொள்ளப்படுகின்றன.

அந்தணர்கள், அல்லாதவர்களா பூசைகள் நிறைவேற்றப்படகின்றமை, ஆசாரங்கள இல்லாமை போன்ற காரணங்களால் சமூகத்தில் இவை வினாவில் இணைந்து விட்டன. ஒரு பிரதேசத்தில் வழிபடும் தெய்வம் இன்னோர் பிரதேசத்தில் வழிபடுவதில்லை அதே நேரம் சில தெய்வங்கள் ஒரு பிரதேசத்தில் பரிவாரத் தெய்வமாக வழிபடுவதால் அத் தெய்வங்கள் சமூகத்தில் முக்கியம் பெற்றுவிட்டன.

பெரும்பாலான தெய்வங்கள் பலியிருதலை ஏற்பன இன்று மிருகபலியிடம் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது. சடங்கை அடிப்படையாக கொண்ட முத்துமாரி, சீதை, கண்ணகி, ஐயனார், போன்ற தெய்வங்கள் இன்று ஆகம நெறிக்குள் உட்படுத்தப்பட்டுவிட்டன.

இக் காரணத்தினாலும் இவ்வழிபாடு சமூகத்தோடு ஒன்றிணைந்து விட்டது. ஒவ்வொரு தெய்வங்களும் சிறந்த குணவியல்புகளை கொண்டவை. இதனால் வழிபடுபவர்கள் அதற்குரிய பலன்களைப் பெற்றுள்ளனர். சமரசம் பேணல், பகைமை தீர்த்தல், நம்பிக்கை போன்ற காரணங்களும் இவ் வழிபாடு சமூகத்தோடு இணையக்காரணமாகி விட்டன கிராமியக் கலைகளான கரகம், காவடி, கோலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கூத்துக்கள் மற்றும் கிராமிய விளையாட்டுகள் என்பன இவ் வழிபாட்டோடிணைந்து வளர்ச்சியடைந்தமையானது. நாட்டார் தெய்வ வழிபாடு சமூகத்தில் செல்வாக்கு பெறக்காரணமாயமைந்து விட்டது.

எஸ். ஜனுருதன்
தரம் : 11B

பகவத் கீதை சொல்லும் வாழ்கை

வாழ்க்கை ஒரு சவால் - அதனை சந்தியுங்கள்

வாழ்க்கை ஒரு பரிசு - அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு சோகம் - அதனை கடந்து வாருங்கள்

வாழ்க்கை ஒரு துயரம் - அதனை தாங்கி கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்

வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதனை விளையாடுங்கள்

வாழ்க்கை ஒரு வினோதம் - அதனை கண்டறியுங்கள்

வாழ்க்கை ஒரு பாடல் - அதனை பாடுங்கள்

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு பயணம் - அதனை முடித்து விடுங்கள்

வாழ்க்கை ஒரு உறுதிமொழி - அதனை நிறைவேற்றுங்கள்

வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்

வாழ்க்கை ஒரு அழகு - அதனை ஆராதியுங்கள்

வாழ்க்கை ஒரு உணர்வு - அதனை உணர்ந்துகொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு போராட்டம் - அதனை எதிர்கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு குழப்பம் - அதனை விடைக்காணுங்கள்

வாழ்க்கை ஒரு இலக்கு - அதனை எட்டிப்பிடியுங்கள்

ப. அனோஜன்

தரம் : 09B

## ஈழ நாட்டின் தமிழ் வளர்ச்சி

பண்டைக் காலந்தொட்டு ஈழநாடு தமிழ் மொழிக்குச் சிறந்த இருப்பிடமாக திகழ்கின்றது. சங்ககாலத்தில் ஈழ மொழியை அவங்கரித்து புகழ்பெற்று விளங்கினர். அவர்களுள் ஒருவர் ஈழத்துப் புதத் தேவனார் அவரது பாக்களுட் சில சங்க நூல்களிற் காணக்கிடைகின்றன.

ஈழத்துத் தமிழரசன் காலத்தில் தமிழ் மொழி பலத்துறைகளிலும் உயர்ந்த நிலையில் இருந்தது யென்பதற்கு பலவித சான்றுகள் உள்ளது. இக்காலத்துக்கான தட்சன கைலாச புராணமும், திருக்கோசல புராணமும் பரராசசேகரம் என்னும் வைத்திய நூலும் சேகரச சேகரம் என்னும் சோதிட நூலும் அரச னேசரி இயற்றிய ரகு வம்சமும் ஆக்கப் பெற்றலாக அறிந்தோம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஐரோப்பியர் ஆட்சியிலும் ஈழ நாட்டிலே தமிழ் மொழி அதனது வளர்ச்சியில் பழயை முறையோடு புதியமுறையை தழுவியது.

பின்னர் ஆங்கில ஆட்சி தொடங்கியது. இக்காலத்துக்கு முதல் பகுதியில் சின்னத் தம்பிப் புலவர் எனும் சிகாமணி திகழ்தார். விரைவில் கவிபாடும் வன்மை வாய்த்தலர். அக்காலத்து யாழ்பானத்துக் கரவெட்டி எனும் ஊரில் 'கரைவன் லேன் கோலை" எனும் கோலை நூலையும் நெய்தார். பறாளை வினாயகர் பள்கு எனும் பல்றுப் பிரபந்தத்தையும் யாத்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நல்லைவென்பா, நல்லையந்தாரி, நல்லை நூறலஞ்சி எனும் பிரந்தங்களை இயற்றியுள்ளனர். ஈழநாடானது ஆங்கிலேயரது கையில் சென்றதும் ஆங்கு இதுகாறுதம் வழங்கி வந்த தமிழ் மொழியும் ஒரு புத்தகப் புதிய முறையில் வரைத் தொடங்கியது புத்தம் புதிய கலைக்கும் தமிழும் தோன்றிற்று.

யுக்சரன்
தரம் : 09B

## தீட்சை வகைகள்

தீட்சை ஆதார தீட்சை, நிராதார தீட்சை என இருவகைப்படும். இறைவன் வேறொரு ஆதாரத்தையும் வேண்டாது தானே குருவாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்கள் மட்டும் உடைய பிரதார தீட்சை எனப்படும்.

இறைவன் ஞானாசியர் ஒருவர் ஊடாக ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடைய நம்போன்ற சகலருக்கும் அளிக்கும் தீட்சை ஆதார தீட்சை எனப்படும். இவ் ஆதார தீட்சையானது அளிக்கப்படும் முறைக்கேற்ப அவை நயனம், பரிசம், வாசகம், மானசம், சாத்திரம், யோகம், ஒளத்திரி என ஏழு வகைப்படும். இத் தீட்சைகள் சிவாச்சாரியாரால் அளிக்கப்படும். முறைப்பற்றியும் அத் தீட்சைகளை பெற்று கொண்ட நமது சைவ நாயன்மார்கள் பற்றியும் மேல்வருமாறு நோக்குவோம்.

01. நயன தீட்சை
02. பரிச தீட்சை
03. வாசக தீட்சை
04. மானச தீட்சை
05. சாத்திர தீட்சை
06. யோக தீட்சை
07. ஒளத்திர தீட்சை

எம். ரனுஷன்
தரம் : 11B

# இறைவனது அற்புத படைப்புகள்

இறைவனது படைப்புக்களானது. உலகினிலே கோடான கோடி அவ்வுயிர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு பல நிலைமைகளை இறைவன் உருவாக்கியுள்ளார். இவ்வாறு அமைந்துள்ள விதம் ஆய்வாளர்களை கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தியிக்கின்றது எனலாம்.

உதாரணத்திற்கு பாலைவனங்களில் அதிகமாக வாழும் ஒட்டகத்தினை எடுத்துக்கொண்டால், அதனுடைய காலானது மணல் பரப்பிற்கு தக்கவாறும், அதன் உடலமைப்பு தட்பவெப்ப காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் அடைதலும் சிந்திப்போருக்கு இயற்கையினுள் இறைவனின் அதியுன்னத சக்தி வெட்ட வெளிச்சமாகும். மேலும் தொலைவில் உள்ள நீர்நிலைகளை கண்டறியும் யுக்தி அதனை சேமிக்கும் சக்தி, மணலை வீசியடிக்கும் போது கண்களை மூடிக்கொள்வது போன்று மூக்குத்துவாரங்களை மூடிக்கொள்ளும் அமைப்பு, பல நாட்களுக்கு களைப்பின்றி பயணம் செய்யும் விதம் என்பவற்றிலிருந்து இறைவனின் அற்புதம் செயற்படுவதை உணரலாம்.

கடல் அதன் கரையால் அழகு பெறுகின்றது. அதன் அலை கடற்கரையை முத்தமிடுவது வரையற்றது. அது தானே நாம் கண்ட இயற்கையின் தரிசனம், அதில் ஏன் வினோத விபரீத சதித்திட்டம்? சுனாமி என்ற நாமத்தில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றமானது நம்மைவிட எல்லா வகையிலும் பெரியவன், உலகத்தையே மறைந்து நின்று ஆட்சி செய்கின்ற ஒருவன் இருக்கிறான் என்பதை எமக்கு நினைவு படுத்தவில்லையா?

பொறுமைக்கு பூமியை குறிப்பிடுவார்கள் அது ஏன் பொறுமையை இழக்க வேண்டும்? பூமி தன்னடக்கத்தை இழந்து நடுநடுங்கி பல கட்டடங்களையும், உயிர்களையும் சூறையாடிய சம்பவங்களுள் ஒன்றா? இரண்டா? அது எம் உள்ளத்தை உருக்கவில்லையா? அகிலத்தின் தலைவன் ஒருவனின் நிலைப்பாட்டை நன்குணர்த்தவே என்பதை நாம் உணர வேண்டாமா? எந்த உயிர்வாழும் ஜீவராசியும் காற்றின்றி உயிர் வாழ முடியாது. கண்களுக்கு புலப்படாத காற்று சற்று வேகமாய் வீசி விட்டால் ஓடி ஒதுங்க இடமில்லாமல் போய்விடுகின்றது. விமானத்தில் பறந்து கீழே விழுந்து உயிர்த்தப்பி பிழைத்தமையும், காலூனமுற்றவன் நீச்சல் போட்டியில் முதலாம் இடத்தை பெறுவதும், பிறவிக்குருடன் புகழ்பெற்ற கவிஞன் ஆவதும் இயற்கையாகிவிடுமா? இவையனைத்தும் 'அவனின்றி அணுவும் அசையாது" என்னும் தெய்வீக நம்பிக்கையையே எமக்கு உணர்த்துகிறது.

உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் தெய்வீகத்தை தமது உள்ளத்தில் பதித்துக் கொள்ளுதல் அவசியம். மனிதன் மனிதனாக மட்டுமின்றி புனிதமானவனாக வாழ தெய்வீகம் ஒன்றே வழி காட்டும் என்பதை எவ்வித ஐயமும் இல்லை.

இரா. ஜெகநாத்
2013 A/L Batch

## நாற்பாதங்களில் ஞான மூர்த்தம்

மனமெனும் குளத்தில் நீந்தி
கரையை கண்டேனில்லை
கண்டேனே உந்தன் திருவுருவை
எந்தன் எண்ணத் தாமரையிலே...

தாயுமாய் வந்தவனே
தந்தையுமாய் ஆனவனே
குருவாகவும் திகழ்கிறாய்
ஞான வடிவினராய் நின்று...

தென் திசைக் கொண்டும்
கல்லால குளிர் மர நிழலும்
மதி எனும் வானவர் போற்றும்
திருக்கைலை மலையில் நின்றாய்!

அறிவிலே மயங்கி நின்ற
நான் முனிகளும் நும்பால்சேர
தேவரீர் ஒருவரே அம்மயக்கத்தை
நீக்க பேருள்ளம் கொண்டீரே!

மூர்த்தமது மூக்கண் கொண்டும்
வல்மை தோள் நான்கும் கொண்டே
பேரொளி பரப்பி எங்கும்
யோகியாய் எழுந்தருள்வாயே!

ஞானம் அது நாவிலே
நவிலற் பாலதன்று கூறி
வலக்கை சின்னுடன் யோக சமாதியில்
அமர்ந்தனரே இம் மூர்த்தம்

அறுபத்து நான்கு மூர்த்தம் கொண்டாலும்
இருபத்தைந்து அதில் சிறப்பல்லவா!
சிந்தைக்கு விருத்தாகும் மூர்த்தம்
உந்தன் தட்சிணா மூர்த்தம் அல்லவா!

ச. கிருஷாந்த்
2013 A/L Batch

## திருவாசகம்

திருவாசக பாடல்கள் மணிவாசகர் பாடி அருளினார். அவர் இப்பாடல்களில் இறைவனின் புகழை பாடுகின்றார். இவை உலகியற் பெயரில் வேண்டுகின்ற பெண்களின் பாடல்கள் போல அமைகின்றன. எனினும், இவை சிவபேறு கோரும் பக்தி பாடல்கள் ஆகும். திருவாசகத்தில் சிவபுராணம், திருச்சாழல். திருச்சதகம், திருவம்மானை, திருவெம்பாவை, திருஉந்தியார், திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருபொற்சுண்ணம், திருப்பொன்னூஞ்சல், அச்சோப்பதிகம் போன்ற பகுதிகள் உள்ளன. மணிவாசகர் பாடிய திருவாசகம் 656 பாசுரங்களை கொண்டது.

மணிவாசகர் ஈற்றில் தில்லையை அடைந்தார். சிவபிரான் அந்தண வடிவம் தாங்கி மணிவாசகரின் திருவாசக தேன்துளிகளை ஏட்டில் எழுத மீண்டும் பாடல்களை பாடுமாறு வேண்டினார். அத்துடன் கோவை பிரபந்தம் ஒன்றும் பாட வேண்டினார். மணிவாசகர் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பாட, அந்தணர் அவற்றை எழுதி முடித்து ஏட்டுடன் மறைந்தார். இவ்வேட்டினை தில்லை அந்தணர் கோயிற்படியில் கண்டெடுக்க, அதன் முடிவில் 'வாதவூரன் விளம்பிட அம்பலவன் எதுதியது" என்று வரையப்படும் 'அழகிய சிற்றம்பலமுடையான்" என மகாதேவர் ஒப்பமிட்டும் நிறைவு செய்யப்பட்டிருந்தது திருவாசகத்தின் சிறப்பின் அடிப்படை இதுவே. திருவாசகம் சொற்சுவை, பொருட்சுவை என்பன ஒழுங்கமைந்த பக்தி நூலாகும். இந்த பக்தி பாடல்களை ஆலயம், பாடசாலை, வீடு, பொதுநிகழ்வுகள் என்பவற்றிலும் பக்தியோடு பாடி பயனடைவோம்.

எஸ். ஷிபேஷ்கர்
தரம் : 09B

## இயற்கையில் இறைவனைக் காண்போம்

மனிதன் இவ்வுலகில் தோன்றிய காலம் தொட்டு அவன் இயற்கைக்கும், இறைவனுக்கும் இடையிலான மிக நெருங்கிய தொடர்பினை உணர்ந்தவனாகவே வாழ்ந்து வருகின்றான். தான் வாழ்ந்து வரும் இயற்கை அவனுக்கு நன்மை செய்வதாகவும் வியப்பினை அளிப்பதாகவும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டது. சூறாவளி, வெள்ளப்பெருக்கு, பூகம்பம், எரிமலை, கடல்கோள், காட்டுத்தீ போன்றவற்றை இயற்கையின் சிற்றங்கள் என நம்பினான்.

பகல், இரவு மாறித் தோன்றுவது மாலைகள் பெருமளவு ஒரே மாரியிருப்பதும், ஆறுகள் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருப்பதும மரங்கள், செடி, கொடிகள், பயிர் வகைகள் முதலியன குறிப்பிட்ட காலப்பகுதியிலே தோன்றி வளர்ந்து, மலர்ந்து, காய்ந்து, கனிந்து பின் உலர்ந்து போவதும் இறைவனின் செயலாகும் என் மனிதன் நம்பினான். இவை போலவே மனிதனும் பிற உயிர்களும் குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே வாழ்ந்து மாய்வதும் இறைவனின் செயல் என மனிதன் தற்போது வரை நம்புகின்றான். அவை இறைவனுக்கும், இயற்கைக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குகின்றது...!

வணக்கம்..!

எஸ். வருன்
தரம் : 9B

## திருமுறைகள்

திருமுறைகள் இறைவன் மீது சூடப்பெற்ற பக்திப் பனுவல்களாகும்.

தெய்வீக உணர்வுமிக்க, சமய ஒழுக்கத்தை பேணும் நோக்குடன் தொகுக்கப்பட்ட நூல்களின் தொகுதி திருமுறை எனலாம்.

திருமுறை பன்னிரெண்டு ஆகும்.

முதல் ஏழு திருமுறைகளும், தேவாரங்களும், திருவாசகமும், திருக்கோவையாரும், எட்டாம் திருமுறைகளாகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறைகள் ஆகும். திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். நாற்பது பிரபந்தங்கள் பதினோராம் திருமுறைகள் ஆகும், பெரியபுராணம் பன்னிரெண்டாம் திருமுறை ஆகும்.

திருநாவுக்கரசர் திருமுறைக்காட்டில் அடைக்கப்பட்டிருந்த கதவை திறக்க வைப்பதற்காக 'பண்ணிநேர் மொழி" என்னும் பதிகம் பாடினார்.

திறக்கப்பட்ட கதவை அடைக்க பாடினார் திருஞானசம்பந்தர்.

திருவாசம் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்டது.

திருவிசைப்பா திருமாளிகைதேவர் முதல் சேதிராயர் வரையுள்ள ஒன்பது அடியார்களால் பாடப்பட்டுள்ளது.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் பக்திச் சுவை சொட்டும் மெய்யடியார் வரலாறு கூறும் பெரு நூலாகும். இதனை சேக்கிழார் அருளியுள்ளார்.

எஸ். ஜெயப்பிரதீப்
தரம் : 10B

ST

# Shanko Textile


*Impoter's Wholesale Dealers*

No. 105, Keyzer Street, Colombo - 11,
Sri Lanka.

Tel : 011-2422671
011-2363339
Fax : 011-2337798

Indra Jewellery

Excusite - Elegant - Timeless



No. 05, Main Street,
Balangoda.

Tel : 045-2287247

# 12B Commerce

Abilash

Clifford

Paul

Niroshan

Lavanathan

Kirigan

Farhan

Vinshan

Donald

Ajaih

Ashik

Thilakshan

Anoj

Sathees

Raj Pradeep

Mirshad

Malan

DT

# Duco Traders (Pvt) Ltd

## General Merchant & Estate Suppliers





No. 90, Main Street, Bandarawela.

Tel : 057-2222759, Fax : 057-2223559

# Aravind Traders

## Grocerys & Grinding Mills








**No. 261, Main Street,**
**Bandarawela.**
**Tel : 057-2223574**

# Reliance
## Trading Company



No. 350A, Old Moor Street, Colombo - 12.

Tel : 011-2543435 / 2437675

Fax : 011-2385182

E-mail : sales@reliancetrading.net

# Victoria Agencies




**No.15, Bandarawela Road,**
**Badulla.**

**Tel : 055-2223588,**
**055-2222987**
**Fax : 055-4499466**

# Pillayar Trade Centre










**No. 15, Main Street,**
**Bandarawela.**

**Tel : 057-2222889**

# Mohideen Grinding Mill

## Grinders, Stockist & Suppliers



No. 42/1, Dharmawijaya Mawatha,
Bandarawela.

Tel : 057-2222442

## முத்தி

சைவ சமயத்தில் ஆன்மாக்கள் முத்திபெறக் காரணமான மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றின் வடிவாக சிவன் விளங்குகின்றான். அவற்றை முறையோடு வழிபடுவோர் உண்மை ஞானம் பெற்று முத்தி அடைவார் என்பதனை,

மூர்த்திதல தீர்த்த முறையாற் றொடங்கினர்க் கோர்
வார்த்தைசொலச் சற்றுகுருவும் வாய்க்கும் பராபரமே!

என்று தாயுமானவர் பாடுகின்றார் இவ்வகையில் பறக்க முத்தி தருவது திருவாரூர்த் தலம் என்றும், இறக்க முத்தி தருவது காசித்தலம் என்றும், தரிசிக்க முத்திதருவது திருவண்ணாமலை தலம் என்றும் கூறப்படுகிறது. இந்நம்பிக்கையே சைவ மக்களிடையே தலையாத்திரை செய்வதற்கு காரணமாக அமைந்தது.

இந்தியாவில் காசி, இராமேஸ்வரம், சிதம்பரம், மதுரை போன்ற திருத்தலங்கள், முருகனின் ஆறுபடை வீடுகள், இலங்கையில் கதிர்காமம் மற்றும் பாடல் பெற்ற திருத்தலங்கள் மட்டுமல்ல வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள ஆலயங்களுக்கும் நாம் தலயாத்திரை செய்து இறையருளை பெறலாம். தலயாத்திரை மேற்கொள்ளும்போது உடல், உளத் தூய்மையுடன் செல்ல வேண்டும். யாத்திரை செல்லும் காலத்தில் இறை சிந்தனையுடன் இறை நாமங்களை பாடிக்கொண்டு யாத்திரை மேற்கொள்வது சிறந்தது.

க. விதுர்ஷன்

Patronise Our Advertisers

எமது விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்

# கடவுள்

## இறைவனின் இரு நிலைகள்

தடத்த நிலை - குணங்குறி அடைந்த நிலை

சொரூப நிலை - குணங்குறி அற்ற நிலை

## இறைவனின் மூவகை திருமேனிகள்

அருவம் - சதாசிவம், நாதன்

உருவம் - சிவன், உருத்திரன், சக்தி

அருவுருவம் - சிவலிங்கம்

## இறைவனின் ஐந்தொழில்கள்

படைத்தல் - பிரம்மா

காத்தல் - விஷ்ணு

அழித்தல் - உருத்திரன்

மறைத்தல் - மகேஸ்வரன்

அருளல் - சதாசிவம்

## இறைவனின் எண்குணங்கள்

முற்றுமுணர்தல்

தூய உடம்பினராதல்

தன்வயத்தனாதல்

இயற்கை உணர்வினராதல்

இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல்

பேரருள் உடைமை

வரம்பில்லின்பம் உடைமை

வரம்பில்லாற்றல் உடைமை

'அகர உயிர்ப்போல் அறிவாகி எங்கும்

நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

ம. பிரனவகேஸ்

தரம் : 10B

## திருநீறு

முடிவில் யாவரும் ஒரு பிடி சாம்பல் என்ற உண்மையை திருநீறு உணர்த்துகின்றது. மேலும், தூய்மையையும், வெண்மையுமான திருநீறு போல் நமது உள்ளம் தூய்மையாகவும் ஞானஒளி உடையதுமாக இருத்தல் வேண்டும் என்பதை காட்டுகிறது.

பசுவின் (ஜீவனின்) மலம் (ஆணவம், கண்மம், மாயை, என்ற மும்மலங்கள்) தீயில் (ஞானத்தீயில்) நீறுகிறது என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகின்றது. இக்கருத்தை ஒட்டியே சம்பந்த பெருமான்,

'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செத்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயன் திருநீறே"

என்று பகர்ந்துள்ளார்.

'நீறில்லா நெற்றி பாழ்" என்பது பழமொழி

சாணம் அசுத்தங்களையும், நோய்க்கிருமிகளையும் அகற்றுவதை யாவரும் அறிவர். சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீறு தலையிலுள்ள நீர்க்கட்டு, தலைவலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்ற வல்லது. ஆதலால் காலை மாலைகளிலும், குளித்த பின்னரும், பூஜை, ஆலய வழிப்பாட்டிற்கு முன்னும், உணவு உண்பதற்கு முன்னும் விபூதி அணிதல் வேண்டும். வடக்கு முகமாகவோ, கிழக்குமுகமாகவோ நின்று பூமியில் சிந்தாதபடி விபூதியை எடுத்து அண்ணார்ந்து 'சிவ சிவ" என்று சொல்லி அணிதல் வேண்டும்.

பா. கோகுல்
தரம் : 11B

## விவேகானந்த வாக்கு

மன வலிமையே பலம், அதுவே வாழ்வு. பலவீனமே மரணம்.
என்னால் எதுவும் செய்ய முடியும் என்று சொல் அப்போது
பாம்பின் விஷம் கூட உன்னைக் கொல்லாது.

உழைப்பை பயன்படுத்துங்கள், அதிகாரம்,
பதவி போன்றவை தானாகவே தேடி வரும்.

எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றியில்லை.

எந்த வேலையை செய்கின்றோம் என்பதைக் காட்டிலும்,
எப்படி செய்கின்றோம் என்பதை வைத்தே எதையும் மதிப்பிட வேண்டும்.

அறிவுதான் சக்தி, அறிவை வளர்த்துக் கொள்வதுதான் மனித இனத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும்.

பகை, பொறாமை, கோபம் ஆகியவற்றை நீ வளர்த்துக்கொண்டால்
அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்துவிடும்.

த. திவாகர்
தரம் : 09B

## உருத்திராக்கம்

உருத்திராக்க மகிமை : உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களை பற்றி தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டபோது சிவபெருமானது மூன்று கண்களினதும் சிந்திய மணியே உருத்திராக்கம் என்பர். எனவே ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையை சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகின்றது! இதனை அணிதல் அவரது திருவருட் பேற்றிற்கு அறிகுறி பத்தினிப் பெண்களுக்கு திருமாங்கல்யம் எங்கனம் புனிதமான ஆபரணமாக. விளங்குகின்றதோ! அங்கனமே சிவனடியார்களுக்கு உருத்திராக்கம் போற்றி அணியவேண்டிய புனித சின்னமாகத் திகழ்கின்றது! உண்மையடியார்களை சைவ நெறியினின்றும் பிறழாமற் காக்கும் இரட்சையாகவும் இது விளங்குகின்றது.

உருத்திராக்க வகைகள் : ஒரு முகம் தொடக்கம் பதினாறு முகம் வரை கொண்ட மணிகள் உண்டு. ஒவ்வொருவகை மணிக்கும் ஒவ்வொரு அரிதேவரை கூறப்படுகின்றது. பொன்னிறம், கருநீலம், கபிலநிறம் ஆகிய நிறங்களில் உருத்திராக்க மணிகள் உள்ளன. ஆயின் ஒரே இன மணிகளாக, மாலைகளே அணியத்தகுந்தவை.

உருத்திராக்க தாரணம் : சந்தியாவந்தனம், சிவபூஜை, செபம் தேவதை, திருவாசக புராணம், புராண படலம், சிவாலய தரிசனம் போன்ற நிகழ்வுகள் செய்யுங் காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் அவசியமாகும். உறங்கும்போதும், மலசலம் கழிக்கும்போதும் உருத்திராக்கத்தை தரித்தலாகாது. ஆசாரமற்றோர்க்கு தரித்தலாகாது! சிகை, சிரம், காது, மார்பு, தோல்கள், கைகள் ஆகியவை உருத்திராக்கம் தரித்தற்குரிய இடங்களாகும். எத்தனை முகம் கொண்ட மணிகளை எவ்வெவ்விடங்களில் அணியலாம் என்றும் ஒவ்வொரு அங்கத்திலும் எத்தனை மணிகள் கொண்ட மாலைகள் அணியலாமென்றும் ஒவ்வோர் இடத்திலும் தரிக்கும் மாலை எந்த அளவினதாய் இருக்க வேண்டுமென்றும் விதிகள் உண்டு. செபம் செய்ய உபயோகிக்கும் மாலை 108 அல்லது 54 மணிகளை கொண்டதாக இருக்கும். செபமாலை மனதை இறைவனிடம் செலுத்த சிறந்த மாலையாகும்.

உருத்திராக்கத்தின் மறுபெயர்கள் : கன்டி - அக்கு - கண்மணி - சிவமணி - தாழ்வடம், திருஅடையாளம் போன்றவையாகும். உருத்திராக்கம் அணிந்தார் பெறும் பேற்றை சம்பந்தர் இவ்வாறு விளக்குகிறார்.

'நெக்கு ளார்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலை கொடங்கையில் அண்ணு வாத்
தக்க வாவை ராத்தகு விப்பது
நக்கண் நாம நமச்சிவாயவே"

'சிவம் செய்தல்" என்னும் சொல்லே மருங்கி 'செபஞ் செய்தல்" என வழங்குவதாகவும் கூறுவர். முறையாக உருத்திராக்கம் அணிந்து இறைவனிடம் அன்பு செலுத்துவோருக்கு உடல் நலமும், செல்வ வளமும், பெருவாழ்வும், இன்ப வாழ்வும் இப்பிறப்பில் பெற்று, மறுவுலகில் ஆண்டவன் அடியினை எய்தி மாறா இன்பத்தோடு மகிழ்வார்.

எம். அனோஜ்கண்ணா
தரம் : 12B

# உலகம் போற்றும் இந்து சமயம்

இந்திய உபகண்டத்தின் மிக பழைமை வாய்ந்த சமயம் இந்துசமயம் ஆகும். இந்து சமயம் பரந்த கண்ணோட்டமும், பண்பாடும் கொண்டது. இது கி.மு .15ம் நூற்றாண்டுக்கு முந்தியது. மற்றைய சமயங்களை போல இந்துசமயத்தை ஆரம்பித்தவர், ஆதியில் போதித்தவர் என எவரையும் குறிப்பிட்டு கூற முடியாது.

இந்தியா, இலங்கை, நேபாளம், வங்காளதேசம் மற்றும் உலக நாடுகள் பலவற்றில் இந்துக்கள் இன்று பரந்து வாழ்கின்றனர். ஏறக்குறைய 100 கோடி மக்கள் இந்து சமயத்தை பின்பற்றுகின்றனர்.

பக்தி நெறியும், கட்டுப்பாடுகளும், சித்தாந்தமும் கொண்ட சமயம் இந்து சமயம். ஆத்மா அழிவற்றது, அரிதான மானிடப் பிறவியில் தெய்வ வழிப்பாட்டுடன் அறவாழ்வு வாழ்வதன் மூலம் மறுபிறவித் தொடரிலிருந்து விடுப்பட்டு இறைவனுடன் இரண்டறக் கலத்தலே இந்து சமயத்தின் குறிக்கோளாகும். இந்த உயர்ந்த நிலையை மோட்சம் என்பர்.

இந்து சமயத்தில் பல தெய்வங்களை வழிபடுவர் ஆயினும் முழுமுதற் கடவுளாக சிவன், விஷ்ணு, பிரம்மாவைக் கொள்வர். பிரம்மாவைப் படைத்தல் தெய்வமாகவும், விஷ்ணுவை காக்கும் தெய்வமாகவும் சிவனை அழிக்கும் தெய்வமாகவும் இந்து சமயம் கூறும். சைவ சமயத்தவர் சிவனை, சிவலிங்க வடிவத்தில் வழிபடுவர். சிவனை நடன உருவத்தில் நடராஜர் எனப்பெயரிட்டு வழிபடுவர்.

இந்து மத்தின் முக்கிய நூல்கள் வேதங்களும் உபநிடதங்களும் ஆகும். வேதங்கள் இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன் உருவானவை. இவ்வேதங்கள் நான்கு வகைப்படும். அவையாவன இருக்கு, யசூர், சாமம், அதர்வம். இவற்றில் இருக்கு வேதம் காலத்தால் முந்தியது.

தமிழ் நாட்டில் கி.பி 6-7ம் நூற்றாண்டுகளில் ஏற்ப்பட்ட பக்தி காலக்கட்டத்தில் இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவ சமயம் வலுப்பெற்றது. இந்தியாவில் முகலாய சாம்ராஞ்சிய காலத்தில் இஸ்லாமும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவமும் பரப்பபட்டன. ஆயினும் இன்று 100 கோடி மக்களது சமயமாக உலகின் மூன்றாவது மிகப்பெரிய சமயமாக இந்து சமயம் நிலைப்பெற்றுள்ளது. ராம்மோகன்ராய், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்ற சமயப் பேரறிஞர்கள் தொடர்ந்து இந்து சமயத்தை பேணி வந்தனர்.

பல தெய்வங்கள், வளமிக்க புராணம், இதிகாச இலக்கியங்கள், விரிவான இந்து சமய சித்தாந்தம் ஆகியன இந்து சமயத்தை பாதுகாத்து வருகின்றன எனலாம்.

'ஆத்மா அழிவற்றது. கடமையை செய் பலனை எதிர்பார்க்காதே"
(கீதை)

எஸ். அபிலாஷ்
தரம் : 10B

## மாமாங்கேஸ்வரர் ஆலயம்

| | |
|---|---|
| தலம் : | மட்டு நகரின் வடக்கில் முகத்துவார வீதியில் இரண்டு மைல் தொலைவில் அமிர்தகழி என்னும் அழகிய கிராமத்தை அண்மித்து சிற்றூர் மாமாங்கம். இங்கு மாமாங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் பழைமை வாய்ந்ததாகும். |
| தீர்த்தம் : | இவ்வாலயத்திற்குரிய தீர்த்தக் குளம் சிறிதானாலும் இயற்கையழகும் மகிமையும் மிக்க அழகிய தீர்த்த சுனையாக காட்சியளிக்கின்றது. காசியிலிருந்து வந்த முனிவர் ஒருவர் கங்கை, யமுனை, காவேரி, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, தாமிரபரணி, சேது முதலிய ஒன்பது தீர்த்தங்களையும் தனது கமண்டலத்தில் கொணர்ந்து இக்குளத்தில் இட்டதால் இத்தீர்த்தம் இன்னும் சிறப்புறுகிறது. |
| பூசை விழாக்கள் : | இங்கு தினமும் மூன்று வேளை பூசைகள் இடம் பெறும். இங்கு இடம் பெறும் மகோற்சவங்களில் ஆடி, அமாவாசை உற்சவமே முக்கியமானது. ஆடி, அமாவாசைக்குப் பத்து நாட்கள் முன்னதாக கொடியேற்றமும், தொடர்ந்து திருவிழாக்களும் இடம்பெற்று அமாவாசை தீர்த்தத்துடன் மகோற்சவம் நிறைவடையும். |

திவ்யபிரதீப்
தரம் : 11B

## நினைவில் வைத்திருக்க

| | | |
|---|---|---|
| மிக நல்ல நாள் | : | இன்று |
| மிக பெரிய வெகுமதி | : | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | : | பணிவு |
| மிகவும் பெரிய தேவை | : | நம்பிக்கை |
| மிகவும் கொடிய நோய் | : | பேராசை |
| மிகவும் சுலபமானது | : | குற்றம் காணல் |
| கீழ்தரமான விடயம் | : | பொறாமை |
| நம்பகூடாதது | : | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | : | அதிக பேச்சு |
| செய்ய கூடாதது | : | நம்பிக்கை துரோகம் |
| செய்ய கூடியது | : | உதவி |
| விலக்க வேண்டியது | : | சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | : | உழைப்பு |
| நழுவவிட கூடாதது | : | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | : | நட்பு |
| மறக்க கூடாதது | : | நன்றி |

ஆர். கோகுல்
தரம் : 11B

# மெய்யடியார்களின் மாண்பு

சேக்கிழார் பாடிய பெரிய புராணம் பன்னிரெண்டாம் திருமுறையாக உள்ளது. திருத்தொண்டர் புராணம், ஆருடைய நம்பி புராணம் என்னும் பிற பெயர்களும் பெரிய புராணத்தைக் குறிக்கும். சொற்களால் செய்வர் பெரியார். சேயற்கரிய செய்த பெரியோர்களுக்கான தொண்டர்களின் வரலாற்றைக் கூறுதலாற் 'பெரிய புராணம்" என்னும் பெரியார் கொண்டு திருத்தொண்டர் புராணம் அழைப்பப்படும்.

சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியதற்கான காரணம் யாவரும் அறிந்ததே நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை முறைப்படி பாடுமுன் சேக்கிழார் சிவனடியார்களின் பெருமையையும், உயர்வையும் 'திருக்கூட்டச்சிறப்பு" என்னும் பகுதியிற் போற்றியுள்ளார். இப்பகுதியில் உள்ள மாசிலாதா எனும் பாடல் அடத்தூய்மை புகழ், பெறுமை என்பன புனிதர்களான அடியார்களின் சிறப்புக் கடியெனை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'மாசில்லாத மணித்திகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தெசினாவெத் திசையும் விளக்கினா
பேச வொண்ணா பெருமை பிறங்கினார்"

குற்றம் இல்லாத உருத்திராக்க மணி விளங்கும் உடம்பிற் பூசப்பட்ட திருநீறு போல், மனத்திலும் தூசிமையுடைய அவர்களின் உபதேசங்களாலும் வாழ்க்கையாலும் மக்களிடையே ஞான ஒளியைப் பரப்பிட 'இருளிலிருந்து ஒளியிட் செலுத்துவாய்" என்ற வேத மந்திரத்துக்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டினார். மேலும் இன்னுமொரு பாடல் சிவனடியார்களின் உறுதியாத சிவசிந்தனையையும் உறைப்பான பக்தியையும் உடையவர்கள் என அவர்களின் சிறப்பை கூறுகின்றது.

'பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகார் மலர்ந்தால் மலர்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றாள்
கோதிலாத குணப்பெறும் குன்றனார்"

ஐம்பூதங்களும் தத்தம் நிலையிநின்றி மாறிய போதும் உமாதேவியைப் பாகத்தில் உள்ளவரது தாமரை மலர் போன்ற திருப்படியை மறவாதவர்கள், பஞ்சாற்சரத்தை எப்போதும் ஓதுபவர்கள் தமது குற்றமற்ற குணங்களினால் பெரிய மலையை ஒத்தவர்கள் சிவனடியார்கள். இவற்றில் மூலம் மெய்யடியார்கள் மான்பு நமக்கு எளிதாக புலப்படுகின்றது.

ச. சூரியவர்மன்
2013 A/L Batch

## ஆன்மீக சிந்தனைகள்

01. மற்றவர் உனக்கு செய்த தீமையை நீ மறக்க வேண்டும். நீ மற்றவருக்கு செய்த நன்மையையும் மறக்க வேண்டும்.

02. சந்தோஷமும் சமாதானமும் எங்கோ வெளியில்லை. அவை உனக்குள்ளே உள்ளன.

03. எவன் ஒருவனிடம் அதிகளவு திருப்தி உள்ளதோ, அவனே இப்பூவுலகில் உயர்வான மனிதன்.

04. கடவுளை எங்கோ தேடாதே, அவர் உன்னிடத்திலே உள்ளார்.

05. நிகழ்காலம் என்பது இறந்தகாலத்தின் உற்ப்பத்தியே அதுவே எதிர்காலத்தின் வித்தாகவும் இருக்கும்.

06. அன்பின் விரிவே வாழ்க்கை அன்பின் சுருக்கமே மரணம்.

07. எவன் ஒருவன் எல்லா உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டவனாக உள்ளானோ அவனே கடவுள்.

08. மனிதனின் மனதால் கற்பனை செய்த பயத்தின் வடிவமே துன்பமாகும்.

09. கடவுளை தியானிப்பதற்கு குறித்த நேரமும், இடமும் தேவையில்லை எங்கு எப்போது நம் மனம் விரும்புகிறதோ அக்கனமே கடவுளை தியானிக்கலாம்.

10. கல்வி வாழ்க்கைக்காகவே தவிர வாழ்வதற்காக அல்ல.

11. நாம் வாழ்வில் திரும்பி பெறுவது அனைத்தும் நாம் மற்றவர்களுக்கு செய்தவையே ஆகும்.

12. இவ்வாழ்வின் நல்ல விடயங்களை பெறுவதற்கு முதலில், நீ கொடுக்க வேண்டும்.

13. செல்வம் வாழ்க்கையில் வந்து செல்ல கூடியது. ஆனால் நீதி நெறி தவறாத நல்லொழுக்கம் வாழ்வில் வந்தால் மென்மேலும்

14. எவன் ஒருவன் சேவை செய்ய இயலாதவனோ, அவன் மனிதனே அல்ல, மிருகத்திற்கு சமனானவன்.

15. உண்மையான நண்பன் என்பவன் உன்னிடத்திலுள்ள திறமையை வெளிக்காட்ட பாடுபடுபவனே ஆகும்.

ச. தவயோகன்
2013 A/L Batch

# பிடிமானம்

பாதுகை இல்லாப் பாதங்களோடு
பச்சை புல்லில் நடக்க பிடிக்கும்.
பச்சை புல்லில் நுனியில் உறங்கும்
பனித்துளி தன்னை எடுக்க பிடிக்கும்.
நீலக்கடலின் ஓரம் நின்று
கால்கள் மட்டும் நனைக்க பிடிக்கும்.
கொட்டும் மழையை பார்த்துக்கொண்டே
சூடாய் தேநீர் குடிக்க பிடிக்கும்.
பௌர்ணமி நிலவை பார்த்துக்கொண்டே
பாயை விரித்து உறங்க பிடிக்கும்.
எழுந்தப் பின்னும் போர்வைக்குள்ளே,
நுழைந்து கொஞ்சம் உறங்க பிடிக்கும்.
தென்றல் காற்று சட்டைக்குள்ளே,
சில்மிஷம் செய்வது எனக்கு பிடிக்கும்.
நண்பர்கள் என்னை சுற்றியிருந்தால்
நரகம் கூட எனக்கு பிடிக்கும்.
பழக்கமில்லா பாவையர் சிந்தும்,
பாதிச் சிரிப்பு பரவசம் பிடிக்கும்.
நாளை என்னும் யோசனையில்லை,
இந்த நிமிஷம் எனக்கு பிடிக்கும்.
மெழுகுவர்த்தியின் மெல்லிய ஒளியில்,
உணர்வு பூர்வமான கவி எழுத பிடிக்கும்.
எனக்கு பிடித்ததே பிடிக்கும் என்ன
இதயங்களெல்லாம் எனக்கு பிடிக்கும்.

பு. துவாரகன்
தரம் : 10B

## தீட்சை

குரு மூர்த்தியானவர்கள் தம் சீடர்களுக்குத் தலத்தையும் ஞானத்தையும் அளிக்கும் முறையே தீட்சை எனக் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. 'அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை தருவது" தீட்சை எனப் பொருள்படும் 'தீட்சை என்பது" 'தீஷா" எனும் வடமொழிச் சொல்லிலிருந்து மருவியது. ஒருவர் தீட்சையைப் பெறுவதன் மூலம் சைவசமயத்தில் பிரவேசிப்பதற்கு அதன் வெவ்வேறு படிநிலைகளில் புகுவதற்கும் தகுதி வாய்ந்தவராக காணப்படுகின்றனர்.

<u>தீட்சை அளிக்கும் சிவாசாரியாரின் தகைமைகள்</u>

01. சமய தீட்சை
02. விசேட தீட்சை
03. நிர்வாண தீட்சை
04. ஆச்சாரிய அபிடேகம்

<u>தீட்சை வகைகள்</u>

தீட்சை ஆதார தீட்சை, நிராதார தீட்சை என இருவகைப்படும் இறைவன் வேறோர் ஆதாரத்தையும் வேண்டாது தானே தருவாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்கள் மட்டும் உடைய பிரளயாகருக்கு முத்தியளிக்கும் தீட்சை நிராதார தீட்சையாகும்.

இறைவன் ஞானாசிரியர் ஒருவர் ஊடாக ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடைய நம்போன்ற சகலருக்கும் அளிக்கும் தீட்சை ஆதாரதீட்சை எனப்படும்.

ச. பிரவனன்
தரம் : 11B

## வேதம்

சைவ சமய மரபில் வேத ஆகரங்கள் முக்கியத்துவமுடையன. அவற்றுள் வேதங்களை சைவத்தில் முதல் நூல்கள் என்பர். உயர்ந்த அறிவை கூறுவதால் வேதம் எனவும், மறைத்து நிற்கும் பரம் பொருளை விளக்கி நூல் என்பதால் அபௌருசேயம் எனவும், எழுதபடாமல் இருந்தமையினால் எழுதாக்கிளவி எனவும் அழைக்கப்பட்டன. வேதங்கள் இருக்கு, யசுர், சாரம், அதர்வனம், என நான்காக வகுக்கப்பட்டுள்ளன. இதனால் இவை நால்வேதம், நான்மறை, சதுர்வேதம் எனவும் அழைக்கப்படுகின்றன. இவ் நான்கு வேதங்களும் முறையே சதாசிவ மூர்த்தியின் தற்புருடன், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய நான்கு திருமுகங்களில் நின்றும் தோன்றின என்றும் அவை இறைவனால் வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், அத்திரி, பரத்துவாசர் முதலிய முனிவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவை என்று நம்பபடுகின்றது.

இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் எனும் நான்கு வேதங்களிலும் சங்கிதைகள், பிரமாணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என நான்கு பகுதிகள் உண்டு அவை முறையே பிரம்மச்சரியம், கிருகஸ்தம் வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்னும் வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் உள்ளவர்களுக்கு என கொள்ளப்படுகின்றது.

எஸ். கவினேஷன்
தரம் : 11B

# சேக்கிழார் சுவாமிகள்

சித்தத்தைச் சிவன்பால் கொண்ட சிவனடியார்களின் திவ்விய வரலாறுகளை பக்த்திச்சுவை நனி சொட்டச் சொட்ட பாடியருளியவர். சேக்கிழார் சுவாமிகள் கி.பி 12ம் நூற்றாண்டலவில் குன்றத்தூரில் உள்ள சேக்கிழார் குடியில் சேக்கிழார் அவதரித்தார் அருண் மொழித் தேவர் என்பது அவரது இயற்பெயராகும். அவரது பெற்றோர்களது விபரங்கள் அரியுமாறு இல்லை. பாலராவாயர் என்னும் சகோதரர் இருவரும் அவருக்கு இருந்தார்கள். அருண்மொழி தேவர் இளமையில் கல்வியிலும், கேள்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர். அதனால் குடி பெறுமை பெற்றது. அதன் காரணமாக குடிக்குரிய பெயராலேயே அவரை சேக்கிழார் என அழைத்தார்கள்.

சேக்கிழாரின் சிறப்புக்களை அறிந்த இரண்டாம் குலோத்துங்கர் சோழ மன்னன் (அநபாயன்) அவரைத் தனது முதலமைச்சராக்கி அவரின் ஆற்றல்களை பெறுமைப்படுத்தும் வகையில் உத்தமசோழபல்லவர் என்ற பட்டத்தினை வழங்கினான். சேக்கிழார் அரசப்பணியிலும் சமயப்ணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் சோழநாட்டில் காணப்படும் திருநாகேஸ்வரம் என்னும் ஆலயத்தின் மீது பக்தியுடையவர். இவ்வாலயத்திற்கு நடராஜர் சபையுடன் மண்டபத்தினை அமைத்துக் கொடுத்தவர். அத்துடன் தமது ஊராகிய குற்றத்தூரில் திருநாகேச்சரம் என்ற திருவாலயத்தினை அமைத்தவர் ஆவார்.

கே. கவின் கிருஷாந்த்.
தரம் : 09B

## இலட்சியத்தோடு இருங்கள்

எதுவும் உங்களால் முடியும் எந்த காரியத்தை தொடங்கினாலும் அது வெற்றிகரமாக நடந்து முடிந்து விடலாம். அல்லது முடிக்கவிடாமல் சிரமங்கள் தோன்றலாம். பிரச்சினைகளை எதிர்நோக்கலாம். பாதகமாக சூழ்நிலைகள் கூட உருவாகலாம். இதையெல்லாம் கண்டு ஒருவன் எப்போது சோர்வடைகிறான் என்றால் செய்கின்ற விடயத்தில் ஈடுபாடும், நம்பிக்கையும் இல்லாத போதுதான்.

'ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை"

என்கிறார் திருவள்ளுவர். அதாவது சோர்வில்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவனிருக்கும் இடத்திற்கு வழிக்கேட்டுக் கொண்டு போய் சேருமாம். அதே போல இலட்சியம் இல்லாத வாழ்க்கை எதற்கும் பயன்படாத எட்டிமரம் போன்றது. இளமை காலத்தை எப்படி பயன்படுத்துகிறோமோ அதை பொறுத்துத்தான் நம்முடைய எதிர்கால வளர்ச்சி அமைகிறது. பலவீனமான எண்ணங்களுக்கும், காட்சிகளுக்கும் உங்களுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் திறமையை பலியாக்கி விடாதீர்கள். வாழ்ந்து காட்டியவர்களின் வாழ்க்கை நமக்கு ஒரு பாடமாக அமைகிறது. நம்மால் முன்னேற முடியுமா? நாம் தான் ஏழ்மை ஒரு தடைக்கல்லாக இருந்ததில்லை இருப்பதும் இல்லை இருக்க போவதும் இல்லை. அப்படியே இருந்தாலும் அந்த தடைக்கல்லை நகர்த்திவிட்டு இலட்சியத்துடன் நடப்பதற்கு தன்னம்பிக்கையும், தகர்த்து விடா முயற்ச்சியையும் சகிப்பு தன்மையையும் வளர்த்து கொள்ளுங்கள்.

எல்லா காரியங்களுமே ஒரு இலக்கு நோக்கி அமையும் போதுதான் வெற்றி சாத்தியம் ஏணியின் படிகள் ஏறுமாறாக இருந்தால் கீழே விழுவது போல காரியங்கள் முறையான முன்னேற்றத்தின் படிக்கல்லாக அமையாவிட்டால். குழப்பமும் தோல்விகளும் சகஜமாகிவிடும். நாளை பிரதமராகி விடலாம் என்று காத்திருந்தால் மட்டும் போதுமா? அந்த தகுதிக்கு தயார்படுத்திக் கொள்ள வேண்டும். என்பது போல இலக்கு நோக்கிதான் இன்றைய வாழ்க்கை இருக்க வேண்டும். உழைத்தால் உயர முடியும். நல்வழி சென்றால் நாடாள முடியும். பணிபுரிந்தால் பாராட்டு பெறலாம். அறவழி சென்றால் அகிலம் போற்றும், சிரித்து வாழ்ந்தால் சிறப்பு பெறலாம்.

'அலட்சியமாக இருக்காதீர்கள்
இலட்சியத்தோடு இருங்கள்
வாழுங்கள்! வாழ்ந்து காட்டுங்கள்
எண்ணிய படியே எல்லாம் நடக்கும்"

ஆ. டில்சான்
2013 A/L Batch

## ஆகமங்கள்

ஆகமம் என்னும் வட சொல் வந்தடைதல் எனப்பொருள்படும். அவை சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களில் இருந்து தோன்றிய சுத்த வித்தியா தத்துவத்திலிருந்து சதாசிவனால் அனந்தருக்கும் அவரால் ஸ்ரீ கண்டருக்கும் அவரால் தேவர்களுக்கும் தேவர்களால் முனிவர்களுக்கும் பின் மானிடருக்கும் பரவியது என்பது சைவ மரபு.

இறைவனைக் கண்ணில் கண்டவர் யாரும் இல்லை. உலகம் முழுவதும் சர்வ வியாபியாக இருக்கும் ஆண்டவன் சிறப்பாக ஆலயங்களில் தம்மை வழிபடும் அடியார்களுக்கு அருள் பொழிவதற்காக கோயில்களில் எழுந்தருளியிருக்கும் சிறப்பினைப் எடுத்து கூறுபவை ஆகமங்கள்.

ஆகம முறையின் படி ஆலயத்துக்கு, உடலுக்கும் தொடர்பு உண்டு உடல் 96 விதமான தத்துவங்களை கொண்டது. அதே விதமாக ஆலயமும் 96 தத்துவங்களால் அமைக்கப்பட்டது.

ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிப்பாட்டு முறைகளையும் உரிய முறையில் விபரிக்கின்றன. இவை தவிர விக்கிரக அமைப்பு, வாகன அமைப்பு, தேர் அமைப்பு மற்றும் கோயிற் கிரியைகள் வழிப்பாட்டு முறைகள் பற்றியும் ஆகமம் விதந்துரைக்கின்றன.

கர்ப்பக்கிரகம் என்று அழைக்கப்படும் கருவறையில் விக்கிரகம் அமைக்கப்பட்டு அதற்கு பொருத்தமான இயந்திரம் கீழே ஸ்தாபிக்கப்பட்டு மேலும் விக்கிரக பிரமாணம், ஆலய பிரமாணம் இவையாவும் ஆகம விதிப்படி அமையவேண்டும். பின் கும்பாபிஷேகம் செய்த பின்னரே அந்த விக்கிரகத்தின் மூர்த்தி கரம் ஏற்படுகின்றது. என்று ஆகம நூல் குறிப்பிடப்படுவதால் வழிபடுவோர் திருவருளை பெறுவதற்கு சிறந்த இடமாக ஆலயம் அமைகின்றது. எனவே சைவத்தை பின்பற்றி ஆகமத்தை போற்றுவோமாக!

எஸ். சுபேஷ்கர்
தரம் : 09B

# ஏகாதசி விரதம்

மகாவிஷ்னுவை அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஏகாதசி விரதமும் ஒன்றாகும். மாதந்தோறும் வரும் வளர்பிறை, தேய்பிறை ஏகாதசி திதி (பரிஹோராம் நாள்) யில் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரதம் ஒரு வருடத்தில் இருபத்து நான்கு நாட்களில் வரும். அவற்றுள் மார்கழி வளர்பிறையில் வரும் ஏகாதசி சிறப்பு வாய்ந்தது. இதனை வைகுண்ட ஏகாதசி என்று அழைப்பர். வைகுண்ட ஏகாதசியில் சொர்க்கத்தின் வாசல் எவருக்கும் திறந்து இருக்கும். அன்று இறப்பவர்கள் எவ்வளவு பாவியாக இருந்தாலும் சொர்க்கத்திற்குச் செல்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு. அதனால் இவ்விரதம் வைகுண்ட சுவர்க்க வாயில் ஏகாதசி என வழங்கப்படும்.

இவ்விரததற்குறிய நியதிகள் பின்வருமாறு அமையும்

வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்ட்டிப்போர், மார்கழி வளர்பிறை ஏகாதசியில் ஆரம்பித்தல். முதல் நாள் தசமி திதியில் ஒரு பொழுது உணவுண்ணல், இத்தினத்தில் துளசிதீர்த்தம் மட்டும் இருந்துதல். இரவு முழுவதும் நித்திரை விழித்து வழிபடுதல், ஏகாதசிக்கு அடுத்த நாள் காலையில் தீர்த்தமாடி, மகாவிஷ்வை வழிபட்டு பின் பாரனணை செய்தல்.

வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டிப்பதால் ஏற்படும் பயன்கள்

வறுமை நீங்கும்  
செல்வம் பெறுகும்  
இலட்சுமி கடாட்சம் ஏற்படும்  
பாவங்கள் தீரும்  
பக்தி நீங்கும்  
பக்தி பெருகும்  
வைகுண்ட பேறு கிடைக்கும்

வீ. சரத் மோகன்  
தரம் : 11B

## மூதுரை

மூத்தவர்கள், பெரியோர்கள் கூறிய வார்த்தைகளே மூதுரையாகும். ஔவையார் அருளச்செய்த நூல்களுள் மூதுரையும் ஒன்றாகும். மூதுரையில் முப்பது செய்யுள்கள் அடங்கியுள்ளன. அவற்றில் ஒரு செய்யுளை பற்றி இங்கு நோக்குவோம்.

'நன்றி ஒருவதற்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டாம் - நின்று தளரா வளர்தெங்கு தாள் உண்ட நிரைத் தலையாலே! தான் தருதலால்"

பதவுரை :- நன்று - நிலைத்து, தளரா - வாடாமல், வளர் - வளர்ந்த, தெங்கு - தென்னை மரமானது, தாள் - அடிவேரால், உண்ட - ஏற்றுக்கொண்ட, நீரை - வெற்றுநீரிணை, தலையாலே - முடியாலே (உச்சியிற் சுமந்து) தருதலால் - (சுவை மிகுந்த இளநீராகக்) கொடுத்தலினால், ஒருவதற்கு நல்லவன் ஒருவனுக்கு, நன்றி - ஓர் உதவியை, என்று - எப்பொழுது, தருங்கோல் - திருப்பிச்செய்வானோ, என - என்பதற்காக, வேண்டா - நீ கவலைப்பட வேண்டாம்.

கருத்து :- நாம் தென்னைக்கு நீர் ஊற்றும்போது அது எமக்கு எப்போது இளநீரை தரும் என்று கருதுவதில்லை. அது விரைந்து என்பதை நாம் அறியோம். அது போல் நாம் ஒருவனுக்கு உதவி செய்தால் அதனால் அவன் நன்றாக வளம் பெறுவான், தக்க சமயத்தில் விரைந்து அதனால் அவன் உதவி செய்வான் எனவே நாம் பயன் கருதாமல் உரிய காலத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

ரிஷிதரன்

தரம் : 06B

## வாழ்க்கையில் தோல்வி என்றால்...?

தோல்வி என்றால்...
நீங்கள் எதையும் சாதிக்கவில்லை என்று அர்த்தமாகாது,
சில பாடங்களை படித்துள்ளீர்கள் என்றே அர்த்தம்.

தோல்வி என்றால்...
நீங்கள் அவமானப்பட்டதாக நினைக்க வேண்டாம்,
முயன்று பார்க்கும் துணிவு இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

தோல்வி என்றால்...
உங்களிடம் திறமை இல்லையென பொருளல்ல,
வேறு உத்திகளை கையாளவேண்டிய அவசியத்தை
உணர்ந்து விட்டீர்கள் எனப் பொருள்.

தோல்வி என்றால்...
வாழ்க்கையில் நாம் அனைத்தையும் இழந்து விட்டோம் என்பதல்ல,
எதிர்காலத்தில் சாதிக்கும் காரியத்திற்கு காலடிகளை
நிதானமாகவும், அவதானமாகவும் என உணர்த்துவதாகும்.

தோல்வி என்றால்...
கடவுள் உங்களை கைவிட்டார் என அர்த்தமாகாது.
உங்களுக்கு வேறு நல்ல எதிர்காலத்தை நிர்ணயம்
செய்கிறார் என்றே அர்த்தம்.

ஆகவே மனிதனுக்கு தோல்வி என்பது வெற்றியின் முதல்படி....!

டி. டிலோஷன்
தரம் : 11B

# Notes

நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்...

சிரமம் பாராது எமது அழைப்பினை ஏற்று விழாவை சிறப்பிக்க வந்த பிரதம விருந்தினர் திரு.எஸ்.கோபிநாத் அவர்களுக்கும்

எமது பாடசாலை தலைமை ஆசிரியரும் மன்ற காப்பாளருமான வண.செ.பி.நேசகுமார் அவர்களுக்கும்

இந்து கலாசார மன்றத்தின் பொறுப்பாசிரியர் க.கமல்ராஜ் அவர்களுக்கும்

மாணவர்களின் ஆக்கங்களையும், திறமைகளையும் சிறப்புற அரங்கேற்றி விழாவினை சிறப்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும்

மலருக்கு ஆக்கங்களை தந்து மெருகூட்டிய ஆசிரிய ஆசிரியைகளுக்கும்

விளம்பரங்களை தந்துதவிய அனைத்து நலன்விரும்பிகளுக்கும்

ஒலி, ஒளி அமைப்பு வழங்கிய நிறுவனத்தினருக்கும்

இம்மலரினை அழகுற வடிவமைத்து தந்த விஸ்னு கிறப்பிக்ஸ் நிறுவனத்திற்கும்

இவ்விதழினை அழகுற அச்சிட்டு தந்த W.A.S அச்சகத்தினருக்கும்


இரவு பகலாக விழி திறந்து இக்கனவை நனவாக்க பெரும்பாடுபட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், வகுப்பு மாணவர்களுக்கும்

ஊடக அனுசரனை வழங்கிய ஊடகங்களுக்கும்

தோல் கொடுத்து உதவிய தோழமைய நெஞ்சங்களுக்கும்,

நன்றிதனை நவில்கின்றோம் !!!

இந்து கலாசார மன்ற
செயற்குழு - 2012


Luxmi Distributors
ISUZU
No. 12, Haputale Road,
Bandarawela.
Tel : 057-2233824
Mobile : 077-6151534
E-mail : liuxmidistributors@gmail.com





**EXPRESS NEWSPAPERS (CEY) (PVT) LTD.**

*The future belongs to those who believe in the beauty of their dreams.*

- Eleanor Roosevelt -

185, Grandpass Road, Colombo 14, Sri Lanka.
Tel : 011 7322700, Fax : 011 2439987
E-mail : info@expressnewspapers.lk

Advertising : 0117 322733, 7 322734
Circulation : 0117 322781, 7 322783

www.virakesari.lk

W.A.S. Printers - Bandarawela